# தொண்டர் நாதன் புகழ்த் தொகை



திரு இரத்தினம் இராமநாதன் அவர்கள்
31.08.2006 அன்று அகவை அறுபதை எட்டியதை முன்னிட்டு
08.10.2006 அன்று நடைபெற்ற பாராட்டுவிழாவில் வெளியிடப்பட்ட

## சிறப்பு மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண நாள்
அன்று
09-05-1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதனுடைய பெற்றோரும் திருமதி இராமநாதனின் பெற்றோரும் (அமரர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதன் தம்பதிகளின் திருமண நாள் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதனின் தாய்வழிப் பேரனார் 103 வயது வரை வாழ்ந்த
அமரர் திரு. வ.சிதம்பரப்பிள்ளை அவர்கள்



இராமநாதனின் தந்தை வழி பேத்தியார் திருமதி பார்வதிப்பிள்ளை வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியர் ஆலய மகாகும்பாபிஷேகத்தின் போது சிவஸ்ரீ காளிதாஸ் சிவாசாரியாருடன்



பன்னாலை ஸ்ரீ ஞானவைரவர்
இராமநாதரின் குலதெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க தொண்டர் அணி உறுப்பினர்களுடன் (1969)



கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க விழாவில் அமரார்கள் முன்னாள் நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம், க. பாலசுப்பிரமணியம் மற்றும் வ. சி. செல்லையாவுடன் (1969)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்கத்தின் வெள்ளிவிழாவின்போது



சைவ முன்னேற்றச் சங்க வெள்ளி விழாவில்
சேக்கிழார் அடிப்பொடி ரி. என் இராமசந்திரன் அவர்களால் கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியர் விபூதிப்பிரசாதம் வழங்கல்



ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு
எழுந்தருளியபோது அவருக்குப் பாதபூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தெல்லிப்பளை பன்னாலை
# மயிலையம்பதி ஞானவைரவர் ஆலய திருப்பணிச் சபை

## மணி விழா ஆசிச்செய்தி

சைவத்திற்கும் தமிழிற்கும் அரும்பணியாற்றிவரும் திரு. வ.இ.இராநமாதன் அவர்களின் மணிவிழா எதிர்வரும் 08-10-2006 அன்று இலண்டனில் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி. பன்னாலை ஆனந்த இல்லத்தில் சயம்புநாதர் வழித்தோன்றல்களில் ஒருவரான வ.இ.இராமநாதன் அவர்களை அறியாதவர்கள் இல்லை. ஈழத்திலும் சரி புலம்பெயர் பிரித்தானிய நாட்டிலும் புலம் பெயர் தமிழ் மக்களின் மனம் கவர்ந்த ஒரு சேவையாளன். எமது கிராமத்தில் திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனை சபை, மற்றும் பலவிதமான சமூகசீர்திருத்தங்களை ஏற்படுத்தி இளவயதிலேயே கற்றோரும், மற்றோரும் போற்றும் படி பல பணிகளைச் செய்தார். உத்தியோக நிமித்தம் கொழும்பு சென்றாலும் அங்கேயும் சைவ முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து பல அரிய செயல்களைச் செய்தார். அதன் பின்னர் இங்கிலாந்து தேசம் சென்றவர் அங்கேயும் அறப்பணிகளுக்கு ஏதுவாக சைவ முன்னேற்றச் சங்கம் அமைத்தார். அதன் மூலம் ஆற்றிவரும் சேவைகள் சொல்லில் அடங்காது.

பல மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தாலும் பன்னாலையும் அவரது குலதெய்வமான மயிலையம்பதி ஞானவைரவசுவாமியும் அவரின் சிந்தையில் நீங்காது இடம்பெற்றுள்ளது என்பது வெட்டவெளிச்சம்.
அவர் தனது குலதெய்வமான ஞானவைரவசுவாமி ஆலயத்தின் புனருத்தாருணப் பணிகளும், நித்திய பூசைகளும் குறைவின்றி நடைபெறவேண்டும் என்று அதற்குரியவகையில் செயற்பட்டுவருகின்றார்.

இலங்கையிலே முதன்முதலாக எமது பன்னாலைக் கிராமத்திலே சேக்கிழார் மாநாட்டை நடாத்திய பெருமைக்குரியவர் எமது அன்பிற்குரிய இராமநாதன். அப்பேற்றபட்ட சமூக, சமய தொண்டுகளை செய்துவரும் இராமநாதனும், அவருடைய பணிகளுக்கெல்லாம் துணையாக விளங்கும் விஜயலட்சுமி இராமநாதன் அவர்களும் பிள்ளைகளும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ தங்கள் குலதெய்வமான மயிலையம்பதியில் அருளாட்சி புரியும் ஸ்ரீ ஞானவைரவப்பெருமானைப் பிராத்தித்து வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு

**அ. இலங்கைநாயகம்** - செயலாளர்

**நா. நடராஜா** - பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 021-2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

20-09-2006

## மணிவிழா ஆசிச்செய்தி

திருவாளர் இரத்தினம் இராமநாதன் அவர்களுக்கு மணிவிழா எதிர்வரும் 08-10-2006 அன்று கொண்டாட இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

சைவத்தமிழிற்கு ஈழததில் மட்டுமல்லாது புலம் பெயர்நாட்டிலும் சைவசமயக் கருத்துணர்வினூடாக ச் சமூகசேவையைச் செய்து வருவதற்கு சைவ முன்னேற்றச் சங்கம் அமைத்து நால்வர் நெறியையும் நற்றமிழையும் பேணிக்காத்து வருவதை நாம் அறிவோம்.

நாம் இலண்டன் மாநகருக்கு எழுந்தருளிய போது சைவ முன்னேற்றச் சங்கத்தின்பணிகளை நாம் நேரில் பார்த்து மகிழ்வடைந்தோம்

இங்கும் யாழ்பாணத்திலும் பல அறப்பணிகளுக்கு உதவி வருவதை யாம் அறிவோம்.
தாங்களும் தங்கள் இல்லாளும் புதல்வர்களும் எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு வாழ எமது ஆசிகள்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி : 807995
கயிலைமாமுனிவர் வித்துவான்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்),
கோயமுத்தூர் - 641 010
தமிழ்நாடு



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Telephone : 807995
Kailai - Ma - Munivar - Vidwan
**Santhalinga Ramasamy Adigal**
PERURATHEENAM, PERUR (P.O.)
COIMBATORE - 641 010
**Tamilnadu**

*தலைவர் (President)*

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
(Thavathiru Santhalinga Adigalar Mutt)

உலக சைவப் பேரவை
(World Saiva Council)

தமிழகத் துறவியர் பேரவை
(Tamil Nadu Saints Forum)

சத்வித்யா சன்மார்க்க சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக்கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science & Tamil College Khazhakam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School)

ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி
(Gnanambikai Matriculation School)

தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ்ப் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar Tamil School)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Memorial Trust)

*உறுப்பினர் (Member)*

பாரதத் துறவியர் பேரவை
(Bharat Saints Forum)

தமிழ்நாடு இந்து சமயஅறநிலையத்துறை ஆலோசனைக் குழு
(Tamil Nadu Temple Advisory Committee)

தமிழகப் புலவர் குழு
(Thamizhaga Pulavar Kuzhu)

நாள்: 21.8.2006

பெறுதல்

திருசதாசிவம் அனந்ததியாகர் அவர்கள்,
'தமிகை' 151 லான்வுட் கார்டன்ஸ்,
கிளே ஹால், இபோர்டு,
எஸ்எக்ஸ், ஐஜி5 0இஜி,
இங்கிலாந்து-0044 20 8924 84 92

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக.

**வாழ்த்து**

1 திருமுறை வாழ்வால் தெய்வ சிந்தனை தெளிந்த தோற்றம்
பொருந்திய இரத்தின இராமநாதனின் பொறுப்பால் அன்பால்
அருள்நெறிச் சைவ முன்னேற்றத்திற்கமைந்த சங்கம்
பெருமைசேர் கலசமாகும் இதழ் தரும் பெரியோர் வாழி.

2 உலகினில் சைவச் சீர்மை ஓங்கித் தரும் மாநாடு
இலகுமெய்கண்டார் தினம் இணைந்த நற்பணிசெய்தொண்டர்
நலமிகும் அறுபானாண்டு மணிவிழா நயந்தேயேற்றும்
பலர் போற்றும் இராமநாதன் பல்லாண்டு வாழி வாழி

3 கண்டங்கள்தோறும் சைவமாநாட்டில் கலந்து பண்பால்
தொண்டுசெய் இரத்தின இராமநாதனின் தூய வாழ்வு
தண்டமிழ் நெறியில் ஓங்கச் சைவ முன்னேற்ற சங்கம்
கண்டவர் இளையோர் பெண்கள் கருத்தினில் சிவம் வளர்த்தார்

4 அயல்மொழி ஆதிக்கத்தால் அருந்தமிழ் மரபை மாற்றும்
முயற்சியைத் தடுத்துக் கோயில் வழிபாட்டில் முதன்மை எய்த
நயமிகு இராமநாதன் பன்னிசை இளையோர் நாவில்
இயல்இசைத் தமிழ் வளர்த்து இனிது பல்லாண்டு வாழி.

திருமிகு சதாசிவம் அனந்ததியாகர் அவர்களுக்கு, தங்கள் மடல் கிடைத்தது, இரத்தினம் இராமநாதன் மணிவிழாவிற்கான வாழ்த்து இத்துடன் வருகிறது, தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளுங்கள். விழாச் சிறக்க சாந்தலிங்கப் பெருமான் தாள்மலர் நினைந்து வாழ்த்துகின்றோம்.

இத்துடன் அருட்திருநீறு இணைத்துள்ளோம், அணிந்திடுங்கள்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள,
[signature]
(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்)
பேரூராதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

பேணித்தொழுமவர் பொன்னும்காளம்பிறங்கருளால்
ஏணிப்ப நெறயிட்டுக்கொடுத்திமையோர் முடிமேல்
மாணிக்கமொத்து மரகதமே போன்று வயிரமன்னி
ஆணிக்கனகமு மொக்கு மையாற னடித்தாமே

-அப்பர்

முனைவர்: **ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்**

கட்டளை விசாரணை

தருமையாதீனம் ஸ்ரீ பஞ்சநதீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்

திருவையாறு-513 204

தொலைபேசி: 0091 4362 260332

தோடுலா மலர்கடுவித் தொழுதைமுமார்க்கண்டேயன்
வீடுநாளணுக்கிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான்சொல்லுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடு மேவினாரே -அப்பர்

அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்ற வாக்கிற்கேற்ப எண்ணரிய பிறவியில் மானிடப் பிறவி வாய்த்தது நல் தவத்தால் ஆகும். இம் மானிடப்பிறவியின் வயது 120 எனவும் அதற்குள் சனிக்கிரஹத்தின் சுழற்சிமுறைப் பயணம் நான்கு முறை எனவும் சோதிட நூல்கள் வரையறுத்துள்ளன.

120 வயதில் பாதி 60 வயது நிறைவு விழா. இதனை மணிவிழா எனக் கொண்டாடுவர். 70 வயதினை பீமரத சாந்தி எனவும், 80 வயதினை முத்துவிழா எனவும் 100 வயதினை சதாபிசேகம் எனவும் கொண்டாடுவது மரபு. பிறந்தநாள் அன்று ஆயுள் ஹோமம் செய்து அபிசேகம் செய்து கொள்வது இறைவழிபாடு நடாத்துவது, அதனையொட்டி கொடையளித்தல் முதலிய மரபுகள் பழைமையாக நடந்துள்ளன. இது அரசர்களும் கொண்டாடிய செய்தியினை நாண்மங்கலம் எனும் இலக்கண நூல் காட்டுவதாகும்.

இம் மணிவிழாவினை கொண்டாடும் நமது பாராட்டுதலுக்கும், அன்பிற்கும் உரிய திரு. இராமநாதன் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர். இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இலண்டன் மாநகரில் இருந்துகொண்டு சைவ முன்னேற்றச் சங்கம் கண்டு அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் சைவமும் தமிழும் தழைத்தோங்க பாடுபடும் பண்பாளர். நாங்கள் இலண்டன் மாநகருக்கு எழுந்தருளிய பொழுது நம்மை சைவ முன்னேற்றச் சங்கத்தில் வரவேற்றும் சுந்தரர் குருபூசைத் திருநாளில் வாழ்த்துரைக்கு ஏற்பாடு செய்தும் ஷேக்பியர் இல்லத்திற்கு நம்மை அழைத்துச்சென்றும் பலநாட்கள் நம்மோடு உடனிருந்து இவரது சகோதரர் திரு. பத்மநாதன் அவர்களும் திரு இராமநாதன் அவர்களும் அவர்தம் துணைவியார் திருமதி விஜயலட்சுமி இராமநாதன் அவர்களும் நிகழ்வுகளைச் செய்துகாட்டியதை மறக்கவியலாது.

திரு. இராமநாதன் அவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தின் வாயிலாக சிறார்களுக்கு பக்தியையும், சைவ உணர்ச்சியையும் ஊட்ட ஒல்லும் வகையால் உயர்வு சிந்திப்பவர்கள். குடிசெய்வார்கில்லைபருவம் மடிசெய்து மானங்கருதப் படும் என்ற வள்ளுவ வாக்கிற்கிணங்க அயராது உழைப்பவர். சமயத்தலைவர்களை மரபுவழி வரவேற்று உபசரிக்கும் பாங்குடையவர்கள். சிவபூமியாக திருமூலரால் போற்றப்பெறும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற ஏனைய நாடுகளிலெல்லாம் சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்க்கும் உத்தமசீலர்களில் ஒருவராகிய இராமநாதன் அவர்கள் அவர் தம் மணி விழா நினைவாக வெளிவரும் மலர் மணங்கமழவும், அவர் தம்குடும்பம் உற்றார் உறவினர்களும் நீடினிது வாழ செந்தமிழச் சொக்கநாதப்பெருமான் திருவடிகளையும் தருமையாதீன குருமணியின் குருவருளையும் சிந்தித்து வாழத்துகின்றோம்

**குமாரசுவாமித்தம்பிரான்**

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி 630 206
சிவகங்கை மாவட்டம்
✆ 04577 - 264227

நாள் : 25.09.2006

## வாழ்த்துரை

சைவ முன்னேற்ற சங்கப் பணிகளில் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றும் சைவத்திரு வ.இ.இராமநாதன் அவர்கள் மணிவிழாக் காண்கின்றார்!

வ.இ.இராமநாதன் தொண்டு அளவிடற்கு அரியது. ஆன்மா ஈடேற, திருவடிப்பேறு அடைந்தவர்களுக்கு சிவபுராணம் ஓதுவதைக் கட்டாயக் கடமையாக நிறைவேற்றுவதும், நீத்தார் கடன் ஆற்றும் தொண்டு உணர்வும் மெய்சிலிர்க்கவைக்கின்றன!

மெய் எல்லாம் வெண்ணீறு பூசும்
திருவெண்ணீற்று மேனியன்

ஆன்மாக்களின் குற்றங்களைச் சுட்டு எரிக்கத் தாம் நீறு பூசுகின்றான்!

குழந்தைகளின் நோய்க்கு தாய் மருந்து உண்பது போல, நம் குற்றம் குறைகள் களையவே இறைவன் நீறு பூசுகின்றான். தொண்டலால் உயிர்க்கு ஊதியமில்லை என்ற சைவநெறியை உயர்த்திப்பிடிக்கும் சைவத்தொண்டர் சைவத்திரு வ.இ.இராமநாதன் விஜயலெட்சுமி இராமநாதன் அவர்களின் இனிய இல்லறம் எல்லா வகையிலும் நல்லறமாய்ச் சிறக்க, எல்லாம் வல்ல இறைஅருளை விரும்பி வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்
(பொன்னம்பல அடிகளார்)

பெறுநர்
திரு. தம்பு அவர்கள்
இராமநாதனின் மணிவிழா மலர்க்குழு
லண்டன்

★ திருக்குறளே நமது பொதுமறை ★ திருமுறைகளே நமது மறை ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ மாத்திரே நமக
ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம். ஐரோப்பா
Hindu Shankarar Sri Kamadchi Ampal Tempel e.V. (Europa)
Postfach: 6038, 59026 Hamm. Germany.
Telefon: 0 23 88 / 30 22 28 - Telefax: 0 23 88 / 30 22 24
E.Mail: info@kamadchi-ampal.de · Internet: http://www.kamadchi-ampal.de



## ஹம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா

ஸ்ரீவித்யா உபாஷக சிவாகம கலாரத்ன பிரதிஷ்டா கலாநிதி சிவாகம வித்யா பூஷண

### சிவ ஸ்ரீ இரேவணசித்த ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்

Hamm den:27.09.2006

## ஆசிச்செய்தி

லண்டன் சைவமுன்னேற்றச் சங்க ஸ்தாபகர் திரு. வைர. இரத்தின. இராமநாதன் அவர்களின் அறுபதாவது (60) வயதையொட்டி மணிவிழா கொண்டாடும் இவருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமைப்படுகிறேன்.

இவரின் சேவையை ஆய்வுசெய்யுங்கால் 1964 முதல் 1974 வரை கொழும்பு சைவமுனனேற்றச் சங்க முன்னால் கௌரவ பொதுப்பொருளாளராகவும் தொண்டரணியின் ஆரம்பகால செயலாளராகவும் கொழும்பு சிவசுப்பிரமணியர் தேவஸ்தான மணிக்கூட்டு கோபுர உபயகாரராகவும், மயிலை ஞானவைரவர் கோவில் கூட்டுப் பிரார்த்தனை முன்னால் கௌரவ செயளாளராகவும் இப்படி பலதுறைகளிலும் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட திரு. இராமநாதன் அவர்கள் 1977ல் பிருத்தானியாவில் சைவமுன்னேற்றச் சங்கமொன்றை ஸ்தாபித்து அதன் மூலமாக ஹிந்து சனாதன தர்மத்திற்கும் சைவசமயத்திற்கும் அளப்பெரும் சேவைசெய்து வருகிறார் என்பதை கேள்வியுற்ற போது எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தோம். இற்றைக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பாக இவருடைய சேவையை நாமே நேரில் பார்த்திருக்கின்றோம் நேரில் பேசக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது. இதேவேளையில் மதிப்பிற்குரிய திரு.இராமநாதன் அவர்களுக்கு 08.10.2006ல் இவருடைய 60 பதாவது வயதையொட்டி மாபெரும் மணிவிழாவொன்று கொண்டாடவிருப்பதை நாம் அறிந்தோம். ஆனால் இவ்விழாவில் நாம் நேரில் கலந்துகொள்ள முடியாத காரணத்தையொட்டி இவ்வாசிச்செய்தியை வழங்குகிறேன். வாழ்க இவர் தொண்டு வளர்க இவர் பணி நிலைத்தோங்குக புகழ். இம்மாபெரும் மனிதனுக்கு எல்லாம் வல்ல அம்பிகையினுடைய அருளும் குருவின் ஆசியும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்து நமது ஆசியையும் வழங்குகின்றேன்.

இப்படிக்கு
ஹம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய
ஆதீனகர்த்தா

Bankverbindung:
Sparkasse Hamm
Konto: 50 70 891  BLZ: 410 500 95
Konto: 24 20 54 45  BLZ: 410 500 95
Volksbank Hamm e.G
Konto: 51 42 30 46 00  BLZ: 410 60 120

Hausanschrift:-
Siegenbeckstraße 4-5
59071 Hamm
Germany

Sprechstunden:-
Taglich 14:00 - 16:00 Uhr und 20:00 - 21:00 Uhr
Ihr Gesprächspartner: Siva Sri V.A.S.Paskarakurukkal
Gottesdienste:
Täglich 8:00 Uhr, 12:00 Uhr und 18:00 Uhr
Dienstag und Freitag sind die Haupttage

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

# சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயம்

244/ 212, தம்புசெட்டித்தெரு, சென்னை - 600 001

அன்புள்ள திரு. சதாசிவம் ஆனந்த தியாகர் அவர்களுக்கு,

வணக்கம். திரு. ராமநாதன் ஐயா அவர்களின் மணி விழா செய்தி கேட்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

எங்கள் தந்தையார் திரு. சாம்பமூர்த்தி சிவாசார்யாருக்கு பல ஆண்டுகளாக மிக நெருக்கமானவரான திரு. ராமநாதன் ஐயா அவர்களுடன் நாங்கள் பழகும் வாய்ப்பு பெற்றோம்.

பழகுவதற்கு மிகவும் எளிமையானவரும், எடுத்த செயலை செவ்வனே செய்துமுடிக்கும் மனவலிமையுடையவரும், உதவி என்று தேடிவரும் அனைவருக்கும் அவர் தேவையறிந்து உதவி செய்பவருமான திரு. ராமநாதன் அவர்கள், எல்லாம் வல்ல சிவபெருமானின் பஞ்சாக்ஷரமந்திரத்தின் இரண்டாம் எழுத்தையும், ஆதிசக்தியின் ஆரம்பமான ஸ்ரீமன் நாராயணரின் அஷ்டாக்ஷரமந்திரத்தின் இரண்டாம் எழுத்தையும் தன்னுடைய பெயரின் ஆரம்பமாக, 'ராம' என்ற தாரக மந்திரத்தைத் தன் பெயரிலேயே கொண்ட ஒரு அற்புத மனிதர்.

எல்லாம் வல்ல எங்கள் அன்னை ஸ்ரீ காளிகாம்பாளின் பேரருளினால் அவரும் அவருடைய குடும்பமும் சுற்றத்தாரும், அனைத்து செளபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

சுவாமி சதாசிவோம் சிவாசார்யர்
தி. சா. காளிதாச சிவாசார்யர்
தி. சா. ஷண்முக சிவாசார்யர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாং

## *Sri Sambamurthy Sivacharyar Foundation*

*New No. 76, Old No. 96, Ramasamy Street, Chennai 600 001. INDIA*
*+91-44-25261320, adisaiva@gmail.com, www.sivacharya.org*

23 – 08 – 2006

Dear Sri. Sadasivam Ananda Thiyagar Avargal,

Vanakkam. I am happy to hear about the Shashtiabda poorthi, the 60th birthday celebrations of Sri. Ramanathan Avargal.

Sri. Ramanathan and my father, Sri. Sambamurthy Sivacharyar, have shared a special bond for over two decades. He has seen me grow up from a young age and likewise, I have had the privilege of knowing him and observing him at close quarters over these years.

Sri. Ramanathan as I have known him, is a master-orchestrator of plans, be it temple worship, kriyas, spiritual or social events, with splendid organization and execution skills. His drive and enthusiasm are only matched by his intense feeling for Saivam, Tamil and the people of Eezham. He founded the Saiva Munnetra Sangam, which is a forerunner in spreading Saivism in the West and especially, in educating the youngsters who are our future. He has championed the cause of the people of Eezham, with huge personal contribution and numerous fund-raisers. He has also helped in the establishment of countless new temples.

Yet, he has never sought the limelight or advertised his illustrious service in any way. He has chosen to stay in the background and do service for the sake of the service and not for any personal gain.

Sri. Ramanathan is also a unique human being who never shies away from upholding the truth in any circumstance. Be it a priest or a politician, he always points out both the good and the bad fearlessly. The backbone of his life and service have been his wife, who is an epitome of genuine care and gentleness, his like-minded brothers and his children, who have supported him in every way.

My sincere prayers to Sri. Kalikambal to bless him and his family with success in all their dharmic endeavours.

Sincerely,
T.S.Shanmugam
Shanmukha Sivacharyar (Satish)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்**
**කොළඹ සයිව මුන්නේට්ට සංගම්**
**COLOMBO SAIVA MUNNETTA SANGAM**
Bankers: BANK OF CEYLON (Metropolitan Branch) INDIAN OVERSEAS BANK

Regd / பதிவு } S. 258

101/ 70, KEW ROAD, COLOMBO - 2.

Branch Societies: United Kingdom / Peliyagoda / Chilaw.

......................2003

***எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு***

என்பது வள்ளுவன் வாக்கு. அந்த வகையில் நாமும் திரு. இராமநாதன் அவர்கள் செய்த சேவைகளை மறந்து விட முடியாது. ஒரு மனிதன் தான் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதை விட தான் வாழ்ந்த காலத்தில் என்ன செய்தான் என்பதே முக்கியமாகும். இதற்கு உதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் திரு. வ.இ.இராமநாதன் அவர்கள்.

இவர் யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழையிலுள்ள பன்னாலையில் பிறந்து வளர்ந்தாலும் இவரது சேவைகள் நாடாளாவிய ரீதியில் பரந்து பட்டவையாக விளங்கின. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆரம்பகாலத் தனாதிகாரியாக விளங்கிய இவர் பலராலும் பாராட்டும் படியாக எமது சங்கத்தின் தேவைகளைத் தக்க சமயங்களில் நிறைவேற்றியவர். கொழும்பிலுள்ள சைவ மக்களுக்காக சைவ முன்னேற்றச் சங்கத்திலிருந்துகொண்டு, விசேடமாக கொம்பனித்தெரு மக்களுக்கும், சிவசுப்பிரமணிய ஆலயத்திற்கும் அளப்பரிய சேவைகள் செய்து இறை ஆசியையும், மக்கள் அன்பையும் தனதாக்கிக் கொண்டவர். சைவ முன்னேற்றச் சங்கத்தையும், சிவசுப்பிரமணிய ஆலயத்தையும் இரு கண்களாகப் பேணி தொண்டு செய்பவர் திரு. வ.இ இராநாதன் என்றால் மிகையாகாது.

லண்டன் மாநகரிலே குடியேறி, சைவத்தை அங்கும் வளர்க்க வேண்டும் என்ற அவாவுடன் பிரித்தனிய சைவ முன்னேற்றச் சங்கத்தை ஸ்தாபித்த பெருமைக்குரியவர். இவரது இச் செயல் லண்டன் மக்களால் மட்டுமன்றி தமிழ் மக்களாலேயே மறக்க முடியாத அளவுடைய அரும்பெரும் சேவை ஆகும்.
எமது ஆலயத்தின் தேவையறிந்து ஒரு மணிக் கூட்டுக்கோபுரத்தை நிறுவி காலத்தாலும் மறக்கமுடியாத ஒரு வள்ளலாக விளங்குகின்றார். வலது கை கொடுக்கும் போது இடது கைக்கு தெரியாதவாறு விளம்பரங்கள் எதுவுமின்றி வறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும் சைவசமய மக்களுக்கும் சமய மனப்பான்மையுடன், எமது தேவைகளை நாம் கேளாமலேயே பூர்த்தி செய்யும் சிறப்புக்குரியவர்.

இவ்வாறாக இவரது பெருமைகள் வானளாவிய ரீதியில் வளர்ந்து செல்கின்றமையால், அவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். தோன்றிற் புகழோடு தோன்றுக என்பது போல இவர் புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.
அகவை அறுபதில் காலடி எடுத்து வைத்து மணிவிழாக் கொண்டாடும் இவ் வேளையில் இவரது நூற்றாண்டு விழாவையும் நாம் கொண்டாட வேண்டும் என்று எல்லாம் வல்ல கொம்பனித்தெருவில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்

*மேன்மைகொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்.*

**கா. தில்லைநாதன்**
**தலைவர்**
**சைவ முன்னேற்றச் சங்கம்**
**கொழும்பு**

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
Love is God

## ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
## Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple

*Sivasri K. Naguleswara Kurukkal*
GOVERNING AUTHORITY & CHIEF PRIEST
Naguleswaram, Keerimalai,
Kankesanthurai, Sri Lanka.

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா



அகவை அறுபது காணும்

# சமய, சமூகத் தொண்டர் திரு. இரத்தினம் இராமநாதன்

## ஆசிச்செய்தி

அகவை அறுபது காணும் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் பிறந்த மண்ணைத் துறந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் கடந்த மூன்று தசாப்தங்களாக வாழ்ந்து வருகிறார். 'விளையும் பயிரை முளையிலேயே தெரியும்' என்ற முதுமொழிக்கு அமைய சிறுபராயத்திலேயே அவரிடம் சமயப்பற்று, தமிழ்ப் பற்று, சமூகப் பற்று என்பவை நிரம்பிக் காணப்பட்டதை நான் அறிவேன். புலம்பெயர் வாழ்விலும் இவர் தமது வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வருவது பாராட்டத்தக்க விடயமாகும். பிரித்தானியாவில் சைவமுன்னேற்றச் சங்கம் அமைத்து இவர் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். ஆறுமுக நாவலர் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட இவர், தற்போது நாவலர் பெருமானுக்கு பிரித்தானியாவில் சிலையெழுப்ப ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். உலகச் சைவ மகாநாடுகளில் பங்குபற்றி எமது நாட்டிற்குப் பெருமை சேர்த்தும் வருகிறார்.

பரம்பரைபரம்பரையாக இவரது மூதாதையர்களும் இவரும் தமது குலதெய்வமான கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவர்கள். நகுலேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தில் பத்தாம் திருவிழாவினை நடாத்தி வருபவர்கள்.

கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் அருளால் ஆத்ம பலமும் நீண்ட ஆயுளும் பெற்று திரு இ. இராமநாதன் அவர்கள் தொடர்ந்தும் நமது மக்களுக்கு பணியாற்ற வேண்டுமென ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

சுபமஸ்த்து!

**K. Naguleswara Kurukkal**
**Keerimalai**
**03-10-2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
"சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமுகசேவை"
**Saiva Munnetta Sangam (UK)**
*"Community Service Through Hindu Concern"*
**2 Salisbury Road, Manor Park, London E12 6AB.**
**Tel / fax: 020 8514 4732 Fax: 01268 561805**
*WWW.SMSUK.ORG.UK*

Registered Charity No: 292085

*Vice Patron*
Dr. (Mrs) Indra.Siva -yoham

29th Year Management Committee

*President & Trustee*
Mr. S. Balasingham
020 8470 1818

*Vice President & Trustee*
Mr. V. C. Vamanananthan
0208 220 3810

*General Secretary & Trustee*
Mr. S. Anandathiyagar
020 8924 8492

*Treasurer & Trustee*
Mr. W. Nagaratnam
020 8550 2739

*Trustees*

Mr.V.R. Loganathan
Dr.N.Navaneetharajah
Mr. S. R. Pasupathy
Mr. V. R. Ramanathan
Mr. C. Sithamparapillai

*Building Project Secretary*
Mr. G. Parameswaran

*Examination Secretary*
Mr. K. Sivagurunathapillai

*Membership Secretary*
Mr. T. Kanagasabai

*Publication Secretary*
Mr. S. Thamboo

*Religious Secretary*
Mr. T.Rabindramohan

*Social Service Secretary*
Mr.R.Nadarajah

*School Secretary*
Mrs. K. Jegendrabos

*Assistant Treasurers*
Mrs. P. Uthamakunan
Mr. N. Sivarasan

*Committee Members*

Mrs.S.Atheesan
Mr. S. Atputhananthan
Mrs. V. Kanagenthiran
Mr.V.Loganathan
Mr.K.Mageswaran
Mr. M. Ravindradas
Mr. V. Sellathurai

# வான் உயர்ந்த சிறப்பு

*மணிவிழா மலர் "தொண்டர் நாதன் புகழ்த் தொகை" படிக்கும் அன்பர்களுக்கு வணக்கம்.*

இந்த மலரில் இடம் பெறுகின்றன திரு. இராமநாதன் பற்றிய செய்திகளை விட வேறு எந்த புதுக்கருத்தை சைவ முன்னேற்றச் சங்கத்தன் சார்பில் நான் எழுத முடியும்? நாம் இவரை எவ்வாறு வாழ்த்தித் திருப்திப்பட முடியும்? இதுவே கேள்வியாக என்னை நெருடிக் கொண்டிருக்கின்றது.

சங்கத்தின் கடந்தகாலம், நிகழ்காலம், இனி அமையப்போகும் ஆண்டுகள் என முக்காலத்தினரும் இராமநாதனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். வேண்டும். சங்கம் மட்டுமன்றி தமிழுலகும், அவரின் உதவி பெற்ற சமுதாயமும் அவருடைய தொலை நோக்கையும், பிரதிபலன் எதிர்பாராமல் செய்யும் உதவிகளையும் எண்ணிப்பார்த்து அவரை வாழ்த்தும் இவ்வேளையில் சங்கத்தின் சார்பில் நானும் இணைந்து கொள்கின்றேன்.

"நன்றியும் நெல்லும் நல்ல நிலத்தில் தான் விளையும்" என்பார்கள். எனவே நாம் பானை கொதிக்கும் வரை மட்டும் நட்புப்பாராட்டும் இனமல்ல. வாயில் சோறு உள்ளவரைக்கும் தான் வார்த்தைகளால் இனிப்பாகப் பேசும் குணமுள்ளவர்கள் அல்ல. தொண்டு செய்த ஒருவரை, நல்ல நோக்கத்திற்கா வாழ்க்கையின் பெரும் பகுதியை செலவழித்த ஒருவரைத் தொடர்ந்தும் இவ்வழியே இயங்கும் ஒருவரைப் பாராட்ட முன்வந்துள்ளமை குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அதுவே மனித நேயமும் ஆகும்

இராமநாதன் தனக்குக் கிடைத்த வாழக்கைச் சந்தர்ப்பங்களை அறவழிகளுக்காக நெறிப்படுத்திக் கொண்டார். பலருக்கும் கிடைக்கின்ற வாய்ப்புகள் போன்று தான் அவருக்கும் கிடைத்தன, கிடைக்கின்றன. ஆனால் அச்சந்தர்ப்பங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு செயற்படுத்திக் கொண்டார் என்பதில் தான் ஒரு வித்தியாசத்தை நபன் அவரிடம் காண்கின்றேன்.

நான்கு பேர் அமர்ந்து சீட்டாடுகின்றார்கள். அவரவருக்கு விழும் சீட்டு உள்ளதே- அது "விதி" ! விழுந்த சீட்டை எப்படி ஒருவன் ஆடுகின்றான் என்பது தான் "மதி" என்கின்றார் டாக்டர் இராதாகிருஷ்ணன்

இந்த மதிக்கூர்மையை அவரில் காணலாம். நாமும் பின்பற்றலாம். "முயற்சி உன்னுடையது முடிவு என்னுடையது. நோக்கம் உன்னுடையது ஆக்கம் என்னுடையது" என்கின்றது கீதை. இராமநாதனின் நோக்கமும் முயற்சியும் சமய, மொழி, சமூக, குடும்பம் என எல்லாத் துறைகளிலும் நிறையவே பொருந்தியுள்ளதால் அவை இறைவனால் ஆசீர்வதிக்கப்படுகின்றன. உழைப்பை நம்புகின்றவர். சோம்பல் இல்லாதவர்.

"சோம்பல் தான் வாழ்க்கையின் இழிவு!
சோம்பல் தான் வாழ்க்கையின் எதிரி!
சோம்பல் தான் சொர்க்கத்திற்குத் தடை!
சோம்பல் தான் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை!" என்பதை உணர்ந்து செயற்படுபவர். பிறரிடமும் இதையே பெரிதும் எதிர்பார்க்கின்றவர். உழைப்பால் தாழ்ந்தவர் எவரும் இல்லை என்பதைப் படம் போட்டுக் காட்டுகின்றது இந்த மணிவிழா. அவருடைய உழைப்பு பணம் சேர்ப்பதுடன் மட்டும் நின்று விடவில்லை. ஏனைய துறைகளிலும் தேனீயைப் போல எறும்பைப் போல சுறுசுறுப்புடன் இயங்குவதே அவருடைய வெற்றிக்குக் காரணமாகும்.

"சத்தியத்தை உன் வீட்டுத் தலயணையில் வைத்திருந்தால்
தத்துவங்கள் காலடியில் தானாக வந்து நிற்கும்
செய்வதை நீ செய்து திறமையுடன் வாழ்ந்திருந்தால்
தெய்வமெலாம் கைகட்டி உனக்கும் சேவகம் செய்திருக்கும்
உன் செயல்திறனை ஆண்டிருக்கும் காத்திருக்கும்"
என்ற கவியரசு கண்ணதாசன் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

தன்னம்பிக்கை இல்லாத வாழ்க்கை
பூக்காத மரம்!
புளிக்காத தயிர்!
பூப்படையாத பெண்!
புதுப்பிக்காத வீடு!
பூஜிக்காத கோயில்!
பண்படுத்தாத நிலம் போன்றது.

இராமநாதன் அவர் செய்யும் காரியங்களிலும் அவர் எடுக்கும் திட்டங்களிலும் தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் முழுமையாக கொண்டு இயங்குபவர். மனிதன்- இவன் எத்தனை நுட்பமான படைப்பு? இந்தப் பிறவி அற்புதமானது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியமானது. மனிதவாழ்க்கை அனுபவங்களால் இமையமாகி விடமுடியும்.. அவனால் வாழும்போதே ஒரு வரலாற்றைத் தீட்டி சித்திரமாக அமைத்துக்கொள்ள முடியும். அவன் உரிமைகளின் கொள்கலம். மனிதன் உள்ள உணர்வுகளின் உற்பத்தி நிலையம். மனங்களின் இன்னிசை. தியாகங்களின் திருப்பு மையம். இத்தகைய இயல்புடைய மனிதர்கள் எத்தனை பேர் உள்ளனர்? இத்தன்மையுடைய எத்தனை பேரை எம் வாழ்நாளில் நாம் சந்தித்துள்ளோம்? உறவு கொண்டுள்ளோம்?

இதை நினைத்துப் பார்க்கும் போது மணிவிழாக் காணும் இராமநாதனின் மனிதத் தன்மையை எம்மால் எடை போட முடிகின்றது. மனிதன் வெறும் அறிவு மட்டும் உள்ளவனா? உறவுகளால் மட்டுமே பிணைக்கப்பட்டு இயங்குபவனா? அல்லது உள்ள உணர்சிகளால் தள்ளப்பட்டு செயல்படுவனா? இராமநாதன் இம் மூன்றையுமே தனது கல்விச் சொத்தாகக் கலையாகக் கொண்டு செயல்படும் ஒரு மனிதசக்தி.

"ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" எனும் திருக்குறளுக்கு ஒப்ப அவருக்குக் கிடைத்துள்ள புகழ் அவருடைய அறத்தால் சேர்ந்தது. இவ் அறத்தால் அவரின் உயிருக்குச் சிறப்பான சன்மானம் கிடைத்துள்ளது. அறத்தால் கிடைத்த புண்ணியத்தை விட சிறந்த ஊதியம் உயிருக்கு இல்லை என்பதைக் காட்டும் வாழ்வியலை நாம் போற்ற வேண்டும்.

உதவி செய்வதைப் பற்றி சொல்லும் அதே வேளை கெடுதல் செய்யாமல் இருப்பது பற்றியும் குறிப்பிட்டே ஆகவேண்டும். கெடுதல் செய்யாமல் இருப்பது மிக்க நல்ல குணம் அதனினும் சிறப்பு பிறருக்கு கெடுதல் நினைக்காமல் இருப்பது. இவ்வகையில் இராமநாதன் பிறருக்கு கெடுதல் நினைக்காத அடிப்படைக் குணமுள்ள மனிதர்.

ஒன்றை வெற்றியாக நிறைவேற்ற வேண்டும், சமூகத்திற்கு ஒரு திட்டம் நன்மை தரும் என்றால் அதனை செய்து முடிக்க வேண்டும் என்கின்ற துடிப்பிற்காக அவர் பிறரையும் தன் வழியில் இழுக்க முயற்சிக்கும் போது அவரின் எண்ணங்கள் சில வேளைகளில் தவறாக எடை போடவும் படுகின்றன. இதனால் பிறரின் மனம் நொந்தால் முதலில் மன்னிப்புக் கேட்பவர் இராமநாதனாகத்தான் இருப்பார் தன்னை விட வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்களிடமும் தயங்காமல் மன்னிப்புக் கேட்கும் உயர்ந்த குணமுள்ள இவரை நாம் போற்றவே வேண்டும். இதையே வள்ளலார்

"அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினும சாந்தனந் தன் மணம் மாறாது
புகைக்கினும் கார்அகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறு ஆகாது" எனும் திருவருட்பாவில் சொல்கின்றார்.

இராமநாதனை வாழ்த்திப் பாராட்டும் வேளை அவர் மனைவி விஜியைப் பாராட்டாமல் இருக்க முடியாது ஒரு நல்ல குடும்பம் வளமாக வாழ்வது ஆயிரம் அற்புதக் கோயில்களுக்கு நிகரானது. இறைவனின் உறையும் ஆயிரம் புனித இருப்பிடங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரானது. ஆயிரம் முறை காவிரியில் குளித்தற்கு நிகரானது. என்கின்ற தர்மம் இல்லறத்திற்குச் சிறப்பானது. அத்தகைய இல்லறம் ஒரு சிறந்த மனைவியால் தான் அமைகின்றது. அந்த மனைவி வாழ்க்கையில் பலவழிகளிலும் உதவி செய்கின்ற தோன்றாத் துணை. மறைமுக குரு. இருட்டில் கை கொடுக்கும் ஒளி வெள்ளம். மனைவியால்தான் மனிதனின் செயல் பூரணமாகின்றது பரிணமிக்கின்றது . வெற்றி பெறுகின்றது. இல்லறம் தழைக்கின்றது. குடும்பம் சிறக்கின்றது. பலர் பயன்பெறுகின்றார்.

மீண்டும் கவியரசு கண்ணதாசனை மேற்கோள் காட்டினால்

பக்திமிக்க பூஜை அறை காதலர்கள் பள்ளி அறை
சக்தியோடு நாயகனார் தவம்புரியும் மேரு மலை
அக்கரையும் இக்கரையும் அதன் நடுவே காவிரியும்
பக்குவமாய் ஓடுதல் போல் பயிலுகின்ற கல்வியறை
முற்றுமது காமசுகம் முளைக்கின்ற பூமியல்ல
மற்றுமொரு ஜீவனுக்கு வரவு சொல்ல வந்த இடம்
தம்பதிகள் உறவினிலே தாய் வயிற்றில் பிள்ளைவரும்
தாய் தகப்பன் குணம்போல் சேயக்குணமும் தவழ்ந்து வரும்
ஆதலில் ஒன்றையொன்று அனுசரித்துப் போவது தான்
காதலும் இன்பம் வரும் கண்மணிக்கும் நல்ல குணம்

என்பதற்கு ஏற்ற நல்ல குணமுடைய துணைவியாரையும் போற்றுவோமாக.

நல்லூழின் பயனாகக் கிடைத்த தொண்டர் இராமநாதன் அவர் மனைவி, மக்கள் இனி வரவிருக்கும் சந்ததியினரும் பல்லாண்டு பல்லாண்டு சிறப்பை ஆண்டு, செல்வத்தை ஆண்டு சுகத்தை ஆண்டு மேலும் புகழுடன் வாழ வேண்டும் என்று திருச்சீரலைவாய் அண்ணல் செந்தூர் முருகன் சேவடியை வணங்குகின்றேன்.

இராமநாதன் வளர்க்கும் சங்கம் ஒரு புனிதர் பேரவை. அவரால் எமது சைவ நெறி வளர அவரின் சேவை மேலும் தேவை என்றும் இதற்கு இறைவன் அவருக்கு மேலும் நிறைய வசதி, வாய்ப்பு, ஆர்வம் என்பன வழங்கி ஆசீர்வதிக் வேண்டும் என்றும் வாழத்துகின்றோம்.

"மதிவாணர் உடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெய்யும் நாயன்மார் தூயசொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே" - பெரியபுராணம்

இப்படிக்கு
ஆட்சிக்குழுவின் சார்பில்
**சதாசிவம் ஆனந்ததியாகர்**
கௌரவ பொதுச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shree Ghanapathy Temple

125 – 133 Effra Road, London SW19 8PU
Tel: +44 (0)20 8946 1140 / 8542 7482
www.ghanapathytemple.org.uk

It is with great pleasure that I give this message on behalf of the Shree Ghanapathy Temple for the 60th Birthday Celebrations of Mr. V.R. Ramanathan.

Rama Anna has had a long association with our temple from the time of it's Kumbhabishekam 25 years ago and has always been supportive of the temple and its activities. Taking on the responsibility of running the Temple, after my father-in-laws passing, was made so much easier, for us as a family, with the support of community leaders such as Rama Anna. Knowing that he was only a phone call away and available for advice, as well as practical help, was such a support and comfort to us, and we still seek his advice on many matters of religious traditions and spirituality.

My father-in-law, the late Mr. A.T.S. Ratnasingham, would often say that within our community there are a lot of talkers but few workers! A man of action himself, he always had great admiration and affection for Rama Anna because he is one of that rare breed of men who speak less but do more. What makes him stand apart from many others is that his work for the community is not to promote himself, but to really help others.

When he came to the U.K. in 1975, he struggled to make a home for himself and his family. Most people in his situation would have just put their heads down and devoted their time completely to establishing themselves and settling their family. However, Rama Anna was made from a different mould. Back then, without established Temples providing support and a focus, Rama Anna provided the support needed for that first generation of Tamils, through establishing the Saiva Munnetta Sangam UK. With a group of dedicated trustees and volunteers, he created an organisation to fulfil the spiritual, cultural and emotional needs of our community -an organisation that still continues to provide invaluable support and inspiration to our community today.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As a man of action, Rama Anna has the ability to inspire and has been a precious asset to the Tamil Saiva community here in the U.K. He has been an active supporter of the Federation of Saiva (Hindu) Temples UK. Whether it is his help for the annual Saiva Conferences or helping the temples to unify their calendar dates, he is there when he is needed, a quiet supportive presence to help solve problems.

What makes Rama Anna stand out in our community is that he is there to serve as an act of devotion to our beloved Lord. His tall frame makes him stand out in a crowd, but you never see him push himself to the front or use his position to promote himself. Whenever you see him in the front of functions or religious ceremonies, he is there not to get himself into photos but to help ensure that things run smoothly. He is always a man of action and these actions speak far louder than words. He is there to advise, help and comfort and many thousands of families will be forever grateful for the work that he and the Sangham have done to alleviate the heartache of losing loved ones and the help they have given with funeral services.

Despite a busy career, and with the loving support of his wife and two sons, Rama Anna has become an inspiration to so many of us. He shows us that service to humanity should be done as an act of devotion, with humility and quiet dedication. He shows us that helping others at the most difficult times in their lives is truly love in action. And he shows us that with absolute faith in our Lord, and with a strong will and determination, great things can be achieved. Today we celebrate the wonderful work that Rama Anna has done in the first 60 years of his life. We look forward to all that he plans to achieve in service to our community in the future. And we know that Lord Ghanapathy will continue to shower His choicest of blessings on this very special devotee, and his family, in the many years to come.

In humble service to our beloved Lord Ghanapathy,

**Dr. S. Maheshwaran.**
Co-ordinator


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum Muruga
**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**
ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508
*Email:admin@highgatehillmurugan.org* *Website:highgatehillmurugan.org*

BOARD OF TRUSTEES

**Chairman:**
Mr. K. Ranganathan

**Secretary:**
Mr.A.Vairavamoorthy

**Treasurer:**
Mr. K.Nithiananthan

Mr.K. Nagarajah
Dr. V. P. Narayana Rao
Mr. V. Sellathurai
Mr. S. H. SriKantha

ADVISORY COUNCIL:

**Chairman:**
Mr. K. Ranganathan

**Secretary:**
Mr. M. Perinpanathan

**Temple Manager:**

**BANKERS:**
Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India

**Solicitors:**
M/S Wimal & Co

## இரத்தினம்இராமநாதன் மணிவிழா குழுவினருக்கு

அன்புடையீர்!

ஒருவரது வாழ்க்கையில் 60 வயது பூர்த்தியாவது ஒரு முக்கிய கட்டமாக தொன்றுதொட்டுக் கருதப்படுகிறது. மனிதனின் வானப் பிரஸ்தகட்டம் ஆரம்பம் எனச் சொல்லாம். இந்த அடிப்படையில் தான் அறுபது வயது நிறைவு பெற்ற நட்சத்திர லக்கினத்தன்று சஷ்டியப்த பூர்த்தி இஷ்டகாம்யார்த்த தேவதைகளையெல்லாம் ஆவாகனம் செய்தும் அத்தம்பதியர்களுக்கு உலகில் உள்ள புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் யாவும் ஆவாகனம் செய்யப்பட்டு அபிஷேகம் செய்து புத்தாடைகள் அணிந்து ஸ்ரீ பார்வதி பரமேஸ்வர ஸ்வரூபமாக காட்சியளிக்கச் செய்கின்றனர். அத்தருணத்தில் அவர்கள் அருளாளர்களாக அளிக்கும் ஆசிகள் எல்லாம் நிறைவு பெறும் என்பது சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள்.

இவ்வகையான நிறைவுகள் உள்ள அறுபதாம் ஆண்டு மணிவிழா சைவத்திரு வயிரமுத்து இரத்தினம் இராமநாதனுக்கு நிகழ்வது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன். தான்தோன்றிய ஈழத்தில் தொடங்கிய சைவத்திருப்பணியை 1977 ஆம் ஆண்டு தொடங்கி இலண்டன் மாநகரிலும் ஏனைய பிற நாடுகளிலும் அப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவருவதை நாம் எல்லோரும் அறிவோம். பல சமய மாநாடுகளிலும் அவருடன் பங்குகொண்ட வாய்ப்பு எனக்கு உண் டென்றாலும் நான் அவருடன் பங்குகொண்ட டேர்பன் உலகசைவ மாநாடு இன்றும் மனதில் பசுமைபோல் நிலவுகின்றது.

தொடர்ந்து சைவ, சமூகப் பணியை மிகு சைவத்துறை விளங்க அரிய தொண்டாற்றி வரும் சைவ நன்மணியாம் மணிவிழாக்காணும் இப் பெருந்தகை, பெரும் தவஉள்ளங்கொண்டு எல்லா உயிரையும் தம் உயிரென உணர்ந்து நற்பணிபுரிந்து மேலும் வைரவிழாவினையும் கண்டு சிவசக்தி போல் விளங்கும் துணைவியாருடன் நெடிது வாழ எல்லாம் வல்ல எந்தை அருளாளன் செந்தமிழ்க் கடவுளாகிய உயர்வாசற்குன்று சிவசண்முகனை இறைஞ்சி வாழ்த்தும் அன்பன்

**கு. ரங்கனாதன்**
**உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்**
**அறங்காவலர் சபைத்தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

Registered Charity No: 271097
**78 Church Road, Manor Park, London E12 6AF**
Entrance Via Browning Road
**Tel: 020 8478 8433 • Fax : 020 8478 0407**
www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES:**
Mr.VE.Palaniappan
(Chairman)
Mr.R.V.Naidoo
Mr.G.Ramadass
Mrs.L.Sivajoti
Mr.S.KGanapathi

**PRESIDENT:**
Mr.S.Sampathkumar

**VICE PRESIDENTS:**
Mrs.A.Thambyrajah
Mr.V.Govindaraju

**SECRETARY:**
Mr.P.Dakshinamoorthy

**ASST. SECRETARY:**
Mr.R.Panneerselvam

**TREASURER:**
Mrs.P.Raguvaran

**ASST.TREASURER:**
Mr.R.C.A.Anpananthar

**EXECUTIVE COMMITTEE:**
Mr.S.Narashiman
Mrs.S.Krishnasamy
Mr.I.Muthu
Mrs.K.Kandasamy
Mr.V.Rajagopal
Mrs.R.Ramachandran
Mr.M.Thenappan
Mr.P.Sivathasan
Mr.R.Renganathan
Mr.S.Sundararaju
Mrs.S.Sekaran
Mr.M.Sivam
Mr.P.Uthayakumar
Mr.R.Sukumaran

மணிவிழா குழுவினர்
தணிகை இல்லம்
16 லாங்வுட் கார்டன்ஸ்
இல்போர்டு

20.09.2006

அன்புடையீர் வணக்கம்.

மனித வாழ்க்கை செம்மையாக அமைவதற்கு இறை நம்பிக்கையும் சமுதாய நல்லுணர்வும் மிக முக்கியமானதாகும். பலதரப்பட்ட நாகரிகங்கள் கலந்து மகிழும் இலண்டன் மாநகரில் சைவ சமயத்தையும் தமிழ்மொழி வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு மக்களுக்கு பெரும் தொண்டாற்றி வரும் சைவ முன்னேற்ற சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான திரு VR இராமநாதன் அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

சைவ முன்னேற்ற சங்கத்தின் கிளையை இலண்டனில் தொடங்கியும் இங்குள்ள ஆலயங்கள் மற்றும் சமூகநல ஸ்தாபனங்களோடு நல் உறவு கொண்டும் அவர் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றத்தக்கது. குறிப்பாக இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் மிகுந்த ஈடுபாட்டோடு சேவைகள் புரிவதை பெருமையோடு தெரிவிக்கின்ற அவரின் மன உணர்வுகளை மதித்து மகிழ்கின்றோம்.

60ம் ஆண்டு மணிவிழா கொண்டாடி மகிழ்கின்ற இவ்வேளையில் திரு இராமநாதன் தம்பதிகள் குடும்பம் மேலும் பல்லாண்டு வாழ்ந்து சேவைகளாற்றி சிறந்து மகிழ வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன்.

இங்ஙனம்

சீனி சம்பத்குமார்
தலைவர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில் சிவாசாரியர்கள் வாழ்த்துகின்றார்கள்

இவ்வுலக வாழ்க்கையில் ஆன்மாக்களுக்கு இறைவன் பெருங்கருணையோடு அருளுகின்ற பிறவிகளில் மனிதப்பிறவி மிகவும் மகத்தானது. அப்படிக் கிடைத்த மனிதப்பிறவியை பயனுள்ளதாகவும், பிறர்க்கு பயன்படக்கூடியதாயும் ஆக்குவது தான் ஒரு மனிதனின் பெரும் சாதனையாகும். தான் பிறந்த மண்ணுக்கும் தாய்மொழிக்கும் தனது சமயத்திற்கும் தொண்டாற்றுவதோடு தனது இன மேன்மைக்கும் பாடுபடுவதுதான் வாழ்க்கையின் லஷ்யம்.

இலங்கை யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பன்னாலையில் பிறந்து சிறு வயதிலேயே தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலும் பெரும் ஈடுபாடு கொண்டு பல பெரியோர்களிடமும், அறிஞர்களிடமும் சமய சமூக சம்பந்தமான மேன்மையான விஷயங்களைக் கற்றுத் தெளிந்து கொழும்பு கொம்பனித்தெரு
சிவசுப்பிரமணியர் கோயில், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றில் தொண்டாற்றியதோடு நல்ல அனுபவங்களைப் பெற்று மேல் படிப்புக்காக வந்த இலண்டன் மாநகரிலும் சைவ முன்னேற்றச் சங்கத்தை ஸ்தாபித்து வளர்த்து அதன் மூலம் தமிழுக்கும் சைவத்திற்கும் அரிய பல சேவைகளைச் செய்து, குழந்தைகளுக்கு கல்வியையும் இளைஞர்களுக்கு நல்ல அனுபவங்களையும், பெரியோர்களுக்கு மனமகிழ்ச்சி தருகின்ற கலை கலாசார நிகழ்ச்சிகளையும், ஆலயங்களுக்கு சிரமதானம், சமயத்தொண்டினையும் செய்து இன்று அறுபதாண்டு நிறைவு எய்தி மணிவிழா கண்டு மகிழ்கின்றனர்
திரு. திருமதி இராமநாதன் விஜயலட்சுமி தம்பதிகள். உலகின் எந்த பாகத்திலும் சமய சமூக கலாசார பெருநிகழ்ச்சிகள் நடந்தாலும் தவறாமல் கலந்து சிறப்பிக்கின்ற பெருந்தன்மையோடு, பிறர் அறியாமல் தாய் நாட்டில் ஆதரவற்றோருக்கு இவர் செய்கின்ற உதவிகள் ஏராளம். சுனாமி அனர்த்த நேரத்தில் 25 வயது இளைஞனைப்போல் ஓடிஓடி சேவையாற்றிய இவருக்கு அறுபது வயதா? நம்ப முடியவில்லை. இவரின் இல்லத்தரசியாகிய விஜயலட்சுமியோடு இணைந்து இவர் ஆற்றும் சமய சமூகத்தொண்டுகள் இன்னும் வளர்ந்து சிறந்திட வேண்டியும், இவர்கள் நோயற்ற வாழ்வும் நுடங்காஉடலும் நீடு வாழ் நாளும் நிறைந்த செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டியும் எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்

ஆசிகளுடன்
கயிலை இரா. நாகநாதசிவம் குருக்கள்
கயிலை. கி. சங்கரக்குருக்கள்
ம.க.சு. கல்யாணசுந்தரக்குருக்கள்
கணபதி சுந்தர குருக்கள்
சந்தான சிவம் குருக்கள்
கணேச குருக்கள்
கௌரி சங்கர குருக்கள்
ஜனார்த்தன சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SIVAYOGAM

(A Charity Registered in England & Wales- Reg. No: 1050398)
180-186 Upper Tooting Road. Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337
Email: info@sivayogam.co.uk Web: www.sivayogam.co.uk



## வ. இ. இராமநாதன்

பிரித்தானியாவில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் முனைப்புடன் எமது திருக்கோயில் ஆரம்பமானது முதல் வலுவான ஒத்துழைப்பை வழங்கி வருபவர்களில் திரு.வ.இ.இராமநாதன் முக்கியமான ஒருவர். உற்சவ நிறைவில் அமையும் வைரவர் மடை விழாவுக்கும் உபயகாரர். அவருக்கு மணி விழா என்னும்போது அவரது பொதுப்பணிக்கு மணிவிழா என்றே கருத தோன்றுகிறது.

அவருடைய அரிய பண்புகளால் அவர் எம் சமூகத்தில் உயர்ந்து நிற்கிறார். அமைதியான சுபாவம் எளிமையான நடைஉடை எங்கும் எந்த நற்பணிக்கும் ஒத்துழைப்பு எல்லோரோடும் நட்புறவான அணுகுமுறை, தாயகநேசம், பிறந்த பன்னாலை கிராமத்தையும் படித்த மகாஜனாக்கல்லூரியையும் மறக்காத பாங்கு, என்பன அவர் இயல்புகள்.

பிரித்தானியாவில் சைவ, தமிழ், பணிகளால் தன்னை அடையாளப்படுத்திக் கொண்வடவர் அவர். 27 ஆண்டுகளாக இயங்கும் பிரித்தானியா சைவ முன்னேற்றச்சங்கம் அவர் உழைப்பும் இணைந்த நிறுவனம்.

சமய, சமூக நிகழ்வுகளில் அவரை அதிகம் காணலாம். தம்பதிகளாக வருகைதருவார்கள்.

நீண்ட ஆயுளும், சுகநலன்களும் திரு.வ.இ.இராமநாதனுக்கும் அவர் குடும்பத்துக்கும் நிலைக்க அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் அருள்புரிவாளாக.

சிவசக்தியின் பணியில்

நா.சீவரத்தினம்

நாகேந்திரம் சீவரத்தினம்
தலைவர், அறங்காவலர் சபை

Patron : Dr K.Nadesalingam M.B.B.S.(Cey.).D.P.M.(Lond.),M.R.C.Psych.(U.K.)
Trustees : N Seevaratnam ACA, ACMA K.Singam B.Sc. M.Sc.,C.Eng. MIEE N.Karunanithy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SIVAYOGAM

(A Charity Registered in England & Wales- Reg. No: 1050398)
180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337
Email: info@sivayogam.co.uk Web: www.sivayogam.co.uk



"சைவ துரந்தர்" உயர் திரு.வ.இ. இராமநாதன் அவர்களின் 60ம் அகவை நிறைவை ஒட்டிய மணிவிழாவிற்கு இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப்பா

## "வாழிய நீ வ. இ .இரா!"

பாழ்நிலத்தை உழைப்பாலே பச்சை ஆக்கி
பார்வியர்க்க போர்வீரத் திறனைத்தேக்கி
வாழ்விடமாய் உலகமெலாம் நிலைத்து நீண்டு
வதிவிடத்தும் கலை, கல்வி, சமயம் பேணும்
யாழ்ப்பாண ஈழவரில் இலண்டன் காணும்
நம்மவராம் வ.இ.இரா மணிவிழாவை
வாழ்வினையில் வாழ்வாங்கு நிறைவு செய்த
வலிமைக்கு சிவயோகம் வாழ்த்துக் கூறும்.

சைவத்தை கொழும்பினிலும் இலண்டன் எங்கும்
சங்கத்தால் வளர்த்து நின்ற தொண்டைக் கண்டும்
"சைவத்தின் துரந்தர்" என அரசு போற்றி
தான் அளித்த பட்டம் நின் பெருமை சாற்றும்
வையத்தில் தமிழ் சைவம் கலை பண்பாடு
வளர்க்கின்ற பல சங்க பதவி கொண்டு
செய்யும் நின் சேவைக்கு விருதும் தந்து
சிறப்பளித்தோம் "முத்தமிழ் விழாவில்" அன்று.

அறுபதுபோல் அறுபதுகள் மேலும் கண்டு
ஆயிரமாய் பிறைகண்ட அருளும் கொண்டு,
பெறுக நலம் குடும்பசுகம் வலிமையாவும்,
பெருந்துணையாம் நீர்பெற்ற மனைவிதானும்
உறுசுற்றம் இருமகவோர் அனைத்துப் பேரும்
ஒருநாளும் தளர்வறியா மனமும் சீரும்
பெறுகஎன முத்துமாரி அம்மாள் பாதம்
பிரார்த்தித்து "சிவயோகம்" வாழ்த்துக் கூறும்.

ஆக்கம்: புலவர் ஜெயராமன்

நாகேந்திரம் சீவரத்தினம்
அறங்காவலர்கள் சார்பில்

Patron: Dr.K.Nadesalingam M.B.B.S.(Cey.).D.P.M.(Lond.).M.R.C.Psych.(U.K.)
Trustees: N.Seevaratnam ACA, ACMA. K.Singam B.Sc. M.Sc. C.Eng., MIEE. N.Karunanithy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL: 0208 - 810 0835*

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*

Email-id: ammancaling@yahoo.com

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr T Joganathan

**Vice Chairman**
Mrs S Sankaralingam

**Secretary**
Mrs Vijaya Bavan

**Joint Secretary**
Mr S Shanmuganathan

**Treasurer**
Mr S Ramachandran

**Asst Treasurer**
Mrs S Sundaralingam

**Elected Comm. Member**
Mrs Sarva Jaijam

**Committee Members**
Mr Balasingam
Mr Pathmanathan
Mr Senthuran

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr A Thevasagayam

**Secretary**
Mr R Kanesharajah

Mr S Premachandra
Mr T Thevarajan
Mr S Abayalingam
Dr V Paramanathan
Mr P Ramachandran
Mr S Sri Rangan
Mr P Theivendram

**Bankers**
Lloyds T S B
Barclays Bank Plc

**Solicitor**
Mrs G Kathirgamanathan
72 Chestnut Drive
Pinner, Middlesex
HA5 1LY

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
Hounslow, Middlesex
TW3 4AS.

உ

25/07/2006

*" கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்*
*பனிம லர்க்குழற் பாவை நல் லாரினும்*
*தனிமு டிகவித் தாளும் அரசினும்*
*இனியன் தன் அடைந் தார்க்கிடை மருதனே."*

\- அப்பர் சுவாமிகள்

இறைவன் அருளால் இந்த மனித உடல் நமக்குக் கிடைத்தது. இது பெறுதற்கரிய பெரும் பேறு. " *அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது* " என்றார் ஔவையார். மனிதராய்ப் பிறந்தாலும் சிலர் தான் மனிதராக வாழ்கிறார்கள். மனித உடலை வழங்கிய இறைவனுக்கு நன்றிக்கடப்பாட்டுடன் திருப்பணிகள் பலவும் செய்து தொண்டாற்றி வருவதும், இறைவன் இருக்கும் இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு அரும்பணியாற்றுவதும் தான் மனித வாழ்வின் அடையாளங்கள். இவற்றை நன்கு உணர்ந்து வாழ்பவர் நம் மதிப்பிற்குரிய பெரியவர் திரு.வ.இ.இராமநாதன் அவர்கள். இவர்கள் ஈழத்திலும் பிரித்தானியாவிலும் இன்னும் பல நாடுகளிலும் சைவத்திற்கும் தமிழிற்கும் அரிய பெரிய தொண்டாற்றி வருகிறார்கள். பிரித்தானியாவில் சைவ முன்னேற்றச் சங்கத்தைத் தோற்றுவித்தவரும் இவரே! வாழும் காலத்து மக்களுக்கும் வருங்காலத்துத் தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக விளங்கி வருகின்றார்கள். இந்த உலகம் யாரால் நிலைத்திருக்கிறது என்பதற்குச் சங்ககாலத்துப் புலவர் ஒருவர் விடை கூறினார். தமக்கென வாழாமல் பிறருக்கென எவர் ஒருவர் வாழ்கின்றாரோ அவரால் தான் இந்த உலகம் நிலைத்திருக்கின்றது என்று கூறினார். " *தமக்கென முயலா நோன்றாள்., பிறருக்கென வாழுநர் உண்மையானே.. உண்டாலம்ம இவ்வுலகம்* " என்று பாடுகின்றார். அத்தகைய நல்லோர்கள் சிலரில் இவரும் ஒருவர்.

இத்தகைய பெரியோரின் மணிவிழா நிகழ இருப்பதும் அதனை ஒட்டி ஒரு மலர் வெளியிட இருப்பதும் மகிழ்ச்சிக்குரியன. மணிவிழா நாயகரும் அவர்தம் குடும்பத்தினரும் எல்லா நலங்களும் பெற்று நீடு இனிது வாழவும், விழா மலர் கருத்துமணம் பரப்பிச் சிறக்கவும் எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மனை வணங்குகின்றேன்.

என்றும் அன்புள்ள.
தா. யோகநாதன்.
தலைவர் – ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்
ஈலிங், லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

பண்புடையார் பட்டுண்டு உலகு என உரைத்தார் திருவள்ளுவர். அக்குறளுக்குப் பொருத்தமாக இலண்டன் மாநகரில் வாழ்ந்து வருபவர் உயர்திரு. இரத்தினம் இராமநாதன் என்றால் அது மிகையாகாது. சைவ நெறி பாரம்பரியம் காத்த குடும்பத்தில் பிறந்த திரு.இராமநாதன் அவர்களை யான் நன்கு அறிவேன்.

இராமநாதன் அவர்களது தாய்தந்தையர் பெருந்தொண்டாற்றி பெருமையோடு வாழ்ந்தவர்கள். பன்னாலைக் கிராமத்தில் புகழ்பூத்த உயர் குடும்பமாக இவர்களது குடும்பம் திகழ்கின்றது. அடையாவாயிலாக அனைவரையும் வரவேற்கும் பண்பு இரத்தினம் தம்பதியினரிடம் இயல்பாகவே இருந்தது. அவர்களது அரும் புதல்வர்களில் ஒருவராகிய இராமநாதன் அவர்களை பல வருடங்களுக்கு முன்பே யான் நன்குஅறிவேன். கொழும்பில் யான் வாழ்ந்த காலத்தில் மிகவும் சிறப்புப்பெற்ற கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் அமரர் கந்தையா பாலசுப்பிரமணிம் அவர்களுக்கு பக்கத்துணையாக நின்றவர் இவர்.

இங்கிலாந்தில் வசிக்கத்தொடங்கிய போது தன் பிறவிப்பண்பாட்டை பெரிதும் காப்பாற்றுவதற்கு அங்கே சைவ முன்னேற்றச் சங்கத்தை ஆரம்பித்தபெருமை இவரைச் சாரும். யான் இங்கிலாந்துக்கு வருகை தந்திருந்தபோது என்னை வரவேற்று விழா எடுத்து மகிழ்வித்த பெருந்தகை இவர். எங்கள் துர்க்கா தேவி தேவஸ்தானத்தோடு மிகவும் நெருக்கமான குடும்பத்து மகள் விஜயலட்சுமி அவர்களைத் தனது இல்லற நாயகியாக இணைத்து எமது ஆலய அறப்பணிகளுக்கு இன்று வரை தொடர்ந்து பங்காற்றிவருபவர். இத்தகைய பெருமைமிக்க பண்பாளனுக்கு பிரித்தானிய வாழ் சைவ மக்கள் மணிவிழா எடுத்துக் கௌரவிப்பது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகின்றேன்.

ஸ்ரீமான் இராமநாதன் விஜயலட்சுமி தம்பதிகள் மேலும் நிறைந்த பேறுகள் பெற்று பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும் என எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## SRI RAJARAJESWARY AMMAN TEMPLE

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

Parasakthi Hindu Temple Trust
No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE
Tel: 020 8393 8147

**Trustees**

**Chairman**
R.Kunasingam

**Vice Chairman**
Dr.S.Sritharan

**Secretary**
Dr.S.Srirangalingham

**Treasurer**
Mrs.S.Vinayakamoorthy

**Bankers**
Natwest Bank
16 Wimbledon Hill Road
Wimbledon
London SW19 7ZD

**Solicitors**
Wimal & Co
727B London Road
Thornton Heath
Surrey CR7 6AU

ஓம்
சிவமயம்
பிள்ளையார் துணை

"அன்புடடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு" என்ற வள்ளுவர் வாக்கு உயர். திரு.இராமநாதன் அவர்களுக்கு சாலப் பொருந்தும். அவர் தனது அறுபதாவது அகவையில் 31-08-06 காலடி வைக்கிறார் என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அன்றைய தினத்தை மணிவிழாவாக கொண்டாட, ஒரு குழு அமைத்து, ஒரு சிறப்புமலரினை தயாரித்து வெளியிட்டு, அவரின் சேவையை பல்லோரும் அறிய வைக்க சைவமுன்னேற்ற சங்கம் முன்வந்ததை எண்ணி நாம் மிகவும் பெருமையடைகிறோம்.

உயர்.திரு.இராமநாதன் அவர்கள் இலங்கையில் உள்ள சைவமுன்னேற்றச் சங்கத்தில் பத்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்து சமூகப் பணிபுரிந்தவர். மேல் கல்வி கற்பதற்காக வந்த அவர், இங்கிலாந்து நாட்டில் சைவமுன்னேற்றச் சங்கத்தை நிறுவ உதவி அச்சங்கத்தின் பல பதவிகளை வகித்து கடந்த 29 வருடங்களாக, சைவத்திற்கும், தமிழ்க்கும் சேவைசெய்து வருகிறார். மத பேதமின்றி, இளையோர், முதியோர், உயந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு பார்க்காமல் புலம்பெயர்ந்து வாழும் எம்மினத்தவரின் தேவைகளை அறிந்து, ஓடியோடி தம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு நல்கி, சமூகசேவை புரிந்து வருகிறார்.

"உழைக்கும் கைகளே கௌரவம் - தினம்
உழைப்பவன் வாழ்க்கையே காவியம்!" என்ற சேவை மனப்பான்மையோடு தினம், தினம் உழைத்தார். அதனால் உலகில் பல பாகங்களிலும் வாழும் தமிழ் மக்கள் இராமநாதன் அவர்களை தம் உடன்பிறப்பாக நினைத்து கௌரவித்து பட்டங்களை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். "சைவ துரந்தரர், சிவநெறி காவலர், சிவநெறிச் செம்மல், தொண்டர் திலகம், சமூகசீலன் என்ற கௌரவ விருதுகளை பெற்ற இவரை இலண்டன் 9வது சைவ மகாநாடும் அழைத்து கௌரவித்ததும் சாலச் சிறந்ததொன்றே.

இன்று மணிவிழா காணும் மதிப்புக்குரிய இராமநாதன் அவர்களை எனக்கு பல காலமாக தெரியும். அவர்களின் குடும்பம் எங்கள் குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்கள்.

"நாணயம் நம்பிக்கை உழைப்பு –
நாளைய உலகத்தில் மதிப்பு
நாட்டையும் வீட்டையும் மதித்து – நடக்கும் உயர்.திரு இராமநாதன் அவர்கள், உடல் ஆரோக்கியத்துடன், வாழ்ந்து தன் சமூகசேவையை தொடர எல்லாம் வல்ல இராஜராஜேஸ்வரி அம்மாள் துணைபுரிய பிராத்திக்கின்றோம். வாழ்க நலமுடன்
ஆலய நிருவாக குழுவின் சார்பில் எமது பிறந்ததின வாழ்த்துக்கள்.

நன்றி

வணக்கம்

இ.குணசிங்கம்
தலைவர்
பாரசக்தி இந்துஆலய அறக்கட்டளை
ஸ்ரீ இராஜஇஜேஸ்வரி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God

# London Sivan Kovil Trust

## இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளை

Charity Registration No: 1051516
4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 0208 318 9844 Fax: 0208 318 2108

**MESSAGE FROM THE PRESIDENT**

It gives me great pleasure to send a message to the souvenir which is being published to honour Mr.Ratnam Ramanathan who will be entering his 60th birthday on 30th August 2006.

I have had the privilege and pleasure of associating with him from the time he was actively involved with the Colombo Saiva Munnetta Sangam far back in 1976 and also through Saiva Munneta Sangam U.K. where I am a Life-Member and he was a Trustee.

Mr.Ramanathan is a very keen social and religious worker. He has never counted the cost for what he has subscribed to religion, education in particular and humanity in general.

Mr.Ramanathan has served as the Treasure of the Saiva Munnetta Sangam-Colombo. His fervent devotion, great organisation ability and indefatigable energy have contributed in many ways for the betterment and progress of our Colombo Saiva Munnetta Sangam.

When he migrated to the United Kingdom, he with his determination and hard work established the Saiva Munnetta Sangam in United Kingdom, with the support of a few Hindus living in London.

Rightly from the beginning, with his dedication and commitments the Sangam has achieved many laurels. The Sangam conducts Sunday classes on Hinduism, Tamil Language and Music to the students living in London.
The sangam has also played a dominant role in arranging religious and social events to promote our culture. People from various walks of life have benefited by the valuable services rendered by Mr.Ramanathan.

It gives me immense pleasure to extend heartiest wishes to Mr.Ramanathan for long years of health life and continued success in his endeavours towards the society.

**Dr. S.Somasegaram**
**President-London Sivan Temple**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES, U.K.
for correspondence London Sivan Kovil
4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
email: onriam@hotmail.co.uk email: sivankovil@hotmail.co.uk

**Chairman**
Mr. R. Kaneshurajah
Tel: 020 561 0394

**Secretary**
Mr. K. V. Kanesamoorthy
Tel: 020 8318 0971

**Treasurer**
Mr. K. Ranganathan
Tel: 020 8998 1703

**Vice Chairman**
Dr. S. Somasegaram

**Assistant Secretary**
Dr. S. Maheswaran

**Assistant Treasurer**
Mr. K. Kunasingam

**Members**
Dr. S. Sritharan
Mr. A. Vairavamoorthy
Mr. S. Premachandran

**AFFILIATED TEMPLES**

**Shree Ghanapathy Temple**
125 - 133, Effra Road
Wimbledon
London SW19 8PU
020 8542 4141

**Sri Kanaga Thurkkai**
Amman Temple
5, Chaple Road
West Ealing
London W13 9AE
020 8810 0835

**Highgate Murugan Temple**
200A, Archway Road
Highgate Hill
London N6 5BA
Tel: 020 8348 9835

**Sri Rajeswary Amman**
Temple
Dell Lane
Stoneleigh
Surrey KT17 2NE
020 8393 8147

**London Sivan Kovil**
4a, Clarendon Rise
Lewisham
London SE13 5ES
Tel: 020 8318 9844

# நன்னெறிகாட்டும் நற்பண்பாளர்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.'.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

சைவமும் தமிழும் வளர்க்கும் சான்றோர்களில் சிவத்திரு வ.இ.இராமநாதன் அவர்களும் ஒருவர். இவர் சைவத்தில் தீராத பற்றுக்கொண்டு சைவ நெறிகளுக்கு ஏற்ப வாழ்ந்து வருவது போற்றுதற்குரியது. எளிமை அடக்கம், அயராத உழைப்பு, நன்னெறி காட்டும் நற்பண்பு, செயலில் ஆர்வம், அனைவருடனும் இனிமையாகப் பழகுதல் போன்ற சிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்டவர்.

இவரை முதல்முறையாக திரு. க. சிவகுருநாதபிள்ளை அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற சைவ முன்னேற்றச் சங்க பூசையில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பல காலங்களின் பின்னர் இவர் ஒரு மரணவீட்டில் இவர் செய்த தொண்டினைப் பார்த்து வியந்து போனேன். இவருடைய தொண்டு சிறப்பு மிக்கதாகவும், ஒருவருமே செய்யாததுமான தொண்டை அன்று செய்து கொண்டிருந்தார். தொண்டு என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். என் உள்ளத்தே குடி கொண்டார். ஆனாலும் எமக்குள் நெருக்கமோ, நட்போ இருக்கவில்லை. பின்னர் இவர் சிவன் கோயிலில் ஒரு அடியாராகவும், உபயகாரராகவும், நன்கொடையாளராகவும் விளங்குகின்றார். எமக்குள் மிக நெருக்கத்தை உண்டுபண்ணியது. நான் அவர்மீது கொண்ட அன்பால் அவரை இராம் அண்ணா என்று அன்புடனும் பெருமையுடனும் அழைப்பதுண்டு. இவரிடத்தில் கோபம், பொறாமை, வன்சொற்கள் இல்லாமை கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சேவை செய்வது மட்டுமல்ல சேவை செய்பவர்களை கௌரவிக்கவும தவறவில்லை. இவருடைய சேவைகளைப் பாராட்டி பல அமைப்புக்கள் பல நாடுகளில் கௌரவித்து பட்டம் வழங்கின. இவ்வரிசையில் சைவத் திருக்கோயில் ஒன்றியம் தனது ஒன்பதாவது மகாநாட்டில் சமூகசீலர் என்ற சிறப்புப் பட்டத்தை 16-07-2006 இல் அளித்து கௌரவித்ததில் பெருமைப்படுகிறது. இவர் சைவ மாநாட்டிற்கும், சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கும் பெரிதும் ஒத்துழைப்பு நல்கும் நல்ல உள்ளம் கொண்டவர். இப் பண்பாளரை இவ்வுலகிற்கு கொண்டு வந்த அமரர்கள்

திரு. வைரமுத்து இரத்தினம், திருமதி செல்வநாயகி இரத்தினம் தம்பதியினரைப் போற்றுகின்றேன்.

கணவன் பணியே தன் பணியென்று அவருடைய சமூகப் பணிகளுக்கெல்லாம் உறுதுணையாகவிருந்து ஒத்துழைப்பு நல்கும் துணைவியார் விஜயலட்சுமி அம்மையாரையும் இச் சமயத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. பிள்ளைகளும், "தந்தை எவ்வழி பிள்ளைகளும் அவ்வழியே" என்ற ஆன்றோர் கூற்றிற்கமைய வரவேண்டும் என வேண்டுகின்றேன்.

எல்லாம் வல்ல இவர்களுடன் நின்று துணைபுரிகின்றார்.

நீண்டகாலம் சிறப்புடன் வாழ்ந்து சைவத் தமிழிற்கு என்றென்றும் தொண்டாற்ற ஹரசியம் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் உண்ணாமுலை அம்மை உடனுறை அண்ணாமலையாரைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**வி.கணேசமூர்த்தி**
**செயலாளர் சைவத் திருக்கோயில் ஒன்றியம்**
**செயலாளர் சிவன் கோயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவார சங்கீத பூஷணம்**
**பண்ணிசை அரசு, பண்ணிசை வித்தகர்**
**சாமி தண்டபாணிதேசிகர்**
**தேவார ஆசிரியர், இலண்டன் சிவன்கோயில்**
**இலண்டன்**

**அரனருள்**

இல 95 இரண்டாவது தெரு
ஸ்ரீ கிருஷ்ணாநகர்
மதுரவாயில்
சென்னை 600095
தொலைபேசி: 0091 23782333

# மணிவிழா வாழ்த்து

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர்குறைவில்லைக்
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

- சம்பந்தர்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. என்ற வள்ளுவப் பெருமானின் வாய்மொழிக்கேற்ப அன்பின் இலக்கணமாய், பண்பின் சிகரமாய், பணிவின் உறைவிடமாய் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகராய், நமது சைவத்திற்கும், தமிழிற்கும், தமிழ்ச சமூகத்திற்கும் அருந்தொண்டாற்றுபவராய் வாழும் ஆன்மிக அன்பரிகளின் உள்ளங்களில் நிறைந்தவராய் சீரோடும், சிறப்போடும் பேரோடும், புகழோடும் வாழந்து வரும் சிவத்திரு வ.இ.இராமநாதன் தம்பதிகளின் மணிவிழா சிறப்புற நடைபெறவும் மேலும் முத்துவிழா, வைரவிழாக்களைக் கண்டு நீண்ட ஆயுளுடனும், நிறைந்த புகழுடனும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று பல்லாண்டு வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ உண்ணாமுலை அம்பிகை சமேத அண்ணாமலைப் பெருமான் திருவடிகளை வேண்டி நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**அன்புன்**
**சாமி. தண்டபாணி தேசிகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sankara - Narayana
**Discipline, Devotion and Self-Confidence**

# LAKSHMI NARAYANA TRUST
## London Sri Mahalakshmi Temple

**Charity Reg. No: 292677**
272 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315
Web : www.srimahalakshmitemplelondon.org
e.mail : info@srimahalakshmitemplelondon.org

**PATRONS**
Mr. P.R. Ramasubrahmaneya Rajha
Mr. S. Soundarajan

**BOARD OF TRUSTEES**

Founder & President
Dr. P. Alagrajah

Vice President
Mrs. A. Alagaraja

Chairman
Dr. Vignesh Rajah

Vice Chairman
Mr. Jagadeesh Rajah

General Secretary
Mrs. V. Swapna

Treasurer
Mr. S. Vijayakumar

Religious Secretary
Mr. T. Jegannathan

Asst. Secretary
Dr. V. Srinivasa Rao

Asst. Treasurer
Mr. K. Sreenivasan

Cultural Organizers
Mrs. K. Thanabalasingam
Mr. V. Harish

02/10/2006

லண்டனில் சைவ முன்னேற்ற சங்கம் இறைபணியை சிரமேற் கொண்ட சங்கம் என்பது அனைவரும் அறிந்ததே. சைவ முன்னேற்ற சங்கத்தில் திரு. இராமநாதன் அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இறையுணர்வை ஊட்டியவர். அவர்களின் மணிவிழா சிறக்க உள்ளன்போடு ஸ்ரீலக்ஷ்மி நாராயணரை பிரார்த்தனை செய்கிறோம்.

சஷ்டியப்த பூர்த்தியுடன் இறைவன் ஆசி பெற்ற திரு ராமநாதன் அவர்கள், ஸ்ரீலக்ஷ்மி நாராயணரின் அருளால் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று, 70 வயதில் பீம சாந்தியும், 80 வயதில் சதாபிஷேகமும் பெற வேண்டும் என இறைவனை வேண்டுகிறோம்.

அன்புடன்

Dr P Alagrajah
President
Sri Mahalakshmi Temple

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KATPAKA VINAYAGAR TEMPLE

2-4 BEDFORD ROAD WALTHAMSTOW LONDON E17 4PX
(Charity No: 1092252)
Telephone: 020 8527 3819

சைவத்தின் வளர்ச்சியை சமூக நலனை
உய்விக்கும் உயர் எண்ணமே உணர்வாக
தெய்வத்தின் அருளால் சென்ற தேசமெலாம்
மெய் வருத்தம் பாராமல் மேன்மையுறப் பணியாற்றும்
வையமறிந்த வன்தொண்டன் இராமநாதன் வயது
பையவே அடைந்தது அறுபது ஆயுளும் பெருக
கைமுகத்துக் கடவுள் கற்பகன் அருளால்
செய்யும் சேவையும் தொடர வாழ்க பல்லாண்டு!

அன்பரின் துன்பம் தீர்க்கும் ஐங்கரன் கற்பகனும்
லண்டன் ஸ்ரீ முருகனுடன் சேர்ந்த தெய்வம் யாவும்
பண்புடன் பணியாற்றும் பக்தனாம் இராமநாதனுக்கும்
பாரியாருடன் குடும்பம் யாவர்க்கும் பாங்காய் அருளி
தண்புகழ் சைவ முன்னேற்றச் சங்கத்துடன்
சார்ந்திருக்கும் பொதுச்சேவையும் பல பெருகிட
விண்ணுள தேவரின் வியன் ஆசியுடன்
மண்ணுலகில் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே!

அன்புடன்
**ஆலய சிவாசாரியார்கள்**
**நிர்வாகத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

பிள்ளையார் துணை

"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"

**இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்**

**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**

299 - 303 LEY STREET ILFORD, ESSEX IG1 4BN TEL / FAX :- 0208 911 8934
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK E-Mail:- info@sriselvavinayagar.org.uk

# செயல் வீரன் இராமநாதன்

என்னையும் ஒரு மனிதனாக மதித்து திரு. வ.இ.இராமநாதன் அவர்களின் அறுபதாவது அகவை குறித்து எனது கருத்தைப் பெற தாங்கள் விரும்புவதாகக் கேட்டிருந்தார்கள். சைவ முன்னேற்றச் சங்கத்தின் முக்கிய உறுப்பினரும் எனது அன்புத் தம்பியுமான திரு. ஆனந்ததியாகர் அவர்கள்.

அவருக்கு முதற்கண் எனது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். காலத்தால் அழியாத காவியம் படைத்து கார்முகிலைக் கிழித்து ஒளிவீசும் அந்தக் கார்த்திகை திங்கள் போல், தாழாத துன்பங்களையும், தாங்கொணாத தடைகளையும், உடைத்து தான் கொண்ட முயற்சியில் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் வெற்றி நடைபோட்டு, இன்று அறுபதாவது அகவையில் கால்பதித்து நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்று செயல்வீரனாக நிமிர்ந்து நிற்கும் எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. இராமநாதன் அண்ணனுக்கு எனது மனம் கனிந்த பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைவதோடு பெருமையும் கொள்கின்றேன்.

இந்தமண்ணுலகில் எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள். எல்லோரும் என்றோ ஒரு நாள் இறக்கின்றார்கள். இது எல்லோருக்குமே தெரிந்திருந்தும் பக்கத்துவீட்டுக்காரனை விட நான் பணக்காரனாகவும், படிப்பாளியாகவும், பதவி கூடியவனாகவும் இருந்துவிட்டால் நான் இப்பிறப்பெடுத்ததன் பயனை அடைந்து விடுவேன் என்று இன்னும் பலர் நினைத்து அப்படியே வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சேற்றின் நடுவே செந்தாமரையாக மிகச்சிலர் வாழ்ந்தும் இருக்கிறார்கள். வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள்.

நான் இப்பிறப்பெடுத்ததன் பயனை அடையவேண்டும் என்றால் அதற்குண்டான ஒரே வழி ஆன்மிக வழிதான் என்று தனது இளம் வயதிலேயே முடிவு பண்ணி சைவ சமயப்பணியில் தனது வாழ்வை இணைத்து இன்று நாற்பது நீண்ட ஆண்டுகள் கடந்தும் இன்னும் சளைக்காமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றார் என் உடன் பிறவாச் சகோதரன் திரு. ராம்அண்ணா. இந்த நாற்பது ஆண்டுகளில் இவர் கடந்து வந்த காட்டாறுகள் எத்தனை, பாய்ந்து வந்த பாலைவனங்கள் எத்தனை, துவண்டுவிடவில்லை அவர். கல்லடியைக் காட்டிலும், பொல்லடியைக் காட்டிலும் அவர் பயந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லடிக்கு மட்டுமே. நரம்பில்லாத நாக்கால் எதை வேண்டுமானாலும் யாரும் பேசலாம். அதற்காக அண்ணன் போதும் என்று அமாந்துவிட வில்லை. தான் புலம் பெயர்ந்து பிரித்தானிய வந்தாலும் மனதில் சைவத்தமிழைச் சுமந்து வந்ததோடல்லாமல் தாய்ச் சங்கமாகிய கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் எனும் ஆலமரத்தின் விதையை இங்கேயும் விதைத்தார். அது இன்று மனோர்பாக்கில் ஆன்மிக நிழல் தரும் பெரும் விருட்சமாக சைவத் தமிழ் மக்களுக்கு ஒரு நிழலாக இருக்கின்றது. எமது ஆலய கும்பாபிஷேகத்தின் போது சங்க அன்பர்கள் ஆலயத்தில் தெண்டாற்றினார்கள். இந் நாட்டிலே பெரிய புராணத் தொடர் சொற்பொழிவை அறிமுகப்படுத்தியவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தினர் என்றால் அது மிகையாகாது. அவாகள் இந் நாட்டில் அதை மூன்று ஆலயங்களில் தொடர்ந்து நடாத்தியுள்ளார்கள். எமது ஆலயத்திலும் பெரிய புராணத்தில் கூறப்பட்ட அறுபத்துமூவரினதும் வரலாறுகளை அறிஞர் பெருமக்களைக் கொண்டு தொடர் சொற்பொழிவாக வெள்ளி தோறும் ஒன்றரை வருடங்களாக நடாத்தி சேக்கிழார் விழாவையும் மிகச்சிறப்பாக எமது விழா மண்டபத்தில் நடாத்துவதற்கு மூல காரணமாக திரு. இராமநாதன் அவர்கள் இருந்து செயற்பட்டார்கள்.

பாரதக் கதையிலே ஒரு காட்சி. துரோணாச்சாரியார் தனது சிஷ்யனான அருச்சுனனிடம் அருச்சுனா! அந்த மரத்தில் இருக்கும் கிளியை உனது பாணத்தால் வீழ்த்து என்றார். உடனே அருச்சுனன் வில்லிலே அம்பை தொடுத்து நாணேற்றி இலக்கை அடித்தான். அப்போது துரோணர் அருச்சுனா உனக்கு இப்போது என்ன தெரிகிறது என்று கேட்டார். மற்ற சிஷ்யர்களெல்லாம் வானம் தெரிகிறது, மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது, கிளி தெரிகிறது என்ற போது அருச்சுனன் மட்டும் எனக்கு கிளியின் கழுத்து மட்டும் தான் தெரிகிறது குருவே என்றான். அதைப் போலவே திரு இராமநாதன் அண்ணாவின் நோக்கமும் சிந்தனையும் சைவத்துக்கும்,தமிழுக்கும் தொண்டு செய்வதில் மட்டுமே இருந்ததால் அவரை எந்தத்தடையும், எந்த வசையும் கிட்ட நெருங்கமுடியவில்லை. அவற்றைப்பற்றி அவர் கவலைப்படவுமில்லை. இங்கு நான் ஒன்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வார்கள். அதே போல் திரு. இராமநாதன் அவர்களின் ஆன்மிக வெற்றிக்குப் பின்னால் அவருடைய துணைவியார் திருமதி விஜயலட்சுமி அம்மையார் அவர்கள் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்று ஐம்பது வயதைத் தாண்டிய நிலையில் எனது ஆன்மிகப் பயணத்தில் நான்படும் பாடு எனக்கு மட்டுமே தெரியும். என்னோடு ஒத்துழைப்பதற்கு எனது மனைவி படும்பாட்டை அவர் மட்டுமே அறிவார். வீட்டுப்பாடு பார்க்க வேண்டும். பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும். அவர்களுடைய படிப்பைக் கவனிக்க வேண்டும். அவர்களுடைய எதிர்காலம் என்று எத்தனையோ பிரச்சனைகள்.

ஆனால் ஏறத்தாழ தனது இருபது வயதிலேயே ஆன்மிகப் பயணத்தை ஆரம்பித்த திரு. இராமநாதன் அண்ணா அவர்களோடு அவரது துணைவியார் வாழுகின்ற வாழ்க்கையை ஒப்பிட எனக்குத் தெரிந்த வரை அந்த இராமபிரானையும் சீதா தேவியாரையும் தவிர வேறு யாரும் இல்லை என்றேகூறுவேன். இராம் இருக்கும் இடம் தான் தனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தி என்று சொன்னார்கள் அந்த சீதாப்பிராட்டியார்.
இந்த இராமநாதனின் விருப்புக்கும், மகிழ்ச்சிக்கும் தன்னைத்தியாகம் செய்வதே தான் இப்பிறப்பெடுத்ததன் பயன் என்று வாழ்ந்து காட்டுபவர் திருமதி விஜயலட்சுமி அம்மையார் அவர்கள்.

பாருங்கள்! ஆன்மிக ஈடுபாடுதான் பிறவி எடுத்ததன் பயன் என்று கணவன், அந்த கணவனுடன் கூட இருந்து அவருக்குத் தொண்டு செய்வதுதான் பிறப்பெடுத்ததன் பயன் என்று வாழும் மனைவி.

இப்படி தியாகத்தின் உச்சியிலே வாழந்து கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தை இந்த கலியுகத்தில் எங்கேயாவது பார்க்க முடியுமா? பாரதத்திலும், இராமயணத்திலும் வேண்டுமென்றால் படித்திருக்கலாம். நிஜவாழ்க்கையில் நான் இவர்களை மட்டும் தான் பார்க்கின்றேன். இதையெழுதும் போது என்கைகள் நடுங்குகின்றன. எங்கே என் கண்களே பட்டுவிடுமோ என்று.

***தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின்***
***தோன்றாமை நன்று***
***என்றார் வள்ளுவப் பெருந்தகை.***
***ஐயா நீர் புகழுக்கே இலக்கணமாகி நிற்கின்றீர்.***

ஒரு முல்லைக் கொடி தழுவிடப் தன்தேரைக் கொடுத்தான் வள்ளல் பாரி. ஒரு பிராமணன் கேட்டதற்காக தான் செய்த புண்ணியம் அனைத்தையும் கொடுத்தான் கர்ணன். அதே போல் தொண்டுக்கு இலக்கணமாக நீவிர் வாழ்கின்றீர்.

நீவிர் அறுபதோடு இன்னும் ஒரு அறுபதாயினும் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்று வாழத்த நினைக்கின்றேன்.

ஆனால் நின்னை வாழ்த்தும் தகுதி எனக்கிருக்கிறதா என்கின்ற கேள்வி என் நெஞ்சில் விஞ்சி நின்றாலும் எம்பெருமான் வலம்புரி ஸ்ரீ செல்வ விநாயகர் ஏழெழு பிறப்பினும் தங்களை பொன்மனச் செம்மலாக வாழ வைக்க வேண்டும் என்று வேண்டி அமைகின்றேன்.

**S. செல்வராசா**
**ஸ்தாபகர்-**
**ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Aum Sakthi

ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

**SRI MERUPURAM**

**MAHA PATHIRAKALI AMMAN**

**THEVASTHANAM**

271 Forest Road, Watham Stow
E17 6 HD, London.
Tele/ Fax : 0208 - 5310872



# வாழ்க வளமுடன்

செல்வச் செழிப்பும் செல்வாக்கும் மிக்கவராய் எல்லாரையும் நேசித்து எவர்க்கும் உதவி செய்து சைவ முன்னேற்றச் சங்க அறப்பணிகள் பல செய்து வந்தோரை உபசரிக்கும் பண்பு கொண்ட உள்ளம் இன்று மணிவிழாக் காண்கின்றது. தன் இன்முகத்தால் எல்லோரையும் கவா்ந்தவா் திரு. இ.வ.இராமநாதன் அவா்கள் சகல வளங்களும் பெற்று இன்று போல என்றும் இன்புற்று வாழந்திட சிறந்த இந்நாளில் நிறைந்த நல் வாழ்த்துக்கள் கூறி எல்லாம் வல்ல மஹா பத்தரகாளி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தக்கின்றேன்.

நன்றி

இங்கனம்

காளிதாசன்
கயிலை சிவஸ்ரீ லிங்க லோகநாதக்குருக்கள்
அம்பிகை அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DR. V. MANO MOHAN** M.B.B.S, F.R.A.C.P.
**F.R.C.P(LONDON), F.R.C.P(GLASGOW)**
**CONSULTANT CARDIOLOGIST**

**33 LLANDILO AVENUE**
**HIGHWAY**
**STRATHFIELD NSW 235**

**20 HEREWARD**
**BLACKTOWN NSW 2148**
**PH : 02 9871 3011 PH: 02 9642 4860**
**FAX : 02 9831 7238**

30th September 2006,

It is with great pleasure my wife and I send this message of best wishes to Mr. & Mrs. Ramanathan and their children on his 60th birthday. Both Gowri and I have known Ram, Viji and their children for good part of 3 decades.

Ram has shown leadership qualities as well as desire to work for the common good of the community from his young days. He has held various responsible positions in religious and community organisations both in Sri Lanka and the U.K. Working hard for a common good as a team member without expecting anything in return is one of his most endeaning and admired qualities.

Even in his sphere of work as a financial planner and investment consultant the sound financial advice and guidance that he has given to hundreds of families who have reaped the benefit of his advice is a glowing testimony for his honesty and integrity.

Ram's involvement in the public life over the past several decades has been made possible by the unwavering support and encouragement given by his wife Vijayalakshmi Ramanathan know to all of us as Viji.

On behalf of Gowri, myself, my children and all his friends and relatives in Australia let me wish both Ram and Viji as well as their children to be bestowed with God's choicest blessings, health, happiness and wealth. May almighty God bless him and guide him for many decades to come so that he could continue his good work.

With Kind Regards,
Yours sincerely,
Dr.V.Mano Mohan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

MANGALAPATHY
SRI VELMURUGAN AALAYAM
மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் ஆலயம்
4A Eastdown Park, Lewisham, London. SE13 5HS.
Tel.: 020 8333 1954, 020 8690 9310.

**மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் ஆலயத்தின்** சார்பாக
சைவநெறி மெய்யறியச் செய்யும் உபகாரி

# திரு. இராமநாதன்

அவர்களது

## மணிவிழா நல்வாழ்த்துக்கள்

**(31st August 2006)**

சிவமயமே சின்மயமே சிந்தைமதி பூரணமே
சீர்குரவச் சைவ வேளார்
சீருலகு பேரமைதி சேருறவு தானுயரச்
சேவையெனச் சைவ நீதி
தவநயமே தன்கடமை தப்பாது எப்போதும்
தன்னலம் இலா மனத்தால்
தமிழுலகு விரியுமினி தமிழ்முருகு அறியுமினி
தன்கடமை சைவ மென்றே
பவபயனாய் ரத்தினமாய் செல்வமதி புத்திரனாய்
பாரிலறி ராம நாதர்
பணிபுரிய முனைந்தின்று மணிவயது இணைகின்ற
பாக்கியம் கண்ட தாலே
நவநிதியும் நலமருளும் சிவநெறியும் வளமுமென
நன்றாகநூ றாண்டு காண
நண்பர்களாய் லண்டனிலே அன்பர்களாய் வாழ்த்துகிறோம்
நாதசிவ சூலன் காக்க

**மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் ஆலயம்**
**ஆலய குருமார்கள், அறங்காவல சபையினர் மற்றும்**
**அன்பர்கள்**

K Venayakamoorthy, (President) | M Jehatheesan, (Secretary) | S Babu, (Treasurer) | S Chandran. | S.Logarajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்**
**කොළඹ සයිව මුන්නේට්ට සංගම්**
**COLOMBO SAIVA MUNNETTA SANGAM**
**Bankers: BANK OF CEYLON (Metropolitan Branch) INDIAN OVERSEAS BANK**

Regd / பதிவு } S. 258

101/ 70, KEW ROAD, COLOMBO - 2.

Branch Societies: United Kingdom / Peliyagoda / Chilaw.

.........................2003

## வாழ்த்துச் செய்தி

எதிர்வரும் 2006-08-31 இல் தனது அறுபது வயதை பூர்த்தி செய்யவிருக்கும் உயர் திரு இரத்தினம் இராமநாதன் மணிவிழாக் காணும் நன்நாளில் இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய சைவ முன்னேற்றச்சங்கத்தின் தாய் சங்கமாகிய கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தின் தர்மகர்த்தாவாகிய அடியேன் இவரின் பணிகள் சிலவற்றை இவ்விடத்தில் குறிப்பிடுதல் சாலப் பொருத்தமாகும். அத்துடன் எனது கடமையுமாகும்.

அன்னார் கொழும்பில் வாழ்ந்த நாட்களில் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் சங்கத்தினை செயற்படுத்த ஓர் இடம் கூட இல்லாத நிலையிலும், தனது சமய, சமூகப்பணிகளைக் கொண்டு நடாத்துவதிலும் பல கஷ்டங்களை சந்தித்தது. இக்காலகட்டத்தில் இளமைத்துடிப்பும் கொண்ட இளைஞன் இராமநாதன் தனது முழுச்சக்தியையும் பயன்படுத்தி தனது சக தோழர்களையும் காலஞ் சென்ற க.பாலசுப்பிரமணியத்துடன் சேர்த்து இச்சங்கத்தை தலைநகரில் தலைநிமிர வைக்க எடுத்த முயற்ச்சிகள் சொல்லிலடங்கா. சங்கத்தின் பணிமனை நால்வர் மணி மண்டபம் உருவாகும் போது ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை எல்லாவற்றையும் சமாளித்து கட்டட வேலைகளை பூர்த்தி செய்வதில் திரு.இராமநாதனின் பங்களிப்பு மிக முக்கியமானது. எனது மூத்த சகோதரன் காலஞ் சென்ற சட்டத்தரணி பாலேந்திரா இவர்களுடன் சங்க முன்னேற்றத்தின் வேலைகளில் ஈடுபட்டு வந்தமை எனது மனக்கண் முன் இன்னும் நிற்கின்றன. திரு. இராமநாதன் எதையும் சாதிக்க வல்லவர். இவர் ஓர் செயல்வீரர் என்று சொன்னால் அது மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் சைவ முன்னேற்றச் சங்கம் தலைநிமிர்ந்து நிற்க முன்னின்ற அதே இராமநாதன் இலண்டன் மாநகரில் இச்சங்கத்தின் கிளை ஒன்றை அமைக்க காரணகர்த்தாவாக விளங்கினார். இலண்டன் சைவ முன்னேற்றச்சங்கம் இன்று தனது 27 வது வயதினைக் கொண்டாடும் உன்னத நிலை கண்டு தாய் சங்கமாகிய கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம் உவகையும், பூரிப்புமடைகிறது.

திரு.இராமநாதன் அவர்கள் தனது சேவைகளை சமயப்பணிகளில் மட்டுமன்றி பல சமூகப்பணிகளிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தன்னுடைய சகநண்பர்களினது சுக – துக்கங்களில் பல வகைகளிலும் பங்குபற்றியவர். குறிப்பாக தனது நண்பர்களின் குறைகேட்டு உதவிகள் பல செய்யும் பரோபகாரி. இவரது சேவைகள் இலண்டனில் மட்டுமன்றி, தன்னை வளர்த்த இலங்கையிலும் மற்றும் உலகளாவிய ரீதியிலும் தொடர்ந்து செல்கின்றன.

உலகப் பேரவையின் மறைந்த தலைவர் உயர் திரு. சிவநந்தி அடிகளாருடன் இணைந்து பேரவையின் உயர்ந்த நோக்கங்கள் நிறைவு பெற அரும்பாடுபட்டு வந்தார். சைவக்கொடியாம் நந்திக்கொடியின் பாவனையை முன்னெடுத்துச் சென்றவர். இவர் கொழும்பில் அகில இலங்கை இந்துமாமன்ற செயற்பாடுகளிலும், அதன் வளர்ச்சிக்காகவும் தனது பங்களிப்பினைச் செய்யத் தவறவில்லை.

சைவமுன்னேற்றச் சங்கத்தினை கொழும்பிலும், இலண்டனிலும் உயர்வுறச் செய்த பெரியார்களின் வரிசையில் திரு.இராமநாதன் அவர்கள் செய்த சேவைகளும் பணிகளும் என்றென்றும் நினைவு கூறப்படும்! இது காலத்தால் அழியாத உண்மை!!

இம் மணிவிழாவினையொட்டி வெளிவரவிருக்கும் சிறப்பு மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் திரு.இராமநாதன் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து சைவத்துக்கும், தமிழுக்கும் மேலும் தனது சமூகத்திற்கும் செய்யும் தொண்டுகள் தொடரவேண்டும், என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

நன்றி வணக்கம்

சின்னத்துரை தனபாலா(J.P)
தர்மகர்த்தா, கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகன் இராமநாதனுக்கு - மணிவிழா

| | | **ஆரம்பம்** | **விழாக்கள்** |
|---|---|---|---|
| ஆரம்ப கல்வி கற்ற பாடசாலை<br>பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை | - | 1855 | 150வது விழா |
| தொடர்ந்து ஆரம்பக் கல்விகற்ற<br>கொழும்பு வெஸ்லி கல்லூரி | - | 1874 | நூற்றாண்டு விழா |
| இடை நிலைக் கல்வி கற்ற<br>தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி | - | 1910 | பவள விழா |
| முதல் சைவப்பணி தொடங்கிய<br>பன்னாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை | - | 1939 | மணிவிழா |
| தாய் தந்தையர் திருமணம்<br>செல்வநாயகி இரத்தினம் | - | 1942 | பொன் விழா |
| கொழும்பில் தமிழ் சைவப்பணி தொடங்கிய<br>கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம் | - | 1953 | பொன் விழா |
| விஜயலக்ஷ்மியைத் திருமணம் செய்து<br>இல்லறத்தில் | - | 1976 | வெள்ளி விழா |
| இலண்டனில் தமிழ், சைவப்பணி ஆரம்பித்து செய்துவரும்<br>இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் | - | 1977 | வெள்ளி விழா |

விய வருடம் பன்னாலையில் பிறந்து அதே விய வருடம் இலண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் இராமநாதனுக்கு பிரித்தானியாவில் மணிவிழா. அதை நடத்த ஒரு குழு. அந்த விழாவில் அவரைப் பற்றி பிரசுரமாகி வெளிவரவுள்ளது ஒரு மலர். அதில் 60 ஆண்டுகள் இராமநாதனை அறிந்த எனது வாழ்த்து. கௌரவமாகவும் பெருமையாகவும் இருக்கிறது. முதலில் விழாக்குழு அங்கத்தவர்களுக்கு எனது நன்றி.

செயல்வீரர் இராமநாதன் சொல்லாமல் செய்கிறார். சொல்வீரர் நாங்கள் செய்ய முடியாவிட்டாலும் அவர் செய்த தமிழ், சைவ, சமூகப் பணிகளை சொல்லி மகிழ்வோம் பாராட்டுவோம்.

விழா நாயகரின் குருநாதர் எனது தந்தையார் கா.கதிர்காமத்தம்பி குடும்பமும், எனது குடும்பமும் இணைந்து இராமநாதன் குடும்பம் எல்லாச் செல்வங்களும் பெற்றுச்சீரும் சிறப்புடனும் நீடு வாழ குலதெய்வமாம் மயிலை ஞானவைரவர் திருப்பாதங்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

மயிலப்பை - பன்னாலை
தெல்லிப்பளை
இலங்கை

40 - 106 Chester Le Blvd
Scarborough, ON M1W 2X9
Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
"சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமுகசேவை"
Saiva Munnetta Sangam (UK)
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel / fax: 020 8514 4732 Fax: 01268 561805
WWW.SMSUK.ORG.UK

Registered Charity No: 292085

Vice Patron
Dr. (Mrs) Indra.Siva -yoham

29th Year Management Committee

President & Trustee
Mr.S. Balasingham
020 8470 1818

Vice President & Trustee
Mr. V. C. Vamananthan
0208 220 3810

General Secretary & Trustee
Mr. S. Anandathiyagar
020 8924 8492

Treasurer & Trustee
Mr. W. Nagaratnam
020 8550 2739

Trustees
Mr.V.R. Loganathan
Dr.N.Navaneetharajah
Mr. S. R. Pasupathy
Mr. V. R. Ramanathan
Mr. C. Sithamparapillai

Building Project Secretary
Mr. G. Parameswaran

Examination Secretary
Mr. K. Sivagurunathapillai

Membership Secretary
Mr. T. Kanagasabai

Publication Secretary
Mr. S Thamboo

Religious Secretary
Mr. T.Rabindramohan

Social Service Secretary
Mr.R.Nadarajah

School Secretary
Mrs. K. Jegendrabos

Assistant Treasurers
Mrs. P. Uthamakunan
Mr. N. Sivarasan

Committee Members
Mrs.S.Atheesan
Mr. S. Atputhananthan
Mrs. V. Kanagenthiran
Mr.V. Loganathan
Mr.K.Mageswaran
Mr. M. Ravindradas
Mr. V. Sellathurai

# நால்வர் மூத்தோர் நிலையத்தினர் வாழ்த்துகின்றார்கள்!

மணிவிழாக் காணும் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்களின் அன்புச் சேவையையும் தொண்டினையும் பாரத்து மகிழுகின்றோம்.

இந்த நாட்டில் சைவ முன்னேற்றச் சங்கத்தினூடாக எமது பாரம்பரியமான மூத்தேரைப் பேணல் முறையெல்லாம் தலை என்னும் வாக்கிற்கிணங்க நால்வர் மூத்தோர் நிலையத்தை ஆரம்பித்து வைத்தீர். அதனால் பலனடையும் நாங்கள் உம்மைப் பெறாத தாயாக இருந்தாலும் நீரும் நாங்கள் பெற்ற பிள்ளை என நினைத்து இந்த நிலையத்திற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வந்து போகின்றோம். உமது திறமைக்கும் ஆற்றலுக்கும் நிகர் நீரே என்பதை நினைத்துக்கொள்க. என்றென்றும் ஆண்டவனின் அருளும் எங்களின் நல்லாசியும் உம்முடன் இருக்கும் என்று சொல்லி உமது மணி விழா சிறப்பாக நடைபெறவும், நீரும் உமது குடும்பத்தினரும் சீரும் சிறப்புடன் வாழவும், நீர் இன்னும் பல சாதனைகள் புரிய வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

வாழ்க நீர் பல்லாண்டு! வளர்க நும் சேவை!

**நால்வர் மூத்தோர் நிலையம்**
**20-08-2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் ஒரு வைரம்

## கல் காணும் திண்மையான் கரை காணாக் காதலான்

திரு. வைரமுத்து இரத்தினம் இராமநாதன் எங்கள் புலம்பெயர் தமிழ்ச் சமுதாயத்தின் மானிட வைரங்களில் ஒன்று. அவரின் மணி விழா என்னும்போது வைரத்தின் ஒளியை நாம் காணும் முயற்சியாக அது அமைகிறது. வைரம் என்று சொல்கையில் அதற்கு இரு சிறப்புக்கள் உண்டு. ஒன்று உறுதி மிக்கது. அடுத்தது ஒளிவீசும் தன்மையானது. இந்த இரண்டும் இராமநாதன் அண்ணன் அவர்களில் இருப்பதினால் தான் அவரைப் புலம்பெயர் தமிழ்ச் சமுதாயத்தின் வைரங்களில் ஒன்று எனத் துணிந்து கூற முடிகிறது. இராமநாதன் அண்ணன் அவர்களின் உறுதி என்பது அவரின் செயல்களில் பளிச்சிடும். அவரின் தமிழர் மேலான அன்பு என்பது அவரின் வார்த்தைகளில் சுடர்விடும். சொல்லும் செயலும் மாறுபடாத மிக எளிமையான வாழ்வு அவரின் வாழ்வு. அந்த வகையில் உறுதி தரும் வெற்றியும் அன்பு வழிச் சேவையும் இணைந்தவர் அவர். இதனால் அவரைக் "கல் காணும் திண்மையான் கரைகாணாக் காதலன்" என்கிற கம்பனின் மொழியினாலேயே சுட்டிடல் சாலப்பொருந்துமென எண்ணுகிறேன். கம்பராமாயணத்துக் கங்கைகாண் படலம் கம்பன் மானிடத்து பாசத்தை அன்பை நட்பை நன்றியை உறவுகளின் ஆழத்தைச் செந்தமிழ்க் கவிதைகளால் விளக்கிய அற்புதமான படலம். இதிலே சுமந்திரன் குகனைக் குறித்துப் பரதனிடம் கூறும் வார்த்தைகள் பின்வருமாறு அமைகின்றன.

கல் காணும் திண்மையான் கரை காணாக் காதலான்
அற்கு ஆணி கண்டனைய அழகு அமைந்த மேனியான்
மல்காணும் திருநெடுந் தோள் மழைகாணும் மணி நிறத்தாய்
"நிற் காணும் உள்ளத்தான் நெறி எதிர் நின்றனன்" என்றான்

இந்தப்பாடல் இராமநாதன் அண்ணின் நெடிதுயர்ந்த தோற்றத்திற்கும் கல் போன்று கலங்காத உள்ள உறுதிக்கும் கரைகாணா அன்பினைக் கொண்ட அவரின் உள்ளத்திற்கும் பொருந்தும் பாட்டாக எப்போது எனக்குப்பட்டதென்பதையும் இவ்விடத்தில் விளக்கிட விரும்புகின்றேன்.

நான் வீட்டுவசதியியல் துறை புலமையாளர் என்ற வகையில் எனக்கு "இன்சைட் ஹவுசிங்" (Inside Housing) என்கிற வீட்டுவசதியியல் இதழியல் அஞ்சலில் வருவது வழமை. அந்த "இன்சைட் ஹவுசிங்" (Inside Housing) இதழ்களில் ஒன்றில் இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மேலே உள்ள படத்தை ஒருநாள் கண்டதும் உடனடியாக அந்தப் பக்கத்தை வாசிக்கத் தொடங்கினேன். கேட் அலன் (Kate Allen) என்பவர் அதிர்ச்சியின் பின் (After Shock) என்னும் தலைப்பில் அக்கட்டுரையை எழுதியிருந்தார். அதில் சுனாமிப் பேரலைத் தாக்குதலின் பின் பிரித்தானியாவில் உள்ள வீட்டுவசதியாளர்கள் பாதிப்புற்ற மக்கள் தொடர்பாக எடுத்துக்கொண்ட அக்கறைகள் விவரிக்கப்பட்டிருந்தன. அதில் ஸ்பிரிங் போர்ட் ஹவுசிங் சார்பில் வைரமுத்து இராமநாதன் அவர்கள் கூறியிருந்த கருத்துக்கள் வெளியிடப்பட்டு இருந்தன.

11 உறவினர்களையும் நண்பர்களையும் சுனாமியால் பறிகொடுத்த பின்னரும் கலங்காத கல் அனைய மனஉறுதியுடன் பாதிப்புற்று துன்புறும் மக்களுக்காய் கரைகாணா அன்புடன் இராமநாதன் அவர்கள் சைவமுன்னேற்றச் சங்கத்தின் மூலம் ஆடைகள் சேர்த்து அனுப்பும் அரும்பணியை அங்கே விபரித்திருந்தார்கள். கூடவே அவர் சேர்க்கப்பட்ட ஆடைப் பொதிகளுக்கு மேல் உட்கார்ந்திருக்கும் மேல் உள்ள படத்தையும் வெளியிட்டு இருந்தார்கள். இதனைப் பார்த்ததும் நெடிதுயர்ந்த அவர் தோற்றம் கண்களில் நிறைந்ததை விட நீண்டுயர்ந்த அவர் பணி மனதில் மிக உயர்ந்த இடத்தை அவருக்கு வழங்கியது. அப்பொழுது தான் என் மனம் அவரை நட்பின் இலக்கணமாய்க் கம்பன் படைத்த குகனுடன் ஒப்பிட வைத்தது. உடனே பரதனைக் கண்ட குகனின் மனத்தினாய் இராமநாதன் அண்ணன் அவர்கள் சுனாமியால் பாதிப்புற்ற மக்களைக் காண்பது போல் ஒரு உணர்வு தோன்றியது.

**வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை**
**நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை**
**கல் கனியக் கனிகின்ற துயரானை கண்ணுற்றான்**
**வில் கையினின்று இடை வீழ விம்முற்று நின்றொழிந்தான்**

என்பது பரதனைக் கண்ட குகனின் உள்ளத்து உணர்வு. சுனாமி நேரத்தில் மட்டுமல்ல எப்பொழுது எல்லாம் எம் தாயக மக்கள் துன்பங்களைத் துயரங்களை அனுபவிக்க நேரிடுகின்றதோ அப்பொழுதெல்லாம் இராமநாதன் அண்ணனின் மனத்தில் இந்த குகத்துவ உணர்வு கரை புரள்வதை நான் கண்டிருக்கிறேன். கல் கனியக் கனிகின்ற துயரத்தில் நம் உற்றவர் ஊரவர் நாட்டவர் துடிக்கையிலே நாம் உணர்வற்றவராய் உண்டும் களித்தும் கொண்டு மகிழ்கின்ற நிலையில் வாழமுடியாது என்பதை உணர்ந்தவராக இராமநாதன் அண்ணன் தமிழ் மக்கள் நலம் பெற வைக்கும் பல பணிகள் திறக்க சிறக்க மதியும் நிதியும் வழியும் அளிப்பவராக இராமநாதன் அண்ணன் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகப் பணியாற்றி வருவது ஊரறிந்த விடயம்.

**சமுதாயம் என்பது பன்மக்கள் ஈட்டம்**
**சமுதாயம் ஓங்கச் சமயமே நற்றுணை**
**சமுதாயம் சீர்பெறச் செய்தல் சமயமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமுதாயம் வாழச் சமயமும் வாழுமே**

என்பது அவரின் முதல்நிலை. இந்த வழியில் தான் அவரின் சைவமுன்னேற்றச் சங்கத்தின் பணிகளை நான் பார்ப்பதுண்டு.
அதே வேளை

**பின்னை நின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

என்னும் திருமூலர் திருமந்திரத்தை மறவாது தமிழ்ப்பணி செய்தலே தன்பணியாக வாழ்வது இராமநாதன் அண்ணனின் இரண்டாவது நிலை. இதன் வழி தான் அவரின் கலசம் இதழின் பணியை ஐ பி சி வானலை முதலீட்டில் பங்கெடுத்த பணியை தமிழ்ப்பெரியார்களை தமிழ்நிகழ்ச்சிகளை அவர் போற்றிடும் பணியை நான் பார்ப்பதுண்டு.

இவ்வாறாக இராமநாதன் அண்ணன் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் தன் இருகண்களாகக் கொண்டு புலத்திலே வாழ்கின்ற வாழ்வு அவரை தமிழ்ச் சமுதாயம் தங்கள் சொத்தாய் கருதும் அன்புநிலையைத் தோற்றுவிக்கிறது. தமிழீழத்தின் சைவ, தமிழ் எழுச்சிக்கு ஒரு பொன்னம்பலம் இராமநாதன் என்றால் எங்கள் புலத்து சைவ, தமிழ் வளர்ச்சிக்கு இந்த வைரமுத்து இராமநாதன் எனப் புலத்து தமிழர் கொண்டாடும் பெருமைக்குரியவர் இராமநாதன் அண்ணன். இதானல் அவரின் மணிவிழாவை புலத்து தமிழ்ச்சமுதாயம் தங்கள் விழாவாக கருதுகிறது. அவர் பல்லாண்டு பல்லாண்டு பாங்குடனே வாழத் தமிழால் வாழ்த்துரைத்து வல்ல இறைவன் நல்லாசி வேண்டி நிற்கிறது. இந்தப் பெருமகிழ்வில் கலந்து இராமநாதன் அண்ணனை வாழ்த்துவதில் அளவிலா ஆனந்தமடைகின்றேன். இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் - இன்று உண்டாம் அன்பு நிலையே அது. - என்னும் உமாபதி சிவாசாரியார் வாய்மொழிக்கு வரலாறாகி அன்பு வாழ்வியற்றி நிற்கும் இராமநாதன் அண்ணன் அவர்களுக்கும் அவரின் அன்பு மனைவி மற்றும் இரு குழந்தைகளுக்கும் இம்மகிழ்வான நேரத்தில் இதயத்தன்பான வாழத்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி.

வணக்கம்.

**சூ.யோ.பற்றிமாகரன்** MA, BSc, BA Special Dip (Oxford) Dip (Housing)
ஆய்வாளர் பத்திரிகையாளர் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற நண்பர்

ஒருவருடைய சால்பு என்பது அவர் வாழ்க்கை பற்றிக் கொண்டிருக்கும் நோக்கையும் வாழும் முறைமைகளையும் அவை சமூகத்திற்குப் பயன்படுமாற்றையும் அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடப்பட வேண்டும் என்றால் திரு. வ.இ.இராமநாதன் அவர்கள் உயர்ந்த சால்பு கொண்டவர் என்று தயங்காமல் கூறலாம்.

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்***
***ஆகுலநீர பிற***

என்றார் வள்ளுவப் பெருமான்.

மாசில்லாத மனத்தைப் பெறுதல் கடினமானது. அதைத் திரு.வ.இ.இராமநாதன் அவர்கள் எப்படிப் பெற்றுக்கொண்டார் என்பது எனக்குத் தெரியாது.
ஒரு மனிதனுடைய சிறப்பு என்பது அவனது தனி ஆளுமையே. அவன் மிக விரிந்து பரந்துள்ள இந்த உலகில் வேறுயாரைப் போலவும் இல்லாமல் தனித்துவ இயல்புகளுடன் காணப்படுகிறான். இயற்கையின் விசைகளுக்கிடையே அவன் தனித்துவப் பண்புகளுடன் வளர்ந்து வருகிறான். மற்றைய மனிதர்களுடன் சேர்ந்தும் பிரிந்தும், தன் வாழ்வு எல்லைக்குரிய காலப்பகுதியில் தனக்கேயுரிய ஒரு முறையில் அவன் வாழ்கின்றான். இயற்கை ஒரு தனிப்பட்ட காலத்திலோ ஒரு தனி உயிரிலோ, ஒரு குழுவிலோ அல்லது ஒரு இனத்திலோ விசேட அக்கறை காட்டிற்று என்று சொல்ல முடியாத போதும் ஒரு தனி உயிரி, ஒரு குழு அல்லது ஒரு இனம் வரலாற்றில் ஏனைய உயிர்களின் விசேட கவனத்தைப் பெறுவது வியப்பிற்குரிய விடயமே. அந்த வகையில் பன்னாயைில் பிறந்து, மகாஜனாக்கல்லூரியில் படித்து இங்கிலாந்தில் வாழும் இராமநாதன் என்ற இந்த மனிதர் வேறு பல மனித உயிர்களின் கவனத்தைப் பெறுவது எப்படி?

மனிதர்கள் எல்லோரும் தம்மை மையமாகக் கொண்ட ஒரு உலகையே காணுகிறாகள். தமது தனிப்பட்ட மகிழ்வையும், குடும்பத்தின் மகிழ்வையும் இலக்கு வைத்துக் கொண்டு ஓடித் திரிகிறார்கள். அவ்வாறு அவர்கள் இருப்பது மிக இயல்பானது. ஆயினும் புத்திசாலிகள் சமூகத்தினை மகிழ வைப்பதே தமது இலக்காக கொள்ளுகிறார்கள். மணிவிழாக் காணப்போகும் இராமநாதன் அவர்கள் புத்திசாலி. அந்தப் புத்திசாலித்தனம் மகாஜனக் கல்லூரி ஆசிரியர்களில் இருந்து தொற்றியிருக்கலாம்.
2002 ஆம் ஆண்டு ஒரு கருத்தரங்கில் பங்கு பெறுவதற்காக நான் ஒக்ஸ்போட்டுக்கு வரவேண்டி இருந்தது. இங்கிருந்து புறப்படும் போதே மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்கள் என்றால் அவர்களை விமான நிலையத்தில் வந்து வரவேற்பவர் இராமநாதன் அவர்கள்தான் என்ற தகவலை எனக்குப் பலர் சொன்னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வந்து சேர்ந்து பத்து நாளுக்கு மேல் அந்த நாட்டில் நின்று திரும்பியபோது

***நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்***
***பண்புடையாளர் தொடர்பு***

என்ற குறளின் அர்த்தத்தை அதிகம் புரிந்து கொண்டது போல உணர்ந்தேன். பண்புடையாளர் பலர் இலண்டனில் இருந்தார்கள். அவர்களில் இராமநாதன் அவர்கள் முக்கியமானவர். வாழ்வின் ஒவ்வொரு அடியையும் அர்த்தத்தோடு நகர்த்தும் போதே வாழ்வியல் உயிர்ப்படைகின்றது என்று அறிந்திருக்கிறேன். திரு. இராமநாதன் திருமதி விஜயலட்சுமி தம்பதிகளோடு தங்கியிருந்த அந்த இரண்டு, மூன்று நாள்களில் அவர்கள் மற்றவர்களுக்கு உதவுவதில் எப்படி ஒவ்வொரு அடியையும் அர்த்தத்தோடு நகர்த்துகிறார்கள் என்பதைப் பார்த்து வியந்தேன். அவர்கள் எனக்குத் தந்த David.D.Burns இன் Feeling Good என்ற நூல் என்னைப் புரிந்து கொண்டு இலங்கையில் எனது செயற்பாடுகளுக்கு மிகவும் உதவும் ஒரு பரிசு என்று இங்கு வந்த பிறகு தான் தெரிந்தது. அந்த நூலுக்காக மிகப்பெரிய நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

சமூக சேவையில் ஈடுபடும் போது நாமே அதிக நன்மை பெறுகின்றோம் என்பதைப் புத்திசாலிகள் புரிந்து கொள்கின்றனர் என்று சொன்னோமா? அதனால் இராமநாதன் தம்பதிகளின் சுய எண்ணம், சுய கணிப்பு, சுயகௌரவம், மகிழ்வு ஆகியவை அதிகரித்திருக்கும். மணி விழாவின் பின்னரும் வாழ்வுக்காலம் பெரிதாய் அதிகரிக்கும் என்பது நிச்சயம்.

***தானே தனக்குப் பகைவனும் நண்பனும்***
***தானே தனக்கு மறுமையும் இம்மையும்***
***தானே தான் செய்த வினைப் பயன் துய்ப்பானும்***
***தானே தனக்குத் தலைவனும் ஆமே***

தானே தனக்குச் சிறந்த நண்பனாய் வாழும் இராமநாதன் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும். இவர் ஒரு மகாஜன மைந்தன் என்பதில் எமக்கும் பெருமை.

**திருமதி கோகிலா மகேந்திரன்**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர்**
**வலிகாமம் கல்விவலையம்**
**மருதனார் மடம்**
**சுன்னாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*K. PITCHAI KURUKAL*
*CHIEF PRIEST*
*SRI KARPAGA VINAYAGAR TEMPLE*
*PILLAYARPATTI 630207, SIVAGANGAI DISTRICT*
*SOUTH INDIA*

உ

## மணிவிழா வாழ்த்து

வளமான சைவமும் தமிழும் தமிழகத்தைப் போலவே தழைத்தோங்கும் திருநாடு இலங்கையாகும். அழகிய திருக்கோவில்களும் சிவநெறியும் கவின் கலைகளும் பண்பாட்டுச்சிறப்பும் மிக்க ஈழநன்னாட்டில் தோன்றி உலக வல்லரசுகளில் வலிமையுடன் விளங்கும் பிரிட்டனின் தலைநகரமான லண்டனில் சிறப்புடனும், புகழுடனும் வாழும் நமது மதிப்பிற்குரிய திரு.V.R.இராமநாதன் திருமதி.விஜயலெட்சுமி தம்பதியின் மணிவிழா 08.10.2006ல் நடைபெறுவது ஆன்மீக அன்பர்கள் அனைவர்க்கும் மகிழ்வைத்தருகிறது.

சைவமுன்னேற்றத்திற்கு லண்டனிலும், இலங்கையிலும் பெரும் சேவை செய்து வருபவர். தனது முயற்சியாலும், நல்ஒழுக்கத்தாலும் அனைவருடைய பாராட்டையும் பெற்ற மாமனிதர். அவருடைய பணிகள் போற்றத்தக்கவை. மணிவிழாத்தம்பதிகள் எதிர் வரும் காலங்களில் முறைப்படி சதாபிஷேகம், மஹாபிஷேகம், கனகாபிஷேகம், காண எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகவிநாயகர் திருவருள் புரிய பிரார்த்தித்து மகிழ்கிறோம்.

K. Pitchai Kurukal.

K.பிச்சை சிவாசாரியர்,
தலைமை அர்ச்சகர்,
ஸ்ரீகற்பகவிநாயகர்திருக்கோயில்,
பிள்ளையார்பட்டி.
28.09.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றனைத் தூறும் அறிவு"

# J/ Pannalai Sir Kanagasabai G.T.M School

*Tellippalai*


# யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை

தெல்லிப்பழை

**Mr. S. Sivarajan - Principal** — 10.08.2006

NADAKA KALAVIDDAHAR
Dip - in - Agri (Kundasale)
Dip -in - Agri (J.C.A.I)
Sp.Tr.Primary Education

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என ஔவையார் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகின்றது. மனிதப்பிறவி எடுத்த நாங்கள் இவ்வுலகில் வாழும்போது நாம் நல்ல முறையில் வாழ்வதோடு, சமூகத்துக்கும் பயனுடையவர்களாக வாழவேண்டும். இந்தவகையிலே சைவதுரந்தரர் வ. இ. இராமநாதன் அவர்களை ஈழத்தின் பன்னாலை மண்ணில் நின்று பார்க்கிறோம். ஒரு மனிதனில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுடன் ஆன்மிகமும் இணைந்து காணப்படின் அவன் சிறந்த ஆளுமையுடையவன் என்று உளவியலாளர்கள் கருவது பொருத்தமானது. தொண்டர் திலகம் வ. இ. இராமநாதன் அவர்கட்கு 1964-ஆம் ஆண்டு அன்றைய எனது பாடசாலை தலைமையாசிரியர் கா.கதிர்காமத்தம்பி அவர்கள் வழங்கிய நற்சான்றிதழ் பிரதியை இங்கு இணைத்துள்ளேன்.



"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பார்கள். இதனை மூத்த அதிபரின் ஆதாரம் வெளிப்படுத்தி நிற்கின்றது. இன்று சொந்த மண்ணில் இல்லாவிட்டாலும் இங்கிலாந்தில் சைவமும், தமிழும் வளர்ந்தோங்கப் பாடுபடுவதை அறிந்து மகிழ்வடைகிறோம். தனது பிறந்த ஊர், ஆரம்பக்கல்வி கற்ற பாடசாலை ஆகியவற்றை மறக்காமல் தாராள சிந்தனையுடன் பாடசாலை வளர்ச்சிக்கு உதவும் இவரையும் இப்பணிக்கு பக்கபலமாக விளங்கும் துணைவியார் விஜயலட்சுமி அம்மையாரையும் மறந்துவிடமுடியாது. பன்னாலை மக்களும் பாடசாலைச் சமூகமும் வாழ்த்துகின்றது.

மணிவிழாக்காணும் இவர் பவளவிழா, நூற்றாண்டு விழா என்பவற்றைக் காண வேண்டும் என பன்னாலை வர்த்தலம் விநாயகப் பெருமானை வேண்டி யா/ பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய சமூகத்தின் சார்பில் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்,

S. Sivarajan

*S. Sivarajan*
Principal
J/Pannalai Sir Kanagasabai G.T.M.S
TELLIPPALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் கோட்டம்

(அன்பு ஆஸ்ரமம்)
No: 61/2 Yard Road, Kalmunai, Sri Lanka.
Tel: 00940672229903 Mobile: 00940776967121
E-mail: naalvarkotam@hotmail.net

## ஆசியுரை

***மணி விழாக் காணும் மன்னன், புகழ் நீடு வாழ்க!***
***"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்***
***போன்றாது நிற்ப தொன்று இல்"***

என்னும் வள்ளுவர் வாக்குக்கமைய உலகத்தில் அழியாமல் நிலைத்து நிற்பது, தனக்கு நிகரில்லாது ஓங்கிய புகழைத் தவிர, வேறு ஒன்றும் இல்லை. இத் தகைய புகழை, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தேடிக்கொண்ட உயர்திரு. இராமநாதன் என்ற பெருந்தகையாளருக்கு, பெரியோர்கள் மணிவிழா எடுப்பது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது. சைவ முன்னேற்றச் சங்கத்தை தோற்றுவித்து, "சைவ சமய கருத்துணர்வின் ஊடாக சமூக சேவை" என்ற மகுடத்தில் சர்வதேச ரீதியில் சைவமும், தமிழும் தழைக்க அண்ணர் ஆற்றிய பணிகளை பாராட்டாது இருக்க முடியாது. நான்கு தசாப்தங்களுக்கு மேலாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், இடம்பெற்ற மாநாடுகள், கருத்தரங்குகள், கோயில் விழாக்கள், வாழ்வியல் வைபவங்கள் அனைத்திலும், தலைமை வகித்தும், தன்னை ஈடுபடுத்தியும், தன்னலமற்ற பணிபுரிந்த இந்த மகானின், சுனாமி கால சேவையை எமது சைவத்தமிழ் உறவுகள் என்றும் மறக்காது.

இவ்வேளையில், அண்ணாருக்கு ஆதரவு வழங்கி, அவருடன் சேர்ந்துழைத்த கனவான்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு நினைவு கூருகின்றோம்.

இதன் தொடர்ச்சியாக அண்ணாரால் உருவாக்கப்பட்ட மாபெரும் சமூக சேவைத்திட்டமே எங்கள் "நால்வர் கோட்டம்" என்னும் அன்பு ஆஸ்ரமம் ஆகும். இதன் பணிகள் பல. அவை பரந்து விரிந்தவை. இது அவர்களின் சீரிய சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்கும், ஒரு நிழல் விருட்சமாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பதையும், இங்கு வாழும் அன்பு நெஞ்சங்களின், காப்பையும் கணிப்பையும், நாடி நிற்கிறது என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்வதோடு, மணிவிழாச் சிறக்கவும், மன்னவர் நீடு வாழவும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க சைவம்!

**பணித்தளத்தில் இருந்து**
**பரதன் கந்தசாமி**

**25.செப்டெம்பர்-2006.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் சிவநெறிச்செல்வர்

***அன்பன் இராமநாதனுக்கு,***

இளமை முதல் இன்று வரை சிவநெறிக்கும், செந்தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பெரும் பணியாற்றி வரும் தங்களின் அகவை அறுபது மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இளமையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆரம்பித்த பணி கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் உறுப்பினராகி தொண்டாற்றி இலண்டனுக்கு மேற்படிப்புக்காக வந்த பொழுதும் சமூகப்பணி, சமயப்பணி அறப்பணி செய்ய நினைத்து தாய்ச் சங்க அனுமதியுடன், இலண்டனில் இருந்த தாய்ச் சங்க உறுப்பினர்களையும் இணைத்து இருபத்தொன்பது வருடங்களுக்கு முன் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியில் சைவ முன்னேற்றச் சங்கத்தை அமைத்த பெருமைக்குரியவர். இத்துடன் நின்றுவிடாமல் அகில உலக சைவத் தமிழ் மக்கள் எல்லோரையும் இணைத்த இலண்டன் மெய்கண்டார் ஆதீன கர்த்தாவும், அகில உலக சைவப் பேரவையின் ஸ்தாபகருமான சுவாமி சிவநந்தி அடிகளாரோடு இணைந்து பிரித்தானிய அகில உலக சைவப்பேரவையின் தலைவராகவும், அகில உலக தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக்கும், முதலீட்டு பங்குதாரருமாகி தமிழ் மொழிக்கு சிறப்புப் பணி செய்தமையும் பாராட்டுக்குரியன.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க தன்னடக்கத்துடன் வாழ்கின்ற தங்களுக்கு உறுதுணையக இருந்து பெருமை சேர்க்கின்ற வாழ்க்கைத் துணைவிக்கும், நன் மக்கட்கும், மணி விழா சிறப்புற நடந்தேறவும் சர்வ வல்லமை படைத்த ஸ்ரீ கனதுர்க்கை அம்மனின் பாதாரவிந்தங்களை வணங்கி சகல செல்வங்களும் கிடைக்கவும் தாங்கள் மேன்மேலும் சைவத்திற்கும், தமிழிற்கும் சேவை செய்யவும் பிரார்த்திக்கின்றோம்

**கலாநிதி. அப்பையா தேவசகாயம்**
**இணைஸ்தாபகர், அறங்காவலர் சபைத்தலைவர்**
**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்**
**அகில உலகசைவப்பேரவை**
**தலைமையக உப-பொதுச்செயலாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# எங்கள் இராமண்ணா

தோன்றிற் புகழோடு தோன்றுக என வள்ளுவர் கூறியுள்ளார். ஆனால் புகழுடன் மட்டுமல்லாது சேவை உணர்வு, தியாகம், அன்பு, தாராளமனப்பான்மை, பரிவு, செயல்திறன் போன்ற சமூகத்திற்கு வேண்டிய சகல குணங்களையும் ஒன்றாகப் பெற்று புகழுடன் வாழ்பவர் எங்கள் ராமண்ணா.

இலங்கையில் மட்டுமல்ல அவர் வாழும் இங்கிலாந்திலும் அவரின் சேவை ஒரு கலங்கரை விளக்கமாக ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது.

சைவத்திற்கும், தமிழிற்கும் தமிழர் பண்பாட்டிற்கும் ஆதி மூலமாகத் திகழும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் மூலகர்த்தாகவாக விளங்கும் இராமண்ணா 31-08-2006 அன்று தனது 60ஆவது வயதினை நிறைவு பெறுகின்றார். அவருக்கு எமது மனம் நிறைந்த அன்பான வாழ்த்துக்கள்.

1992 ஆம் ஆண்டு இலங்கை இந்து சமய கலாசார அமைச்சர் திரு. தேவராஜ் அவர்களும் அவர் மனைவியும் எனது வீட்டில் தங்கி இருந்த போது அவரை முருகன் கோயிலுக்கு அழைத்துச் செல்வதற்காக இராமண்ணா அவர்கள் என் வீட்டிற்கு வந்தார். அப்போது தான் அவர் எனக்கு முதன் முதலில் அறிமுகமானார். அன்று முதல் இன்று வரை எனக்கு எனது அண்ணாவாகவே அன்பிலும் சரி கடமைகளைச் செய்வதிலும் சரி நடந்து வருகின்றார்.

இராமண்ணாவிடம் இருக்கும் பண்புகள் தான் அவரது சைவத் திருப்பணிகளும் ஏனைய பணிகளும் இலங்கையிலும், இங்கிலாந்திலும் தொடர்ந்து நடைபெற காரணமாகவுள்ளன. அன்பாக திறந்த மனத்துடன் பேசும் தன்மையும், கடமை உணர்வும், எல்லோரையும் சமமாக மதிக்கும் நிலையும், முக்கியமாக சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சிறந்த கொள்கையும், நேரம் தவறாமை போன்ற சிறந்த பண்புகளும் தான் அவருக்கு என்று ஓர் தனியான இடத்தை எல்லோர் மத்தியிலும் தேடிக்கொடுத்துள்ளது. விஜி அக்காவையும் இராமண்ணாவையும் சேர்த்துப் பார்க்கும் போது அவர்கள் சிறந்த முன்மாதிரியான தம்பதியாகத் திகழ்கின்றார்கள். ஓர் ஆணின் வெற்றிக்கு பின் ஓர் பெண் இருப்பார் எனக்கூறுவார்கள். இதற்கு உதாரணமாக இருப்பவர் விஜி அக்கா. எனது வீட்டிற்கு முதன் முறையாக இவர்கள் பால் காய்ச்சி ஆரம்பித்து வைத்தார்கள். வெளிப்படையாக திறந்த மனம் கொண்ட ஆசீர்வாதமும், அன்பும் எம்மை நிறைவுடன் வாழ வைத்தது என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இருவரும் சேர்ந்து ஆரம்பித்து வைத்துள்ள பல விடயங்கள் தொடர்ந்து சிறப்புடன் நடைபெறுவதனை மற்றவர்கள் கூறக்கேட்டுள்ளேன். எங்கள் இராமண்ணாவின் சோர்வுவாராத உடலும் துவளாத உள்ளப்பாங்கும், உண்மையான அன்பும், பலன் எதிர்பாராத கடமை உணர்வும் என்றும் என்னால் மறக்க முடியாது.

இவரது சைவத் திருப்பணிகள் சிறப்புடன் தொடரவும்,ஏனைய சேவைகள் மேன்மையடையவும், அத்துடன் மனநிறைவுடன் நீடூழிகாலம் அவரது குடும்பத்துடன் வாழவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**சுவர்ணா நவரட்ணம்**
**B.Ed (Hons), M.A (Edu) SLEAS**

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
Love is God

**வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்**
**Varathalan Katpaka Vinayakar Temple**

ஆதீனகர்த்தா
சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்
சிவஸ்ரீ ம. மகேந்திரன்சர்மா

பன்னாலை Pannalai
தெல்லிப்பழை Tellippalai

திருப்பணிச் சபை
Restoration Committee

தலைவர்/President
சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்
Sivasri R. Sabaratna Kurrukkal

உபதலைவர்/Vice President
சிவஸ்ரீ ம. மகேந்திரன் சர்மா
Sivasri M. Mahendran Sarma

செயலாளர்|Secretary
திரு. செ. சிவபாலன்
Mr. S. Sivabalan

உப செயலாளர்
Deputy Secretary
திரு. க. விக்கினேஸ்வரன்
Mr. K. Vickneswaran

பொருளாளர்/Treasurer
திரு. க. முத்துக்குமாரசாமி
Mr. K. Muthukumarasamy

உப பொருளாளர்
Asst Treasurer
திரு. கா ஏரம்பமூர்த்தி
Mr. K. Arampamoorthy

இணைப்பாளர்
Liaison Officer
திரு. ந. துரைரத்தினம்
Mr. N. Thurairathnam

# ஆசியுரை

அறிஞர்களினாலும் சைவச் சான்றோர்களாலும் வளம் படுத்தப் பெற்ற கிராமம் பன்னாலை ஆகும். பன்னாலைக் கிராமத்தில் அமரர் வயிரமுத்து இரத்தினம் அவர்கள் பிரபல்யமானவர்கள். மயிலப்பை ஞான வயிரவர் தேவஸ்தான ஆதீனகர்த்தாவாக விளங்கி ஆலயப் பணிகள், அறப்பணிகள் பற்பல புரிந்து எல்லோரதும் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்ற பெரியார் ஆவர்.

திரு. இரத்தினம் அவர்களும் அவரது பாரியார் திருமதி செல்வநாயகி அவர்களும் ஆற்றிய இல்லற வாழ்வின் நல்லறப் பேறாக வந்துதித்தவர் சிரேஷ்ட செல்வன் இராமநாதன் அவர்கள் ஆவார். இவர்கள் பன்னாலையில் வாழ்ந்த இல்லம் ஆனந்த இல்லம் எனப்பெயர் பெற்றது. இங்கு வாழ்ந்த பெருமக்கள் பலர் அன்பினாலும் பண்பினாலும் அறநெறி வாழ்க்கையினாலும், இவ்வில்லத்தை ஆனந்தமாக்கி வந்துள்ளனர். இத்தனையோருள் இரத்தினம் இராமநாதன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தந்தை வழி நின்று ஆலயப் பணிகள் அறப்பணிகள் ஆற்றிவருவது எல்லோரும் அறிந்ததாகும். திருவாளர் இராமநாதன் அவர்கள் இங்கிலாந்து நாட்டில் ஆற்றிவருகின்ற சமய சமூகப்பணிகள் பாராட்டுதலுக்குரியதாகும். இராமநாதன் அவர்கள் உபகாரம் மதிக்கும் பெருமை மிக்கவர். அவருடைய நாமம் பெரியார்கள் பலரால் எடுத்துப் போற்றப்படும் திருநாமம் ஆகும்.
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்ற திருக்குறள் மொழிக்கு ஏற்ப யாழ்ப்பாண மக்களின் பெருமை திருவாளர் இராமநாதன் போன்ற பெருமக்களால் புனிதம் பெறுகின்றது. இவ்வாண்டு சஷ்டியப்த பூர்த்தி காணும் திருவாளர் இரத்தினம் இராமநாதன் அவர்களையும் அவர்தம் பாரியாரையும் பிள்ளைகளையும் வாழ்த்துவதோடு மணிவிழாச் சபையினரையும் வாழ்த்தி வரத்தலம் கற்பக விநாயகப் பெருமானின் பாதரவிந்தங்களை வணங்கி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

*மங்களம் ஜெய மங்களம் சுப மங்களம்.*

இ.சபாரத்தினக்குருக்கள்
**ஆதீனகர்த்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ. இ)

MANIPAY HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION, UK

M.H.C.O.B.A(U.K)

Tel: 020 8905 0452 Fax:020 7263 4404 email:tarrin@desilugroup.co



President:
D. Rabindramohan

Vice President:
W. Vignakumar

Secretary:
T. Constantine

Joint Secretary:
K. Jeganathan

Treasurer:
R.Yoganathan

Joint. Treasurer:
T. Sritharan

Committee:

Sports Co-ordinator:
T. Sivakumar

Cultural Co-ordinator:
A.Somasundaradesigar

Communications Co-ordinator:
P.Kandeepan


# மானிப்பாய் இந்துக்கல்லூரி

மானிப்பாய்க்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் திருவாளர் இரத்தினம் இராமநாதனுக்கும் என்ன தொடர்பு என்று யாவரும் நினைக்கலாம்.

2000 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினை முதன் முதலாக ஆரம்பித்தோம். அதன் முதலாவது ஆண்டு பொங்கும் பொழுது எனும் விழாவை மேடையேற்றினோம். அந்த நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினரையும், கௌரவ விருந்தினரையும் தெரிவு செய்ய வேண்டிய நிலையில் இருந்தோம். அப்பொழுது எமது ஆட்சிக் குழுவினரால் கௌரவ விருந்தினர்கள் எப்பொழுதும் இந்நாட்டில் தமிழுக்கும், சைவத்திற்கும் சேவை செய்யும் ஒருவராக இருக்கவேண்டும் என்பதை முடிவு செய்தோம். அப்பொழுது அங்கு பதினைந்து முக்கியஸ்தர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சி எமது கல்லூரியின் முதல் நிகழ்ச்சியாக இருந்தபடியால் தெரிவு செய்யப்படுபவர்கள் முக்கியமானவராக இருக்க வேண்டும் என்றும் கருதினோம். அப்பொழுது பிரேரிக்கப்பட்ட பெயர்களுள் திரு. வ.இ.இராமநாதன் அவர்களின் பெயர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு எமது முதலாவது நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். இதிலிருந்து எமக்கு தெரிவது என்னவென்றால் பலர் இந்நாட்டில் சேவை செய்து கொண்டிருந்தாலும் அவர்களின் முதன்மையானவர் திரு. வ.இ.இராமநாதன் என்றால் மிகையாகாது. தனது பத்தாவது வயதில் தனது சேவையை ஆரம்பித்த திரு. வ.இ.இராமநாதன் இவ் வருடம் சேவையில் தங்கவிழாவையும், வயதில் மணிவிழாவையும் கொண்டாடும் இப்பெருமகனார் சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளிவிழாத் தலைவராவர். வெள்ளி, தங்கம், மணி என்னும் பதக்கங்களைப் பெற்ற திரு. வ.இ.இாமநாதன் அவர்கள், பவள, முத்து, வைர விழாக்களையும் கண்டு பல்லாண்டுகாலம் வாழ்ந்து எம் சமூகத்திற்கு தொடர்ந்து பணியாற்ற எமது கல்லூரியின் சார்பிலும் கல்லூரி பழையமாணவர் சங்கம் (பிரித்தானிய) சார்பிலும் எல்லாம் வல்ல மானிப்பாய் மருதடியானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**த. ரபீந்திரமோகன்**

தலைவர்

105, St.Anthony's Ave, Woodford Green, Essex IG8 7EN Mob:07958 481 309

வாழ்க நம் நாடு! வாழ்க நம் பள்ளி! வாழிய வாழியவே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Information centre

Tamil Information Centre is a non-profit making company limited by guarantee.
Registered in England No. 2563348

## மணிவிழாக்காணும் இராமநாதன் வாழ்க!

புகலிடம் நாடவும் புனர்வழி தேடவும்
புதுமை விரும்பவும் புலமை அரும்பவும்
இகமெலாம் பரவும் இன்தமிழ் மொழியார்
இருளில் தயங்கி மருளில் மயங்கி
அகவொளி பிறந்திட அருள்விழி திறந்திட
அறவழி தொடங்கிட அணுகிய காலை
சகலமும் தந்தார் சமயமும் தழைத்தார்
சரளம் கொண்டு சமரசம் விளைத்தார்.
திரைகடல் தாண்டித் திருசேர் நாட்டில்
தமிழும் சைவமும் தழைத்திம் மண்ணில்
வரையென ஓங்கி வான்போல் இலங்க
வண்மையும் உண்மையும் வளமுடன் துலங்க
கரையிலா ஆன்மிகம் கலையுடன் அலங்க
களிப்பொடு மக்கள் கதிராய் விளங்க
தரையில் புகழ்பெறத் தரமாய் வந்தார்
தமிழினம் உயர்வுறத் தன்னையே தந்தார்.
அன்புடன் பண்பும் அறனுடன் திறனும்
அருட்சுவை கலந்தால் அவர்தான் ராமநாதன்
தன்பெயர் வைரமும் தரளமா மணியுடன்
தங்கமும் சேர்ந்தால் அவர்தான் ராமநாதன்
இன்ப இல்லம் இளமைப் பவன்குகன்
இணையிலாத் துணைவி இகம்வெல் லக்குமி
மன்பதை ஓங்கலில் மகிழ்வுடன் வாழ்கவே
மங்களப் பொலிவுடன் மனைவளம் ஆழ்கவே.

THULASI
Bridge End Close (Off Clifton Road)
Kingston Upon Thames KT2 6PZ, (UK)
Telephone: + 44 (0) 20 8546 1560
Fax: + 44 (0)20 8546 5701
E-Mail: admin.tic@sangu.org
Committed to Human Rights and Community Development


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහා නගර සභා මන්ත්‍රී, සාම විනිසුරු (මුළු දිවයිනටම)
**ආචාර්ය වී. කංගයිවේණියන්**
**கலாநிதி. வை. கங்கைவேணியன்,**
ச. நீ.. (அகில இலங்கை)
மாநகர மன்ற உறுப்பினர்
**Dr. V. Kanghaiverniyan**, J.P. (Whole Island)
Member of Council

අංක 765/407, ජාතික නිවාස ක්‍රමය,
බෝධිරාජාරාම මාවත, කොළඹ - 10,
ශ්‍රී ලංකාව.
இல. 765/407, தேசிய வீடமைப்புத் திட்டம்,
போதிராஜராம மாவத்தை, கொழும்பு - 10,
ஸ்ரீ லங்கா.
No. 765/407, National Housing Scheme,
Bodhirajarama Mawatha, Colombo - 10,
SRI LANKA.

දුරකථනය / தொலைபேசி / Telephone — කාර්යාලය / காரியாலயம் / Office 2690655
නිවස / இல்லம் / Residence 011-2684549, 077-3500164
ෆැක්ස් / பக்ஸ் / Fax 011-2690655
ඊ මේල්/ஈ. மெயில்/E-mail : kangai_3@yahoo.com


10-08-2006

# இராமநாத வள்ளலார்

மணிவிழாக்காணும் வள்ளலார் திரு.வ.இ.இராமநாதன் அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும்என் இனிய தமிழ் வணக்கம்! இனிய வாழத்துக்கள். என் உள்ளத்தின் உண்மைக் கருத்தை எழுதுகின்றேன். இது புகழாரமல்ல. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தொன்று இல்லை என்று மகாகவி பாரதி கூறிச்சென்றார். அதேபோல் கண்ட வள்ளல்கள் பலரில் சிலரே உண்மை வள்ளல்கள். இவர்களில் புகழ்ச்சிக்காகச் செய்பவர்களும் சிலர். ஆனால் உண்மையாக யானறிந்த வள்ளல்களிலே திருமிகு இராமநாதன் போன்ற வள்ளலை யான் பாராட்டுகின்றேன். இவரை ஓரிருதரம் இலங்கையில் சந்தித்திருப்பேன். அவர்தம் உரையாடல்களில் இருந்து அதனைக் கண்டறிந்து கொண்டேன். ஐயா அவர்களின் தமிழ்ப்பணி, தெய்வப்பணி, என்போன்ற கவிஞர்கள், எழுத்தாளர்களை ஊக்குவிப்பது இவரது பெரும்பணிகள். இவை பாரட்டப்பட வேண்டும். உலகெலாம் இந்துக்களின் கருத்துக்களை கொடிகளை அறிமுகப்படுத்துவதில் திரு. சின்னத்துரை தனபாலாவுக்கு உதவியாக இருந்திருக்கிறார். ஈழத்தில், இலண்டனில் இன்னும் பல நாடுகளில் இவரது திருப்பணி உதவிகள் எமது இந்து ஆலயங்களுக்கு நிறையக் கிடைத்துள்ளன. சாதாரணமான என்னை ஒரு கவிஞராக அறிந்த ஐயா திரு.இராமநாதன் அவர்கள் ஒரு கொழும்பு மாநகரசபை உறுப்பினரால் பாராட்டுக் பெறுகின்றார்.

**அன்பால் என்னைக் கவர்ந்த கொடைவள்ளல் இராமநாதன்**
**பொன்போல் உளங்கொண்ட அரும்பணியாற்றும் வள்ளல்**
**என்போல் இனியோர் ஆயிரக்கணக்கில் வாழ்த்தி மகிழ்வார் உண்மை**
**என்தமிழ் வாழ்க! வாழ்க வளமுடன்! வாழ்க வள்ளல் இராமநாதன்**

***கவிஞர் வேலணை வேணியன்***
***கொழும்பு மாநகரசபை உறுப்பினர்***
***அகில இலங்கை சமாதன நீதிவான்***
***தலைவர்-அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மிக்க மணி நாயகன்

திரு.வ.இ. இராமநாதன் அவர்கள் தெல்லிப்பளை தென்மேற்கு-பன்னாலையைச் சேர்ந்த திரு வைரமுத்து இரத்தினம் அவர்களுக்கும் திருமதி செல்வநாயகி இரத்தினம் அவர்களுக்கும் இரண்டாவது மகனாக 31-08-1946 இல் பிறந்தார். வீட்டில் செல்லப் பெயர் பவா. பவா அண்ணரின் நாலு தலைமுறைக்கு முன்னர் பங்காகக் கட்டப்பட்டது ஆனந்த இல்லம். வீட்டுப் படலையின் இரு மருங்குகளிலும் நிறைகுடங்கள் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அங்கு வசித்தவர்களின் மனங்களும் நிறைகுடங்களே. நூறு ஆண்டுகளுக்கு மேலாக அப்படியே பங்கு வீடாயிருப்பது அவர்களது குடும்ப ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு. ஆனந்த இல்லம் பெயரைப் போலவே அங்கு வருவோரையெல்லாம் ஆனந்திக்கும் இடம். பன்னாலை மக்கள் அண்ணரது பேரனார் திரு சிதம்பரப்பிள்ளை (தாயின் தந்தையார், நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த சிதம்பரப்பிள்ளை அண்ணை, அதட்டிக் கதைப்பார், அரவணைக்கவும் செய்வார்) பேரனார் திரு.வைரமுத்து (தந்தையின் தந்தை, ஆறடிக்கு மேலான உயரம். வெள்ளை ஆடை அணிவார். நிமிர்ந்த தோற்றம்,பிரபல வர்த்தகர்)பேத்தியார் அம்மா (தந்தையின் தாயார், தூய வெள்ளைச் சேலையில் ஔவையார் மாதிரித்தோற்றமளிப்பார்கள்) அண்ணரது தாய் தந்தையர்-இவர்களது கனிவான உபசரிப்புகளை மறந்திருக்கமாட்டார்கள். தங்கள் இல்லம் வருவோரை இவர்கள் வரவேற்று வெற்றிலை பாக்கு, தேநீர் மற்றும் சாப்பாடு முதலியன வழங்கி உபசரிக்கத் தவறுவதில்லை. அலுவல்கள் நிமித்தம் கொழும்பு செல்வோருக்கு இவர்களின் கொழும்பு வாசஸ்தலம் ஒரு புகலிடமாகும். வருவோரை இன்முகத்துடன் வரவேற்பதில் இவர்களுக்கு நிகர் இவர்களே. அண்ணரின் சமூகப் பணியின் பின்னணி இதுவேயாகும்.

இளமையில் அண்ணர் செயலாளராயிருந்து அண்ணரின் தமையனார் பொருளாளராயிருந்து தலைமை ஆசிரியர் திரு கா.கதிர்காமத்தம்பி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடாத்திய சேக்கிழார் மாநாடுபற்றிப் பலரும் குறிப்பிட்டிருந்தார்கள். பல அறிஞர்கள் பங்குபற்றிய அந்த மாநாட்டைச்சென்று பார்க்கும் பாக்கியம் எனக்கும் கிட்டியது. யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற முதலாவது பிரமாண்டமான சமய மாநாடு இதுவாகும். எனது தந்தையரர் திரு.வை.பொன்னையா அவர்கள் தன் அபிமான மாணவர் திரு.இராமநாதனது சேவைகளைப் பாராட்டி எடுக்கப்பட்ட விழாவொன்றில் ஞானவைரவர் கூட்டுப்பிரார்த்தனைச் சபையில் இணைந்து 12 வயதில் இவரது சமயப்பணியைத் தொடங்கியதாகவும் பன்னாலையிலிந்து படித்த ஆறுவருடங்களும் தலைமை ஆசிரியர் திரு.கதிர்காமத்தம்பி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திருப்பள்ளியெழுச்சி-திருவெம்பாவை பாடும் இயக்கத்திற்குத் தலைமை தாங்கித் திறம்பட நடாத்தியதாகவும், தன்னைப் போன்ற ஆசிரியர்கள்கூட திரு.இராமநாதனுக்குப் பின்னால் செல்லக்கூடியளவுக்கு அவரது ஈடுபாடுகள் அமைந்ததையும், எமது கிராமத்திலே இயக்கம் ஒன்றை ஆரம்பித்து மரணச்சடங்குகளின்போது இறந்தவர்களின் உடலைத் தேவாரதிருவாசகஙங்கள் பாடி, சங்கு சேமக்கலம் மணி முதலியன ஒலிக்க இறந்தவரின் உற்றார் உறவினரே காவிச்செல்லவேண்டும் என்று வலியுறுத்தி அதை முன்நின்று நடத்தித் தனது எண்ணத்தைச் செயற்படுத்தி வெற்றிகண்டவர் என்பதையும் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சோதரர்களான திரு.பத்மநாதன், திரு. லோகநாதன் ஆகியோருடன் சேர்ந்து ஊரிலுள்ளவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பணஉதவி உட்படப் பல்வகை உதவிகளையும் வழங்கியுள்ளார். 1984 ஆம் ஆண்டு மருத்துவ தேவைக்காக எனது தந்தையாருக்கு இவர்கள் பணம் அனுப்பியிருந்ததை இத்தருணத்தில் நினைவு கூர்ந்து தொடர்கிறேன். தான் படித்த மகாஜனக்கல்லூரிக்குப் பழையமாணவர் சங்கம் மூலம் ஆற்றிவரும் சேவை யாவரும் அறிந்ததே. இச் சகோதரர்கள் தாம் ஆரம்பக்கல்விகற்ற பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலைக்கு இலட்சரூபாய்களைச் சென்ற வருடம் வழங்கியிருந்தனர். அத்துடன் திரு.இராமநாதன் தான் சார்ந்த பொது அமைப்புகள் ஊடாக நம்நாட்டிலுள்ள ஊனமுற்றோர், அநாதைப்பிள்ளைகள் போன்றோருக்கு உதவிகளை வழங்கி வருகிறார்.

தான் வதிகின்ற இந்நாட்டில் இன்ப நிகழ்ச்சிகளில் மட்டுமின்றி துன்ப வேளைகளிலும் பிரசன்னமாயிருந்து ஆவன செய்யும் இராமநாதன் அண்ணா எல்லோருக்கும் முன்பு நிகழ்ச்சிகளுக்கு வந்து அலுவல்களைக் கவனிக்கத்தொடங்கிவிடுவார். இவர் ஒரு மரணச்சடங்குக்குச் சென்றால், சம்பந்தப்பட்டோர் மறந்துவிடக்கூடும் என எண்ணி மயானத்திற்குச் செல்லும்போது பழம், வெற்றிலை, பாக்கு, சாம்பிராணி, கற்பூரம் என்பவற்றைத் தன்னுடன் எடுத்துச்செல்வது வழக்கம். நிகழ்ச்சிகள் குறையில்லாது முறைப்படி நடாத்தி முடிப்பதில் குறியாக இருப்பதுடன் அதற்கான முன்ஆயத்தங்கள் பல செய்து வைப்பார்.
இவர் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழுக்கும் சைவத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பரியன. பொதுச் சேவைக்காக இவர் பயணித்த தூரம் (வான்வழி, தரைவழி) பல லட்சம் கிலோமீற்றர்களைத் தாண்டி யிருக்கும். பெரியவர் சிறியோர் என்ற வித்தியாசமின்றி இவரிடம் உதவிநாடி வருவோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதைக் குறிப்பிட்டு, வயதில் இளையவராயினும் தொண்டில் முதியவர் எனச் சட்டத்தரணி திரு.செ.சிறீஸ்கந்தராஜா ஒரு விழாவில் பாராட்டிக் கூறினார். ஓய்வின்றி உழைக்கும் இவரிற்கு உந்து சக்தியாகத் திகழ்பவர்கள் அண்ணி திருமதி விஜயலட்சுமி இராமநாதனும் அருமைப்புதல்வர்கள் பவனும் குகனுமாவர்.

அண்ணரின் சேவைக்காக வழங்கப்பட்ட பட்டங்கள் பல. வகித்த, வகித்துவரும் பதவிகள் இன்னும் பல. தன்னலமற்ற சேவையாற்றி வரும் அண்ணரால் பன்னாலைக்குப் பெருமை. பொதுநலம் பேணும் அண்ணா ஒரு பொதுச்சொத்து. அதனால் அவர் மணிவிழா நாயகனாகிறார். மணிவிழாக் குழவினர்க்கு பன்னாலை மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து
இராமநாதன் அண்ணா நீண்டகாலம் நலத்துடன் வாழவேண்டும், அவரது பொதுப்பணி தொடர வேண்டும் என இறைவனை வேண்டி, பன்னாலை மக்கள் சார்பில் அவரை வாழ்த்துகின்றேன்.

பொன்னையா குகநேயன்.

**நன்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

சைவசமயப் பணியிலும் சமூகப்பணியிலும் திருவருளின் அனுகிரகத்தால் கருவினிலேயே அருள் பெற்று வெள்ளிவிழாக் கண்டுவிட்ட லண்டன்வாழ்வள்ளல்

**பெருந்தகை வ. இ. இராமநாதன் விஜயலட்சுமி தம்பதிகள்**

31.08.2006 மணிவிழாக் காண்கையிலே எந்நாளும் இதயத்தில் குடியிருத்தி அன்பு செய்யும் கொலன் (Holland) டென்கெல்டர் (Den Helder) வாழ் அன்புறவுகள்

திரு திருமதி சிவநேசன் குடும்பத்தவர்கள் அன்புபொங்க அகமகிழ்ந்து வாழ்த்திய வாழ்த்துப்பா.

*விண் வளர்ந்த மிகுசைவநெறி தழைத்தோங்கும்*
*வீரம் விழை புகழ்சேர் ஈழவள யாழ்ப்பாணத்து*
*பொன்னூராம் தெல்லிப்பழை பன்னாலைக் கிராமத்திலே*
*இரத்தினம் செல்வநாயகி என்னும் புண்ணிய சீலர்*
*இன்னார்ந்த தவப்பயனால் உதித்த இடைச்செல்வம்*
*இணையிலா இராமநாதன் விஜயலட்சுமி தம்பதிகள்*
*மண்வாழ்வில் மங்களமாய் மணிவிழாக் காண்கையிலே*
*மனம் கனிந்து வளம்பெருகவென வாழ்த்துகின்றோம்.*

*கல்வியில் உயர்அறிவும் கண்ணியம் நிறை பணியும்*
*கருணைசேர் நோக்கும் காக்கும் நற்குணமும்*
*இல்லாளின் அன்பினையும் நெறிபிறழா இல்வாழ்வும்*
*இல்லையெனா வார்த்தையும் இணையிலா மக்கட்பேறும்*
*சொல்லில் அடங்கிடாத செந்தமிழ் சேவையதும்*
*சொக்கவைக்கும் சைவசமயப் பெரும்பணியும்*
*வல்ல பைரவரின் திருவருளும் நிறை தம்பதிகளே*
*வாழ்க நீடூழியென வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்.*

*கருணையுள்ளம் கொண்டவரே காசினியின் நல்லமுத்தே*
*கனிதரும் சுவைபோல் காலமெல்லாம் வாழ்ந்திடனும்*
*தருமத்தைக் காப்பதற்காய் தரணிக்கு வந்தவரே*
*தாயன்பின் உயர்வாக தரணியிலே வாழ்ந்திடனும்*
*கருமத்தில் கண்ணாகி சைவசமயத்தை வளர்ப்பவரே*
*கலங்கரையின் விளக்காய் வழிகாட்டி வழ்ந்திடனும்*
*திருவருளை நிலைநாட்ட அருள்கொண்டு வந்தவரே*
*செல்வவிநாயகரின் அருள்பெற்று நீடு வாழியவே.*

*திங்களின் ஒளிபோல தேன்மதுர இசைபோல*
*இன்பமொடு தேவியுடன் இனிதுவாழ வாழ்த்துகின்றோம்*
*தங்கத்தின் எடைபோல அங்கத்தில் குறைவின்றி*
*அருமைமக்களோடும் சுற்றமோடும் வாழ வாழ்த்துகின்றோம்*
*மங்காப் புகழ் கொண்ட சங்கத் தமிழ்போல*
*மண்ணில் புகழ்பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்*
*எங்கள் மனங்களில் இனிக்கும் கரும்பாகி*
*இன்னும் பலகாலம் வாழ்கவென வாம்த்துகின்றோம்.*

**கவிதாயினி திருமதி விமலாதேவி சிவநேசன்** Den Helder, Nederland.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# புதினம் பத்திரிகை

## ஆரவாரமில்லாத தமிழ் தொண்டன்

எண்ணிலடங்காத பணிகளைச் செய்தும், செய்து கொண்டுமிருக்கும் போலித்தனமில்லாத மனித நேயமுள்ள பெருந்தகை இவர் ஆனாலும், என்றும் எப்பொழுதுமே பந்தா எதுவுமின்றி, இவரை அணுகவும், இவரிடம் உதவிகள் பெற்றுக்கொள்ளவும் கூடிய ஒரு சாதாரண மனிதராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதனால் அவர் என்னைப் போன்ற எண்ணற்ற தமிழர் இதயங்களில் குடிகொண்டிருக்கிறார். ஈழத்தில் தெல்லிப்பழையில், பன்னாலைக் கிராமத்தில், சயம்புநாதர் வைரமுத்து இரத்தினம்-செல்வநாயகி தம்பதிகள் பெற்ற இரத்தினங்களில் நடுமுத்துத்தான் இந்த வ.இ.இராமநாதன். பெற்றவர்களிடமிருந்து தான் பிள்ளைகளின் பண்புகள் தோன்றுகின்றன. என்பது இந்த முத்துக்களுக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். ஊரார் வீட்டுப்பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற தன் தந்தையிடமிருந்து படித்த பாலபாடம் இவரது சேவையின் ஆரம்பப் பாடம்.

தமிழன் என்ற தன்மான உணர்வும், சைவ சமய சிந்தனையும், பணிவும் அவரது சிறுவயதிலிருந்தே இரண்டறக் கலந்து வளர்ந்தது. கொழும்பு பொரளையில் வெஸ்லி கல்லூரியில் (1956) ஆறாம் வகுப்புப் படிக்கும் போதே பூங்கா என்ற கையெழுத்துச் சஞ்சிகையைத் தன்னோடு படித்த விமல்சொக்கநாதன், திருச்செல்வம், தன் சகோதரர் பத்மநாதன் போன்றவர்களுடன் நடத்தினார். 1957 இல் அக்கல்லூரியில், தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் கற்பிக்க முற்பட்டபோது அதனை எதிர்த்து, தன் நண்பர் குழுவுடன் போராட்டம் நடத்தி துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து, சிங்களத்தைப் படிக்கவிடாமல் தடுத்தார்.

1958 இல் இனக்கலவரம் கொழும்பில் வெடிக்க அவர் பெற்றோருடன் யாழ்ப்பாணம் சென்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்து, அங்கேயே படிப்பைத் தொடர்ந்தார். அக் காலத்தில் சாரண இயக்கத்தில் சேர்ந்து சேவை உள்ளத்தை முழுமையாக்கிக் கொண்டார். கிராமத்தில் சமய,சமூக, அரசியல் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அந்தச் சிறுவயதிலேயே சாதிக்கொடுமைக்கு எதிராக, அவர் தம் நண்பர்களுடன் சேர்ந்து நடத்திய போராட்டம், பல உறவுகளையும் பெரியவர்களையும் சினத்தில் ஆழ்த்தியது. ஆனாலும் அவர் செய்த புரட்சி ஆரவாரமில்லாமல் ஆர்ப்பரித்து வெற்றி கண்டது.

பன்னாலை மயில ஞானவைரவர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை சபை ஒன்றை ஆசிரியர். கா. கதிர்காமத்தம்பியின் உதவியுடன் ஆரம்பித்து அதன் செயலாளராக இராமநாதன் தெரிவாகி அப்பணியை ஆரம்பித்தபோது அவருக்கு 14 வயது கூடஇல்லை. அவ்வாலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கூட்டுப்பிரார்த்தனை செய்தும், அவ்வப்போது சிறந்த பேச்சாளர்களை அழைத்துச் சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்களை நடத்தியமை பொதுவாழ்விலும், சமய வாழ்விலும், சமயப்பணியிலும் இவருக்கு அனுபவ அரங்காக அமைந்தது. சேக்கிழார் அருளிய பெரியபுராண 163 நாயன்மார்கள் வரலறுகளை கிழமைதோறும் ஆலயத்தில் பேச்சாளர்களை அழைத்து சொற்பொழிவுகளாக வழங்கவைத்தார். அத்தோடு 1946ஆம் ஆண்டு பெரியபுராண சொற்பொழிவுப் பூர்த்தியை சேக்கிழார் மகாநாடு ஆக முதல்நாள் மேற்படி ஆலயத்திலும், இரண்டாவது நாள் முழுநாள் நிழ்வாக பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழக் கலவன் பாடசாலை மண்டபத்திலும் நடத்திய போது இவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராக இருந்து வெற்றிக்கு உழைத்தமை, இவர் ஆரம்ப வாழ்வின் முக்கிய ஒரு அத்தியாயம். இந்த மநாட்டில் தான் நமது நாதஸ்வரக் கலைஞர் என்.கே.பத்மநாதனுக்கு நாதசுர கான கலாநிதி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அக்காலத்தில் பன்னாலைக் கிராமத்தில் நடந்த மங்கள, அமங்கல வைபவங்களில், குறிப்பா கிராமத்தில் நடந்த மரணக்கிரியைகளில் இவர் சரீர உதவி உறவுகளின் உள்ளங்களை நிறைத்தது. அரசியலில் அக்காலத்தில் கிராமசபை, பாராளுமன்ற தேர்தல்களில் தமிழரசுக்கட்சியின் வெற்றிக்குத் தொண்டானகத் திகழ்ந்தார். தந்தை செல்வா தன் கையெழுத்தால் இவருக்கு வழங்கிய சான்றிதழ் இன்றும் சாட்சி பகர்கின்றது. 1964 இறுதியில், மீண்டும் கொழும்பில் தொழில் பெற்றுச் சென்றவர் பத்தாண்டு தொடர்ச்சியாக அமரராகி விட்ட க.பாலசுப்பிரமணியத்தின் உரிமையான உறவோடு கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தில் பொருளாளராகக் கடமை புரிந்தார். அங்கு சங்கத்தின் நால்வர் பாடசாலை ஆசிரியராக நால்வர் நெறி மலர் இணை ஆசிரியராக தொண்டரணி சபைத் தானைத் தலைவராகப் பணிசெய்தார்.

1975ஆம் ஆண்டு ஜனவரியில் கொழும்பில் இருந்து மேற்கல்வி பெறுவதற்காக இராமாதன் இலண்டன் வரும்போது இவர் பிரிவைத் தாங்க முடியாமல் அழுத இதயங்கள் பல! இவரோடு பழகினால் இலகுவாக இவரை மறந்துவிட முடிவதில்லை.

இருபத்தாறு வருடங்களுக்கு முன்னர் விஜயலட்சுமி என்ற நல்லாளை இராமநாதன் லண்டனில் மணமுடித்த அதே தினத்தில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய கோயிலில் இராமநாதன் தம்பதிகள் இல்லாமலே இவர்களது திருமணக்கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. மணமக்களின் பெற்றோர், மணமகன் இராமநாதனின் சகோதரார்கள், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள், உற்றார் உறவினர்கள் அனைவருமே திரண்டிருந்த நிகழ்ச்சியில் பலரும் பேசினார்கள். இராமநாதன் தனி மனிதரல்ல. அவர் ஒரு இயக்கம். அதனால் தான் இன்று ஆறாயிரம் மைல்களுக்கப்பால் லண்டனில் அவர் திருமணம் இப்போது நடந்து கொண்டிருந்தாலும் மணமக்கள் இல்லாமலே இங்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைக்காக இங்கும் ஒரு திருமண நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறது. என்று எல்லாம் புகழப்பட்டார். தமிழ் என்றும் வை முன்னேற்றச் சங்கம், நால்வர் பாடசாலை என்றும், ஆலயம் என்றும், கொழும்பில் தன் பொழுதைக் கழித்த இராமநாதனுக்கு Wickford என்ற இடத்தில் ஏதே ஒரு குற்ற உணர்வு வாட்டியது. ஆனாலும் இவர் இதயத்தின் அடித்தளத்து எண்ணம் ஈடேறும் நாள் அதிக தூரத்தில் இருக்கவில்லை. தான் வாழ ஆரம்பித்த 46 State House Road Wickford முகவரியில் சைவ முன்னேற்றச் சங்கத்தின் இங்கிலாந்துக் கிளையை 1977 இல் எழுவருடன் ஸ்தாபித்தார். கொழும்பில் இயங்கிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் உணர்வோடு, இங்கு அந்தப்பணி தொடர வேண்டும் என்ற இவரது இலட்சியத்துக்கு உரம் சேர்த்தவர்களில் முக்கியமானவர் ஆனந்ததியாகர். அவரும் கொழும்பில் சங்கத்தில் செயற்பட்டவர். அவரோடு இவரது உடன்பிறப்புக்களான அண்ணன் வி.ஆர். பத்மநாதனும், தம்பி வி.ஆர்.லோகநாதனும் இங்கு வந்து சேரவே இராமநாதனின் எண்ணங்கள் படிப்படியாக ஈடேறத்தொடங்கின.

ஒன்றா? இரண்டா? சைவ முன்னேற்றச் சங்கம் தோன்றி பின்னர் செய்து கொண்டிருக்கின்ற பணிகள் பல்கிப் பெருகுகின்றன. அந்நிய நாட்டில் அந்நியப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த எம்மவர்களுக்கு, மரணக்கிரியைகளை நமது பாரம்பரிய முறைப்படி ஏற்பாடுகளைச் செய்து நடத்தி முடிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருகின்றது சைவ முன்னேற்றச் சங்கம். நம்மவர்களுக்கு இந்தக் கிரியைகளைச் செய்வதற்கு முன்னர் இருந்த சிரமங்கள் எல்லாம் நீக்கப்பட்டு, முழு நேரமாகவே ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவானவர் சைவ முன்னேற்றச் சங்கத்தின் முழுநேர ஊழியராகக கடமையாற்றுவது லண்டன் தமிழர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இது இராமநாதவள்ளல் செய்யத கைங்காரியம்.

லண்டனில் வாழும் சிறார்களுக்கு சைவமும் தமிழும் கலைகளோடு சேர்த்துப் போதிக்க வேண்டும் என்ற இராமநாதனின் லட்சியக்கனவு தான் நால்வா தமிழ்க் கலைநிலையம். செவ்வனே அது இங்கி தன் கடமையை ஆற்றுகின்றது. கலசம் என்ற இதழை சைவ முன்னேற்றச்சங்கத்தின் காலாண்டு இதழாக 13 வருட காலத்துக்கு முன் ஆரம்பித்து, அதன் நிர்வாகியாகச் செயல்பட்டுவருகிறார். ஆன்மிகத்தினூடாக சமூகத்தின் அவலங்களைப் போக்க விழைகிறது கலசம். லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கடந்த இருபத்தொன்பது ஆண்டுகால அங்கத்துவ சேவையில் இரமநாதன் பொதுச் செயலாளர், பொருளாளர், அறங்காவலர், உதவித்தலைவர், தலைவர் என்று பதவிகளை வகித்திருக்கின்றார். இன்று ஐரோப்பாவில் ஒரு பலம் வாய்ந்த சைவ நிறுவனமாகத் திகழும் சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு ஒரு நிரந்தரப் பணிமனை வேண்டும் என்று தீவிரமாக உழைத்து வெற்றி கண்டார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளிவிழா ஆண்டுத் தலைவராக இராமநாதன் தெரிவாகி 2002 ஆம் ஆண்டு இவரது தலைமையில் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் வெள்ளமெனத் திரண்ட மக்கள் கூட்டத்திடையே கோலகலமாக நிறைவு பெற்றது. செயல் வீரரான இராமநாதன் தலைமையில் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்றதும் வெற்றியின் ஒரு காரணமெனலாம். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1987 ஆம் ஆண்டு இராமநாதன் உட்பட ஐவருடன் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது வியத்தகு விதத்தில் இங்கிலாந்தில் வியாபித்து நிற்கின்றது.

தூயமண்ணின் பெருமை சேர்க்கின்ற தமது பள்ளிக்கு அள்ளிக் கொடுக்கிறது சங்கம். பல அமைப்புக்களில் இராமநாதன் செயற்படுகின்றார். இலண்டன் மெய்கண்டார் ஆதீன அறங்காவலர்-செயலாளர். உலக சைவப் பேரவை அறங்காவலர்-பொருளாளர். லண்டன் தமிழர் தகவல் நிலையத்தின் ஒரு இயக்குனர். ஐ.பி.சி வானொலியில் ஒரு உறுப்பினர். பல்வேறு நிறுவனங்கள் பட்டங்கள் பல இவருக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளன. இந்து சமய அமைச்சு சைவ துரந்தரர், உலக சைவப்பேரவை சிவநெறிக் காவலர், இலண்டன் சிவயோகம் சிவநெறிச்செம்மல், சைவத்திருக்கோயில் ஒன்றியம் தனது ஒன்பதாவது சைவ மாநாட்டில் சமூகசீலர், எனப் பட்டங்களை வழங்கியுள்ளன. கடமா தமிழர் தகவல் அமைப்பும் இவர் சேவைக்காக விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவருக்கு பவன், குகன் என்ற இரண்டு ஆண்பிள்ளைகள். பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்கள். இவர்களோடு தன் கணவன் முகம்கோணாமல் இவர் பணிகளுக்கு உறுதுணையாக நிற்கும் விஜயலட்சுமி. ஆரவாரமில்லாமல் அள்ளிக்கொடுப்பதும், ஓடி ஓடி ஆன்மிகப் பணிகளும், சங்கப்பணிகளும் பொது நோக்கத்துக்காக உழைப்பதும், நெஞ்சமெல்லாம் தமிழீழத்தை நிறைத்து வைத்திருப்பதும், இராமநாதனின் தனித்துவங்கள். உறவுகளுக்கா உணவோடு தம்மை அர்ப்பணித்து அந்நிய மண்ணில் வாழ்கின்ற முத்துக்கள் சிலரோடு நெருக்கமாக பழகக்கிடைத்த வாய்ப்பினை என் பாக்கியமாகவே கருதுகின்றேன். என் மனத்தோடு வாழ்கின்ற அவர்களை என்னால் மறக்க முடிவதில்லை. அவர்களில் ஒருவர் தான் வி.ஆர். இராமநாதன். மனத்தால் மட்டுமல்ல அள்ளிக்கொடுப்பதிலும் அவர் ஒரு ஆரவாரமில்லாத வள்ளல். அந்தப் பெருந்தகைக்கு எடுக்கப்படும் மணி விழா பொருத்தமானதே. அவரையும், இல்லாளையும், பிள்ளைகளையும் புதினம் சார்பில் நெஞ்சார வாழ்த்துகின்றேன்

**ஈ.கே. இராஜகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**F.R.C.S.(Eng) F.R.C.Ophth**

**CONSULTANT OPHTHALMIC SURGEON**

'Shakthi Vihar"
10. Dell Road,
Stoneleigh,
Epsom,
Surrey. KT17 2ND
e-mail: indrasivayoham@doctors.org.uk
26th July 06

**Felicitations in Celebration of 60th Birthday of Thiru V.R. Ramanathan**

It gives me great pleasure, and I consider it to be,a privilege to send this message in honour of an exceptional and praiseworthy individual, who, always placed benefit to others, before himself. One who has worked tirelessly for the betterment of Saivism and Thamil, both in our motherland, Sri Lanka and our adopted motherland, the United Kingdom."Sivaneri Semmal " Vyramuttu Rathinam Ramanathan, to designate him with only one of the six titles he has been honoured with, by several organisations worldwide, has been known to my husband and me for around thirty five years. First as an indefatigable Treasurer of the Saiva Munnettra Sangam, Colombo alongside an equally dedicated Secretary Sri Balasubramaniam, the partnership continuing for more than a decade, till the enthusiasm bubbled over into the U.K with the arrival of Rathinam Ramanathan in 1975, his farewell in Colombo witnessing a very tearful Ramanathan, having to depart from the Colombo based Sangam . Undoubtedly Lord Siva, in HIS benevolence brought together a group, in which are notably Sathasivam Anandathiyagar, and Messers Pathmananthan and Loganathan, and Mrs. Wijayalakshmy Ramanathan, that could help sustain the enthusiasm in the midst of many obstacles. He did not forget the Colombo based Sangam even after his arrival in the U.K as financial help to the parent body was forthcoming, from its UK branch. Besides sustaining Saiva Worship, knowledge by way of regular classes of Saiva Neri, to the younger generation,celebrating auspicious events in the Saiva Calendar, including Guru Poojahs of the Saiva Saints, a remarkable uninterupted series of presentations of lives of the saints, enumerated in the Masterpiece Periya Puranam, by learned speakers is an achievement, bearing testimony to the unabating dedication of the prime mover of the Saiva Munnetra Sangam- Thiru Ramanathan.

His foresight has not stopped there, for when I made inquiries about helping the socially under privileged Blind individuals of the North and Vanni, by way of Braille typewriters it came to light that Thiru Ramanathan was already active in this front. Needless to say that Lord SivaPeruman ordained that a Jewel to Saiva Tamil society, should carry the name Vyramuthu Rathinam Ramanathan. May he be blessed with good health and happiness for many years more in service to mankind. Aum NamaSivaya.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்**
28 கைலாச பிள்ளையார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

# வாழ்வாங்கு வாழும் சைவச் செம்மல்

லண்டன் மாநகரில் சைவ நெறியும் தமிழ்ப் பண்பாடும் தழைத்தோங்க அருந்தொண்டாற்றி வரும் ஸ்ரீமான் இரத்தினம் இராமநாதனுக்கு அகவை 60 நிறைவு பெறுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். சீரும், திருவும் நிறைந்த பன்னாலைக் கிராமத்தில் புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்தவர் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள். பாலப்பருவத்திலேயே பஜனை பாடி பக்தர் கூட்டத்தில் இணைந்த அவரது வாழ்வு இன்றுவரை தொடர்கின்றது. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆரம்பகாலத் தூண்களில் ஒன்றாக விளங்கிய ஆன்மிகவாழ்வு பிரித்தானியாவில் சைவ முன்னேற்றச் சங்கம் அமைக்க பெரிதும் உந்தலாக அமைந்தது. பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் வெள்ளி விழாக் கண்டு வீறுநடை போடுவதற்கு மூலவேராக விளங்குகின்ற பெருந்தகை இவர். பிரித்தானியாவில் ஆன்மிக விழாவென்றாலும், தமிழ்விழா என்றாலும் இறந்தவர்களின் இறுதிக்கிரியை என்றாலும் முன்னின்று வழிநடாத்துகின்ற உண்மைத் தொண்டன் இவர் என்பதை யான் நேரில் கண்டவன்.

தாயகப் பற்றுடன் பிரித்தானியாவில் சைவ முன்னேற்றச் சங்கத்தினூடாக ஈழத்து சைவ நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அன்னார் ஆற்றிவரும் தொண்டு என்றும் வாழத்துதற்குரியது. சைவ முன்னேற்றச் சங்கம் அதன் வெள்ளி விழாத் திட்டத்தில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வாழும் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் பலருக்கு தங்க ஆபரணங்கள் வழங்க ஏற்பாடு செய்த கருணைப்பணியை வாழ்த்தாதவர்கள் இல்லை. தனது தயார் திருமதி செல்வநாயகி இரத்தினம் அம்மையார் நினைவாக எனது வேண்டுதலுக்கமைய கண்பார்வை அற்ற வாழ்வகச் சிறார்களுக்கு 25 நவீன கைக்கடிகாரங்களை அன்பளிப்பாக வழங்கிய பண்பாளர். கோண்டாவிலில் இயங்கும் சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலை சிறார்களுக்கு சைவ முன்னேற்றச் சங்கம் உதவுவதற்கு வழி வகுத்தவர். இது போல இப்பெரியார் ஆற்றிவரும் பணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். காவல் தெய்வமாகிய வைரவப்பெருமானை தன் குலதெய்வமாக பிரார்த்தித்து வாழும் ஸ்ரீ மான் இரத்தினம் இராமநாதன் அவர்கள் மணிவிழாப் பொலிவோடு நிறைந்தவாழ்வு வாழ பரம்பொருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன். இப்பெரியார் அவர்களின் மேன்மைப்பணிகளுக்கு பக்கத்துணையாக இருப்பவர் அவரது பிரியபத்தினி விஜயலட்சுமி இராமநாதன் அவர்கள். மனையறத்தின் வேராக நின்று மணிவிழாக்காணும் நாயகனின் மாண்புக்கு அரிய பங்கு கொண்டு உழைக்கும் அம்மையாரது சேவையையும் வாழ்த்துகின்றோம். எல்லாம் வல்ல துர்க்கைஅம்பாள் திருவருளால் விழா நாயகன்நாயகி பிள்ளைகள் குடும்பம் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ பிரார்த்தித்து அமைகின்றேன்.

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

**ஆறுதிருமுருகன்** உப.அதிபர் ஸ்கந்தவரோதய கல்லூரி-சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் – கொழும்புக் கிளை

## TELLIPPALAI - MAHAJANA COLLEGE

**Old Students, Association - Colombo Branch**

33/1, Frances Road, Colombo - 06.
Tel.: 2585394, 071 2744924

**PATRONS**
Principal - Mahajana College
Mr. S. Dhanabala
Mr. T. Lankanesan
Mr. T.P. Murugaiah
Mr. S. Sivabaskaran

**PRESIDENT**
Mr. S. Sirikananathan
Tel : 2581926
E-mail: s.sirikananathan@kpmg.com

**VICE PRESIDENTS**
Mr. V.S. Ganeshalingam
Mr. S. Kathirgamathamby
Mr. K.V. Mahathevan
Mrs. Rajeswari Shanmugaratnam
Mr. R. Selvaskandan
Mr. S.P. Thiruarul

**JOINT SECRETARIES**
Mr. V. Balachandran
Tel.: 2585394, 071 2744924
E-mail: sajith003@hotmail.com
Mr. R. Roghithan
Mobile: 0777 315570
E-mail: roghithan@gmail.com

**TREASURER**
Mr. S. Jeyavarman
E-mail: jeyavarman@dfccfs.slt.lk

**ASSISTANT TREASURERS**
Mr. C. Anandthakrishna
Mrs. P. Sathananthan

**COMMITTEE MEMBERS**
Mr. J. Jeyakanthan
Mr. K. Jeyaram
Dr. Mythilly Thavakumaran
Mrs. Nesapoopathy Nagarajan
Mr. E. Panchanathan
Mrs. Sivakumari Suntharalingam
Mr. S. Sivaneswaran

**HON. AUDITOR**
Mr. A. Ganeshalingam

## பன்னாலை தந்த பண்பாளன்

மகாஜனக் கல்லூரியாகி பெரிய ஆலமரத்தின் விழுதுகள் பிரித்தானியா, கனடா, பிரான்சு, அவுஸ்திரேலியா ஆகிய பல நாடுகளிலும் வேரூன்றியுள்ளன. இப்பெரிய விழுதுகள் தான் அக்கல்லூரியின் பழைய மணவர்கள். அவர்கள் ஒன்று திரண்ட சங்கங்களாக வேரூன்றியிருப்பது மகாஜனாவின் பெரிய சாதனை. இச் சங்கத்தை பிரித்தானியாவில் ஆரம்பிதது வேரூன்றச் செய்த பெருமைக்குரியவர் தான் எங்கள்மணி விழா நாயகன், இரத்தினம் இராமநாதன். பிறந்த மண்ணாகிய பன்னாலைக்கும் கல்வி கற்று வளர்ந்த மகாஜனக்கல்லூரிக்கும் புகழ் நாட்டியவர். 1958 ஆம் ஆண்டிலிருந்து மகாஜனாவின் கல்வி,சமயக்கல்வி என்பவற்றில் முளைகொண்டவர். பிறந்த ஊராகிய பன்னாலை வயிரவர் அருள் பெற்றவர். இக்கோவிலில் சமய விழாக்கள், குருபூசைகள், பஜனை என்பவற்றில் ஈடுபாடு கொண்டவர். இவ்வாறு சைவ சமயத்தில் வேரூன்றியவர் கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளராக 10 வருடங்கள் (1964-1974) விளங்கித தம்மைப் புடஞ்செய்து கொண்டவர். தொண்டரணியின் துணைத் தலைவராகப் பணியாற்றிவயர். இவர் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிச் சேவை நலப் பாராட்டையும் பெற்றவர். கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் இவர் சேவையாற்றிய காலம் பொற்காலமெனச் சங்கத்தினர் பாராட்டினர்.

1975 இல் தாய் நாட்டை விட்டுப் பிரித்தானிய சென்ற போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கும் அவர் பணி மேன்மேலும் தொடர்வதையறிந்தோம். அங்கும் சைவ முன்னேற்றச் சங்கக் கிளையை சகாக்களுடன் சேர்ந்து ஸ்தாபித்தார். ஆரம்பக்காலம் தொடக்கம்(1977) இன்று வரை பொருளாளர், செயலாளர், தலைவர், என பல பதவிகளிலும் மிளிர்ந்தார்.

இராமா நீ பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் மதிப்பார்ந்த தர்மகர்த்தாவாக மிளிர்கின்றாய். இவற்றிற்கு மேலாக பிரித்தானிய அரசியார், பிரித்தானிய பிரதம அமைச்சர் என்பவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட இயக்கமாக திகழச் செய்தாய். இவ்வரும் பெருஞ்செயல்களைக் கண்டும் கேட்டும் மகிழ்வது மகாஜனக் கல்லூரி மகாஜனர்கள் அன்றோ. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய். ஈண்டு உண்மையானதாய் மட்டுமன்றி கல்வியாகிய பாலூட்டிச் சீராட்டி வளர்த்த கல்லூரி வளர்ப்புத்தாயாகிய மகாஜனவே.

நின் தொண்டின் பெருமையை மணிவிழா மலர் மணம் பெறச் செய்வதாகத் தொண்டர் தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ! நின் தொண்டால் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளிலே சைவம் பாதுகாக்கப்படுவதோடு முன்னேற்றம் பெறவும் செய்தாய். காரியங்கள் யாவற்றிலும் நினக்குக் கைகொடுக்கின்ற இல்லாள் விஜயலட்சுமியும் நீடூழி வாழ்கவென வாழத்துகின்றோம்.

மேலும் மேன்மை கொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்கக் காலாண்டுக் கலசம் இதழும் இலண்டன் ஐ.பி.சி சமய நிகழ்சிகளும் தொடர வாழ்த்துகின்றோம். வாழிய பால்லாண்டு வளர்க நின் அயராத்தொண்டுகள் சைவ துரந்தரராய், நின் பணிகள் மலர்க மணி விழா மலரும் திக்கெல்லாம் மணங்கமழ்க

அன்புடன் வாழ்த்தும்

**வ. பாலச்சந்திரன்**

இணைச் செயலாளர்

கொழும்பு

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராம தரிசனம்

*வாழ்க்கையின் அடிப்படையான தர்மத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென பகவத்கீதை உபதேசம் செய்கிறது. ஞானத்தின் குறிக்கோள் இன்ப ஆக்கமும், துன்ப நீக்கமுமே ஆகும் என்பதும் ஒரு தத்துவம். இவற்றை எல்லாம் மணிவாசகப் பெருந்தகை சொல்வதைச் சிறிது பார்ப்போம்.*

***இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்***
***துன்பம் துயர் அறுத்துச் சோதியாய் - அன்பு அமைத்து***
***சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே***
***ஊராகக் கொண்டான் உவந்து***

கீதையின் உபதேசமும், சமய குரவரின் போதனையும் இளம் வயதில் ஒருவருடைய மனதில் பதிந்துவிடவேண்டும். அது சாத்தியமானால் அவர் தொண்டனாகத் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். இதைத்தான் எமது சமயமும், ஞானிகளும், மதபோதகர்களும், அறிஞர்களும் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

சமயத் தொண்டர், சமூகத் தொண்டர், பொதுத் தொண்டர் என தொண்டையே தமது வாழ்நாளின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு எமது மத்தியில் வாழ்ந்தவர்களினால்தான் பழமைக் காலத்திலிருந்து நாம் வழிநடத்தப்பட்டு வந்திருக்கிறோம். அவர்களது வாழ்க்கை எமக்கு வழிகாட்டியாக அமைந்துமிருக்கிறது.

இப்படியான தொண்டர்கள் வரிசை நம்மவர் வாழ்க்கையுடன் தொடர்ந்துகொண்டே வருகிறது. வாழ்க்கையுடன் இணைந்தும் கொள்கிறது. அந்த வரிசையை இன்றைய காலகட்டத்தில் நோக்குவோமானால் எம் மனக்கண்முன் நிற்கக் கூடிய ஒருவராக - எமது நிழலாக நிற்பவர் அன்புக்குரிய தொணடர் வ. இ. இராமநாதன் ஐயா அவர்கள் எனலாம். சமயம், சமூகம் ஆகிய இரண்டுக்கும் இவர் ஒரு பொது மனிதராக மக்களால் மதிக்கப்பட்டு வருகிறார் என்றால் அவரது சேவைதான் அதற்கு அத்திவாரமாக இருக்கிறதெனலாம்.

பொதுநலத் தொண்டாகள் உள்ளத்தால் உயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அந்த உள்ளம் இளமையில் பண்படுத்தப்பட்ட உள்ளமாக இருக்கவும் வேண்டும். இத்தாற்பரியத்தை அறிந்துதான் 'தோன்றிற் புகளொடு தோன்றுக' என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். அதற்கமைய தொண்டர் இராமநாதன் அவர்கள் பாடசாலைப் பராயத்திலேயே தன்னை ஏதாவது ஒரு பொதுத் தொண்டிற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்.

அந்தக் காலத்தில் தமிழ் மாணவர்கள் அதிகமாகக் கல்விகற்ற கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் சிறுவன் இராமநாதன் ஆறாம் வகுப்பில் பயின்றபோது தன் உள்ளத்திலிருந்த தமிழ்ப் பற்றையும். சமயப் பற்றையும் மற்றவர்களின் மனங்களில் விதைப்பதற்கு களத்தில் இறங்கியதுதான் இன்றைய இராமநாதன் ஐயா அவர்களை ஒரு சாதனை படைத்த சமூகத் தொண்டன் பீடத்தில் அமர்த்தி இருக்கிறது.

அவர் அன்று ஆரம்பித்த கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர் 'பூங்கா. இன்று இந்தப் 'பூங்காவில் பல வகையான வாடா மலர்கள் மலர்ந்து சொரிந்துள்ளன. 'சமூக சீலர் சமயத் தொண்டர் சைவ துரந்தரர். சிவ நெறிக் காவலர் சிவநெறிச் செம்மல் என்னும் தொண்டின்பால் மலர்ந்துள்ள நறுமணப் பூக்கள் பூத்துக் குலங்குவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் எல்லாம் ஒரு தன்னலமற்ற தியாகசீலரான தொண்டனை அலங்கரிக்க வேண்டிய முத்திரைகளாகும். அடியார்க்கும் அடியனாக நிற்கும் தொண்டனான அன்பர் இராமநாதன் அவர்கள் இவ்வண்ணம் கௌரவிக்கப்பட்டிருப்பது எமக்கெல்லாம் பெருமை தருவதாக அமைகிறது. தொண்டர்களின் பணி தொடர் பணியாக இருக்கவேண்டும். எதையும் தாங்கும் இதயம் இருக்க வேண்டும். இதைத்தான் நான் ஆரம்பத்தில் கீதையை ஆதாரமாகவும், மணிவாசகரை அரவணைத்தும் குறிப்பிட்டிருந்தேன்.

தொண்டர் இராமநாதன் அவர்களைப் பற்றிச் சில விபரங்களை எழுதுவதற்கு முன்னர் எனக்குத் தெரிந்த நண்பர்கள் சிலரிடம் இராமநாதன் ஐயா அவர்கள் பற்றிய சில விபரங்களைக் கேட்டிருந்தேன். அதில் எனக்குக் கிடைத்திருக்கும் ஒரு விபரத்தை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் ஒரு மூத்த பத்திரிகையாளன் என்பது உங்களில் அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். வீரகேசரி, தினகரன் ஆகிய இரு பத்திரிகைகளிலும் பணியாற்றியமையால் பொதுப்பணிகளில் தம்மை அர்ப்பணித்து இருந்தவர்களுடன் எனக்கு அந்தக்காலத்தில் பழக்கமும் இருந்தது.

சமயம், தமிழ் ஆகியவைகளுடன் கொழும்பில் இரு ஸ்தாபனங்கள் அப்போது மிகவும் பிரபல்யமாக இருந்தன. ஒன்று விவேகானந்த சபை, மற்றது கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம். விவேகானந்த சபைக்கு திரு. எஸ். இராசதுரை என்பவரும், சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு திரு. வ. இ. இராமநாதன் என்ற இளைஞரும் செயலாளர்களாக இருந்தனர். அந்தக்காலம் அந்த அமைப்புக்களின் வளர்ச்சிகள் நிறைந்த பொற்காலமாக மதிப்புப் பெற்றிருந்தன என்பதை நான் அறிவேன்.

தமிழர்களின் வாழ்க்கை கொழும்பில் தமிழிலும் சைவத்திலும் புதிய பரிணாமம் ஒன்றை அடைவதற்கு வழிவகுத்த காலம் என்று சொல்லலாம். இப்படிப் பெருமைபெற்ற ஒரு காலகட்டத்தில் சைவ இளைஞர்களுக்குத் தலைமை தாங்கிச் சமய வளர்ச்சிக்கு பாதை அமைத்த பெருமைக்கு உரியவராக இளைஞர் இராமநாதன் அவர்கள் விளங்கினார்கள்.

1975ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி திரு. இராமநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்த்துப் பத்திரம் ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இன்றைய வயதில் சரி பாதிக்குப்பாதியான வயதில் இந்தத் தொண்டர் இலண்டனில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக இலண்டன் புறப்பட்டபோது வழங்கப்பட்ட வாழ்த்து மடல் அது. வெள்ளி விழாக் காலத்திலேயே இவரது சேவைநலன் பாராட்டப்பட்டிருக்கிது. தொடர்ந்து அகவை 50க்குரிய பொன் விழாக் காலத்தில் திரு. இராமநாதன் அவர்களின் தன்னலமற்ற தொண்டிற்கான புகழ் பாடப்பட்டிருக்கிறது. இம்மலரின் மற்றொரு பகுதியில் அந்த வாழ்த்து மலரை மலரவைத்திருக்கிறார்கள். சமயம், தமிழுக்காக இளம் வயதில் இவர் ஆற்றிய சேவைக்கு அணிகலனாக இன்றும் இது விளங்குகிறது.

1969ம் ஆண்டில் கொழும்பிலுள்ள இந்து இளைஞர்களின் பணி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குச் சிலை எழுப்புவதற்காக ஈழத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு வேண்டியிருந்தது. நாவலர் சிலையின் தேசிய பவனியிலும். தேசிய விழாவிலும் கொழும்பிலுள்ள இந்து இளைஞர்களைப் படை திரட்டி வந்து இவ்விழாக்கள் வெற்றிபெற உழைத்த தன்னலமற்ற தொண்டர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தையும், தமிழையும் வளர்த்த நாவலர் அவர்களின் தியாக உணர்வுகள் இராமநாதன் அவர்களின் செயல்களில் பிரதிபலித்தன. ஒரு காலத்தில் சைவமும், தமிழும் எமது மண்ணில் வளரவிடாமல் தடைசெய்த ஆங்கிலேயர்களின் மண்ணில் காலடி பதித்ததும் ஆறுமுக நாவலர் அவர்கள் வளர்த்த அதே சைவத்தையும் தமிழையும் இங்கு வளர்ப்பதற்குத் தளம் அமைக்க வேண்டுமென்ற ஆவலுடன் இங்கும் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு வித்திடப்பட்டது என்றால் மிகையாகாது.

ஈழ மண்ணில் உதித்த தன்னலமற்ற சேவை ஐயாயிரம் மைல்கள் கடந்து வந்த போதிலும் தணியாத தாகமாகிவிட்டது. காலத்தின் தேவைக்குக் கட்டுப்பட்டு இலண்டனில் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோதிலும் தமிழுக்காகவும், சைவத்தின் வளர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணிப்பதில் பின்னிற்காதவர் திரு. இராமநாதன் அவர்கள். கொழும்பில் எப்படி ஒரு சைவமுன்னேற்றச் சங்கம் செயற்பட்டதோ அதேபோல இலண்டனிலும் சைவ மக்களைச் சமயப் பற்றாளர்களாக்க விரும்பினார். அதற்காக ஒரு அமைப்பு உருவாக்கப்படுவது அவசியம் என்பதை சமய, சமூகப் பிரமுகர்களை அணுகி முன்வைத்தார். அதன் பிரதிபலன்தான் தமிழர்கள், சைவர்கள் மத்தியில் இந்த அந்நிய மண்ணில் பரவிப், படர்ந்து, வேர்விட்டு ஆல்போல் வளர்ந்து அனைவருக்கும் பெருமை தருவதாக விழங்கும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கமாகும்.

29 ஆண்டுகளாக இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றி வரும் தொண்டு கடல் கடந்த நாடுகளில் வசிக்கும் மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைய திரு. இராமநாதன் அவர்களின் அர்ப்பணிப்பு பக்க பலமாக இருந்துவருகிறதென்பதை மக்கள் அறிவார்கள். இராமநாதன் ஐயா அவர்களின் தொண்டு பல சேவைகளால் பரிணாமம் பெற்றுள்ளது. சைவத்துடனும், தமிழுடனும் மட்டும் என்ற வட்டத்துக்கள் நின்றுவிடாது சமூக சேவை என்னும் பரந்த மனித மான்மியங்களிலும் படர்ந்து வருகிறது. சில சில காலகட்டங்களில் சிலர் சமூகசேவையில் இறங்குவார்கள். குடும்ப பாரங்களின் சுமையால் தளர்ந்துவிடுவார்கள். ஒதுங்கியும் கொள்வார்கள். இப்படியானவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்ட தனி மனித மனிதநேய பொதுத் தொண்டர் இவர்.

மக்களுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களில் எல்லாம் இவர் ஒரு பங்காளி. எந்த இடத்திலும், என்ன நிகழ்விலும் இவர் ஒரு சொந்தப் பங்காளியாகிவிடும் தனித்துவத்திற்கு இராமநாதன் அவர்கள் ஒரு உதாரணம். எந்த வைபவத்தையும் படாடோபமற்றவாறு வழிநடத்தும் பண்பாளர். 'என் கடன் பணிசெய்வதன்றி வேறொன்றில்லைக் காண்' என்னும் நியதிக்கமைய பலனை எதிர்பாராது பணிசெய்வதற்கு முன்னிற்பதனால் இலண்டன் சைவ மாநாடு இவருக்கு 'சமூக சீலர்' என்னும் பட்டத்தைச் சூட்டிச் சமீபத்தில் கௌரமளித்துள்ளது.

தமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களையும் சிறு வயதிலிருந்து பொதுத். தொண்டிற்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும். சைவ சமய மலர்ச்சிக்காகவும் அர்ப்பணித்துக் கொண்டவர் இவர். தமிழர்களின் பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம் போன்வற்றைப் பேணுவதில் இவர் தனித்துவத்தைக் கடைப்பிடிக்கிறார். திரு. இராமநாதன் அவர்கள் இலண்டன் வந்த காலத்தில் இங்கு வந்த அனேகர் தமிழர் பாரம்பரியங்களை மறந்திருக்கிறார்கள். ஆனால் இவர் தமது ஈழ மண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியங்களை மறக்கவுமில்லை, கைவிடவுமில்லை. தோற்றத்திலும் மாற்றமில்லை. உடையிலும் மாற்றமில்லை. உள்ளத்தாலும் மாற்றம் அடையவில்லை. சமூகத்தில் உயர்வு அடைய இந்தக் குணாதிசயங்கள் உதவியுள்ளன.

அகவை 25 - 50ல் இவர் கண்ட பொன் விழாச் சாதனைகள் அளப்பரியன. இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பிறப்பு இதற்கு ஒரு கலங்கரை விளக்காக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. பொதுப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தமையும் இக்காலத்தைச் சார்ந்ததென்று கூறலாம். இனி, தற்போது விழா எடுக்கப்பட்டிருக்கும் அகவை 60 நிறைவுகாணும் மணிவிழாக்காலம். இது இராமநாதன் ஐயா அவர்களின் மணி, மணியான சேவைக்காலம். எல்லாப் பணிகளும் தன் இதயத்தை நிறைப்பதாகப் பெருமையுடன் மக்கள் சேவைக்கு மேலும் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட காலம். இனி வரும் பவளம் - அகவை 75, முத்து அகவை - 80, வைரம் - அகவை 100. இவைகள் எல்லாம் அனுபவத்தின் முதிர்ச்சிக்காலம். இதுவரையில் சாதிக்க முடியாத சமூக சேவைகளை எல்லாம் நிறைவு செய்யும் காலம். இதுவரை சாதித்தவற்றிலும் பார்க்க இன்னும் பல அரிய சாதனைகளை எல்லாம் மக்களுக்காகச் செவதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பானாக.

'ஒவ்வொரு ஆண் மகனின் சாதனைக்குப் பின்னாலும் ஒரு பெண்மணி இருப்பார்' என்று சொல்லுவார்கள். இந்த முது மொழி தமிழர்களிடமிருந்துதான் மற்ற இனத்தவர்கள் மத்தியில் பரவியிருப்பதாகத் தோன்றுகிறது. எமது இதிகாசங்களிலும், இலக்கியங்களிலும் இதற்குச் சான்றுகள் உள்ளன. இதற்கு மாறுபடாமலும், வேறு படாமலும் இராமநாதன் ஐயா அவர்களுக்கு விஜயலட்சுமி அம்மையார் மனையாளாகக் கிடைத்தமை பொதுப் பணிக்குத் தம்மை மேலும் அர்ப்பணிக்க ஒரு உந்துசக்தியாக அமைந்துவிட்டது. ஒரு வைபவத்திற்கு தம்பதிகளாக இருவரும் வந்துவிட்டால் மண்டபம் நிறைவான மகிழ்ச்சியை மக்கள் மத்தியில் காணலாம். எந்தப் பணியாக இருந்தாலென்ன அதற்கு அம்மையார் அவர்களும் தமது கணவனுடன்சேர்ந்து கடமையில் இறங்கிவிடுவார். 'நல்ல மனைவி அமைந்துவிட்டால் நல்லதே நடக்கும்' என்பார்கள். இராமநாதன் ஐயா வாழ்க்கையிலும் நல்ல மனைவி அமைந்துவிட்டார். நல்லது நடக்கிறதைப் பார்க்கிறோம்.

'சைவ துரந்தரர்', 'சிவநெறிச் செல்வர்', 'சிவநெறிச் செம்மல்', 'சிவநெறிக் காவலர்', 'தொண்டர் திலகம்' உட்பட பெருமை மிகு கனடிய தமிழர் தகவல் மையத்தினாலும், மற்றும் பல வெளிநாட்டு ஸ்தாபனங்ளினாலும் இவரது பணிகளைப் பாராட்டிக் கொரவப் பட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

உயர்ந்த உள்ளம் படைத்த மக்கள் தொண்டன், தன்னலம் கருதாத பிறர் பணியாளன், நடமாடும் சமூகப்பணியாளர், தொண்டுசெய்வதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ள தொண்டர், தமிழுக்கும், சைவத்திற்கும் எங்கு விழா எடுக்கப் படுகிறதோ அவற்றைச் சிறப்பிக்க முன்னிற்பவர் திரு. வ. இ. இராமநாதன் அவர்கள். இவர் எங்கும் சமுகமாய் இருக்கிறாரோ அங்கெல்லாம் 'இராமா, இராமா' என அழைக்கப்படுவதால் அவரது பெயருக்குப் பொருத்தமாகவும், சேவைக்கு நிகராகவும் இந்தக் கட்டுரைக்கு 'இராம தரிசனம்' எனத் தலைப்பிட்டுள்ளேன்.

**வாழ்க பல்லாண்டு.**

**பொன். பாலசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Orphans Trust

83 Sudbury Court Drive, Harrow, Middlesex HA1 3SS U.K
Tel/Fax: 020 8908 1101 Registered Charity No: 327809


## மணிவிழாக்காணும் மாணிக்கம் போன்ற அன்பர் திரு இராமநாதன் அவர்களை தமிழ் அனாதை அறக்கட்டளையினர் சார்பில் வாழ்த்துவதில் மிகப்பெருமையடைகின்றேன்

அன்பு, பண்பு, இறைபக்தி, தர்மசிந்தனை ஆகிய குணநலன்களைக் கொண்டு விளங்கும் பெரியார்களில் ஒருவரே திரு. இராமநாதன் ஆவார். எமது இனத்தில் ஆதரவற்று, தஞ்சமடையும் பிள்ளைகளின் நலனுக்காக அவர் செய்யும் பணி மிக அளப்பரியது. தாயகத்தில் இருந்து முப்பத்தியொரு வருடங்களுக்கு முன்னர் வந்து சேர்ந்த திரு. இராம் அவர்கள் சமூகப்பணிகளையும், சமயப்பணிகளையும் மேற்கொண்டார். சைவ முன்னேற்றச் சங்கத்தை இங்கு ஆரம்பித்து, அதனூடாக இவர் செய்கின்ற சேவைகள் மிக அதிகமெனலாம். தொடர்ந்து மேலும் நற்பணிகளை அவர் கைக்கொள்ள அவருக்கு நீண்ட ஆயளையும், ஆரோக்கியத்தையும் இறைவன் அசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க பல்லாண்டு

**அன்பு**
பொன்தெய்வேந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம்

Annie romain verschoor laan 32,
Postbus 2104 | 1784 NZ Den Helder | Nederland
Tel 0223-620313
Postbank 57.04.050 | ABN-AMRO bank 58.73.18.538 | K.V.K nr 40637200

# நல் வாழ்த்துக்கள்

**திரு வ.இ.இராமநாதனின் மணிவிழா 08-10-2006 இல் கொண்டாடுவதையிட்டு கொலன்ட் வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் மிகப் பெருமிதம் அடைகின்றது.**

திரு. வ.இ.இராமநாதன் அவர்களின் சைவத் தொண்டு கடல் கடந்து பல் நாடுகளில் பரந்து நிற்கின்றதென்றால் அது மிகையாகாது. கொலன்ட் வரதராஜ செல்வவிநாயகர் ஆலத்திற்கும் அவருக்கும் சுமார் பதினைந்து வருங்களாக நெருங்கிய தொடர்பை இறைவன் ஏற்படுத்திவிட்டார்.

1992 ஆம் ஆண்டு திரு இராமநாதனின் தாயும் தந்தையும் முதன்முதல் வரதராஜசெல்வ விநாயகர் ஆலயத்திற்கு வந்த பொழுது சிறிய தொகையில் வாழ்ந்த தமிழ் மக்கள் ஆரம்பித்திருக்கும் இந்த ஆலயத்தை மேலும் வளர்ப்பதற்கு எமது மகன் இராமநாதனின் உதவியையும் பெற்றுத்தரவுள்ளோம் என்று கூறிச் சென்றார்கள். அன்றிலிருந்து இராமநாதன் அவர்களை விநாயகர் பலதடவைகள் கொலன்டிற்கு அழைத்து அவர்மூலம் தமிழுக்கும் சைவத்திற்கும் பல நன்மைகள் கிடைக்கச் செய்தார். ஆலயத்திற்கு காணி வாங்கி புதிய ஆலயம் அமைக்கும் போதெல்லாம் உதவியும் உற்சாகமும் தந்து எங்களை ஊக்குவித்ததோடு மட்டுமல்லாது ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தின் போதும் வருகை தந்து சிறப்பித்தார்கள். அதோடு மட்டுமல்ல ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் தேர்த்திருவிழாவிலும் நேரடியாக வந்து கலந்து கொள்வார். திரு. இராமநாதன் அவர்களின் சைவத் தொண்டு மேன்மேலும் வளர வரதராஜசெல்வ விநாயகர் அவருக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் அருளப் பிரார்த்தித்து கொலனட் வாழ் சைவ மக்கள் சார்பாக திரு. இராமநாதன் அவர்களின் மணி விழா சிறப்பாக நிறைவேற எங்கள் வாழ்த்தைத் தெரிவிக்கின்றோம்.

வரதராஜ செல்வவிநாயகர் ஆலய நிர்வாக சபை சார்பாக

**தி. சந்திரகாந்தன்**

உபசெயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழாக்காணும் தொண்டரின் தொண்டன் ஈழம் தந்த இறைபணியாளன்

சி. மார்க்கண்டு,
சைவ முன்னேற்றச் சங்கம் (அங்கத்தவர் கொழும்பு-ஐக்கியஇராச்சியம்)

அன்று ஒரு சனிக்கிழமை, காலையில் வந்த கடிதங்களைப் பிரித்துப் பார்த்தபோது அவற்றில் ஒன்று இரத்தினம் இராமநாதனின் மணிவிழா பற்றியதாக இருந்தது. மணிவிழாக்காணும் இம் மாமனிதரின் வாழ்க்கை வரலாறு ஒரு கணம் என் மனக்கண் முன் ஓடியது.

முதற்கண் இவ் விழாவை ஏற்பாடு செய்ய முன்வந்த குழுவுக்குத் தலை வணங்குகின்றேன்.

ஒரு மனிதர் உயர்ந்தவராக விளங்குவாராயின் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே அவர் ஆற்றிய சேவைகளையும், ஆற்றிவரும் சேவைகளையும் அன்னாரின் குணாதிசயங்களையும் போற்றிப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் இவ் விழா ஏற்பாட்டாளர்கள் இவ் விழாவை ஒரு நன்றிக்கடனாகவே கருதிச் செய்கின்றமை வெகுவாகப் பாராட்டத்தக்கது. ராமா ராமா என்று எல்லோராலும் வாஞ்சையுடன் அழைக்கப்படும் அந்த ராமர் நமக்குத் தசரத ராமர் போலவே தோற்றமளிக்கின்றார். மணிவிழா எடுக்கிறோம் எதற்காக? தொண்டின் மகத்துவத்தைப் பெருமைப் படுத்துவதற்காக இலை மறைகாய் போல் அவர் ஆற்றிய ஆற்றிவரும் அளப்பரிய பணிகளை நினைவு கூர்வதற்காக-ஏனையோரும் அவரைப் பின்பற்றிச் சமூகசேவைகளில் ஈடுபடவேண்டும் -என்பதற்காக கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் இருக்கும் போது ஏற்பட்ட நமது நட்பும் தொடர்பும் இருவரும் பிரித்தானிய (ஐக்கியஇராச்சியத்துக்கு) வந்த பின்னரும் கூட தொடர்ந்து இருந்தது. இங்கே நடைபெறும் கோவில் திருவிழாக்கள், கருத்தரங்குகள், மகாநாடுகள் போன்றவைக்கு மக்களோடு மக்களாக நானும் சென்ற போது அங்கே திரு ராமா அவர்கள் ஒரு முக்கிய நபராகக் கணக்கிடப்பட்டமையைக் கண்டு மிகவும் பெருமிதப்பட்ட எனக்கு அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. காலப்போக்கில் அவர் பங்கேற்காத விழாக்களைக் காணக்கிடைப்பதே அரிதாகி விட்டது. தனது வீடு, தன்குடும்பம் என்று வாழாது சமுதாயம், ஆன்மிகம் எனப்பல பொதுப்பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
லண்டனிலும் சைவ மணங்கமழ வேண்டுமென்பதற்காக காலஞ்சென்ற திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களின் உதவியுடன் 29 வருடங்களுக்கு முன்னர் சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றச் சங்கத்தை ஆரம்பித்தார். அது இன்று எத்தனையோ சமயப்பணிகளையும் ஏனைய தொண்டுகளையும் செய்து கொண்டிருக்கின்றது. இவை யாவற்றுக்கும் மூலகாரணமாகத் திகழ்பவர் திரு. இராமநாதன் என்பது எல்லாச் சைவப் பெருமக்களுக்கும் தெரியும். தொண்டு செய்து வாழும் வாய்ப்பு எவருக்கும் இலகுவில் கிடைப்பது அரிது.

ஒருவன் உயர்வுபெற வேண்டுமாயின் அடக்கமுள்ளவனாக இருக்கவேண்டும். பதவி வரும் போது பணிவு வேண்டும் என்பதற்கிணங்க பண்பிலும் பாவனையிலும், செயலிலும் ஒரு எளிமையான தன்னடக்கத்துடன் தொண்டாற்றிவரும் ராமா ஒரு தொண்டர்களின் தொண்டன் என்றால் அது மிகையாகாது. பிறரை நேசிக்கும் பாங்கு, பொது நோக்கிற்காகச் செயற்படுதல், பிறரின் நலனில் அக்கறை காட்டுதல் போன்ற நற்பண்புகள் ஒரு மனிதனை நமக்கு இனம் காட்டிவிடுகின்றன. நல்லவராகவும்-வல்லவராகவும் மேலோங்க வழி வகுகிக்கின்றன. ராமா அவர்கள் தம் சமுதாயத்துக்கு மட்டுமன்றிச் செந்தமிழுக்கும் சைவ நெறிக்கும் ஆற்றிக்கொண்டிருக்கும் சேவை நம் எல்லாருக்கும் தெரிந்ததே. தம்மால் இயன்ற பணிகளையும் சேவைகளையும் முழு மானிடவர்க்கத்துக்கும் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கோடு செயல்படும் ஓர் ஆடம்பரமற்ற தொலைநோக்கம் கொண்டவராகவே அவர் காணப்படுகின்றார்.

தன் நலம் அற்ற தியாக மனப்பான்மை கொண்டவர். பேசிப்பழக இனியவர். ஆடம்பரமற்ற சமூகப்பணியாளர். எங்கெங்கே கருத்தரங்கம், மகாநாடு, பொதுவைபவம், நடைபெறுகிறதோ அங்கெல்லாம் காணப்படுபவர். சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிக்கொண்டிருப்பவர். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இப்பெருமகன் அண்மையில்தான் தனது அறுபதாம் ஆண்டில் காலடி வைத்திருக்கிறார். முழு வாழ்நாளில் மூன்றில் இரண்டையே கண்டவராகக் கருதி இன்னமும் மூன்றில் ஒன்றான முப்பது வருடங்கள் எஞ்சியிருப்பதால் அவர் தொண்ணூறுகளிலும் (Nonagenarian) ஆக வாழ்வதற்கு அருள் புரிய வேண்டும் என்று கொழும்பு கொம்பனித்தெரு முருகனையும், கிழக்கு இலண்டனில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இலண்டன் ஸ்ரீ முருகனையும் மனமுருகி வேண்டிக் கொள்கின்றேன்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்வாய்

அருள் மொழி அரசி
வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி

இடம்:- கொழும்பு
நாள்:-02-08-2006

# குன்றிலிட்ட விளக்காக ஒளிர்க!!

காலவட்டத்தின் சுழற்சியால் அறுபது என்ற எண் தனித்து சிறப்புடையது. ஒரு நாளின் நேரத்தை அளவிட்டால் ஒரு நிமிடத்துக்கு 60 மணித் துளிகள் ஒரு மணிக்கு 60 நிமிடங்கள் என அமைகின்றது. தமிழ் ஆண்டுகள் 60. மனிதன் ஓய்வு பெறும் வயது கூட அறுபதாகத்தான் காணப்படுகின்றது.

ஒரு மனிதனின் பூரண வாழ்நாள் 120 ஆண்டுகள் ஆயுள் காரகன் சனிபகவான். அவன் பன்னிரண்டு இராசிகளையும் ஒரு முறை சுழன்று வர 30 ஆண்டுகள் ஆகும். ஒருவனுடைய வாழ்க்கையில் 4 முறை அச்சுழற்சி இடம்பெறும். அதனால் மனிதனது வாழ்வு 120 ஆண்டுகள் என ஆன்றோர் கணக்கிட்டனர்.

மண்ணிலே மனிதனாகப் பிறப்பவர்கள் அல்ல மனிதனாக வாழ்பவர்கள் 30 ஆண்டுகள் இல்லறத்தில் காலூன்றி இல்லற தர்மத்தைக் காத்தும் அதங்கு மேல் 30 ஆண்டுகள் பொதுப்பணி சமயப்பணி, கலைத்துறை என வாழந்தும் 60 அகவைக்கு மேல் சுயபரிசோதனை செய்து கொள்ளும் ஆன்மிக வாழ்விலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அது தான் பிறவியெடுத்ததன் பயனாகும்.

திருமிகு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் மேற்காட்டிய இலக்கணத்திற்கு ஒரு இலக்கியம். தான் பிறந்த மண்ணிற்கும் தன்னை வாழ வைத்துக்கொண்டிருக்கும் மண்ணிற்கும் பெருமை சேர்ப்பவர். சைவத்தையும தமிழையும் தன்னிருகண்களாகக் கொண்டு பணிபுரியும் பண்பாளர். அந்நிய மண்ணில் நமது மொழியும் சமயமும் வேர்பிடித்து வாழ்கின்றன என்று கூறினால் அது திருமிகு இராமநாதனின் அயராத பணியினால் என்று துணிந்து கூறலாம். பிரித்தானிய சைவ முன்னேற்றச்ச சங்கம் அதற்குச் சான்றாக விளங்குகின்றது.

காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிற்கும் கைகொடுத்து தூண்டு விளக்காக ஒளி கொடுப்பவர் திருமதி இராமநாதன் விஜயலட்சுமி அவர்கள். இராமனில் இணைந்த சீதை. மணி விழாக்காணும் இந்த ஆதர்ச தம்பதிகள் எல்லா நலன்களும் பெற்று குன்றிலிட்ட விளக்காக ஒளிர நான் வணங்கும் கொற்றவைத் தாயின் திருவடி பணிந்து வாழ்த்துகின்றேன்.

நலமே பெறுக!

அன்புடன்

**வசந்தா வைத்தியநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னம்பலம் கந்தசாமி
22 Ickniled Drive
Gants Hill Ilford
EssexIG2 6SD, U.K

# கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் முன்னாள் பொருளாளரின் வாழ்த்து

கொம்பனித்தெரு வாழ் சைவ மக்களின் மறக்க முடியாத அன்புத் தம்பி இராமநாதன். இவர் பயமறியா விடலைப் பருவத்தில் கல்லூரிப் படிப்பை முடித்து கொம்பனித்தெருவில் வாழ்ந்தார். எத்தனையோ பொழுது போக்குகள் நிறைந்த கொழும்பு மாநகரில் கோயிலாவதேதடா? குளங்களாவ தேதடா? எனத்திரியும் வயதில் இவர் விரும்பியது கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனும் தார மந்திரத்தை இலட்சியமாக ஏற்ற சைவ முன்னேற்றச் சங்கத்தின் அரிய சமயப் பணியைத் தான். இவா தொடர்ந்து பொதுப் பொருளாளராகவும் தொண்டரணி தளபதியாகவும் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி மக்களின் மங்கல அமங்கல வைபவங்களில் கலந்து பல உதவிகள் செய்து வந்தவர்.

இவரது உயரிய பண்புக்கு ஒரு சான்று இளவயதிலேயே முதியோருக்கு உதவும் பண்பு. பூரணை விடுமுறை நாள்களில் சங்க அங்கத்தவர்களின் இல்லங்களில் சோறு கறி போன்ற உணவுப்பொருட்களை சேர்த்து கொழும்பில் உள்ள வயோதிப இல்லங்களுக்கு எடுத்து சென்று பகிர்ந்தளிப்பார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு வர்த்தகப் பெருமக்களிடமிருந்து கொப்பி, பென்சில் போன்ற உபகரணங்களை சேகரித்து பகிர்ந்து மகிழ்வார். இவர் தனது மேற்படிப்பின் காரணமாக பிரித்தானியாவுக்கு வந்தார். இப்பிரிவை கொம்பனித்தெரு மக்கள் ஆறாத்துயருடன் கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தார்கள்.

இராமருக்கு இலக்குவன் போல் இணைபிரியாத் தம்பியாக ஆனந்ததியாகர். இவர் குடும்பமே சங்கம் தான். இருவரும் இணைந்து பிரித்தானியாவில் சைவ முன்னேற்றச் சங்கத்தை ஸ்தாபித்து கடந்த இருபத்து ஒன்பது வருடங்களாகச் சமயத்துக்கும் தமிழிற்கும் தொண்டாற்றி வரும் அளப்பரிய சேவையை கண்டு பூரிப்பும் பெருமையும் கொள்கின்றேன்.

இவர் கொழும்பில் இருந்து வரும்பொழுது விட்ட பொருளாளர் பதவியை நான் ஏற்று பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து மனநிறைவுடன் பணியாற்றியுள்ளேன் என்பதில் எனக்கும் பெருமை.

இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இல்லத்துக்கும் சமயத்துக்கும் தமிழுக்கும் சேவை செய்ய கொம்பனித்தெரு அருள் மிகு சிவ சுப்பிரமணியப் பெருமான் அருளை வேண்டுகின்றேன்.

நன்றி வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

உயர்திரு வி. ஆர். இராமநாதன்
சமய சமூக சேவையாளர்
இலண்டன், இங்கிலாந்து.

உலகின் பல்வேறு நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களில் குறிப்பிடத்தக்க அளவு சில அன்பர்கள் தாம் வாழும் நாடுகளில் பொதுப் பணி ஆற்றிவருகின்றார்கள். இவ்வாறானவர்களின் சமய மற்றம் சமூகப்பணிகளால் போதிய அளவு விழிப்புணர்வு அந்தந்த நாடுகளில் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. நமது தாயகத்திலிருந்து இங்கிலாந்திற்கு பல வருடங்களுக்கு முன்னர் சென்று குடியேறிவர்களில் பலர் இவ்வாறான பணிகளில் முன்னின்று உழைத்து வருகின்றார்கள். அவர்களில் முதன்மையானவர் என நம்மவர்களால் கணிக்கப்படுகின்றவர்தான் உயர்திரு இரத்தினம் இராமநாதன் அவர்கள்.

திரு. இராமநாதன் அவர்கள் இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் வாழ்ந்து வந்தாலும் உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் பிரமுகர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தனது சேவைகளை விரிவுபடுத்தி வருகின்றார். கனடா, ஜேர்மனி போன்றநாடுகளுக்கும் அடிக்கடி பொது நோக்கம் கொண்ட பயணங்களை மேற்கொண்டு தன்னைப் போன்ற சேவை நோக்கம் கொண்ட நண்பர்களையும் பிரமுகர்களையும் சந்தித்தும் அவ்வப்போது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டும் தனது சேவை சார்ந்த பணிகளை ஆற்றிவருகின்றார். அதுபோலவே தாயகத்திற்கும் தமிழகத்திற்கும் அடிக்கடி சமூகம் மற்றும் சமயம் சார்ந்த பணிகளை மேற்கொண்டு அங்கும் தமது பணிகளை விரிவுபடுத்தி வருகின்றார். தாயகத்தில் வாழ்ந்து வரும் பல படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களது பணிகளுக்கு உதவியும் வருகின்றார். இவ்வாறு திரு. இராமநாதன் அவர்களுடைய பணிகள் பற்றி கனடிய தமிழ் ஊடகவியலாளன் என்றவகையில் நான் பல விடயங்களை அறிந்து வைத்துள்ளேன்.

இந்தவகையில் அன்னாரது மணிவிழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ம் திகதி லண்டன் மாநகரில் கொண்டாடப்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அவரோடு கூடி நின்று பல பணிகள் ஆற்றும் நண்பர்களும் உறவினர்களும் சேர்ந்து அவருக்கு விழா எடுப்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். அவர்களோடு சேர்ந்து நானும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றேன். ஒரு சமூக சேவையாளனுக்குள்ள இடர்கள் பற்றி நான் நன்கு அறிந்தவன். அவ்வாறான இடர்கள் தரும் கவலைகளை மறந்து நிற்க இவ்வாறான விழாக்கள் மிக அவசியம் என்பதையும் நான் நன்கு உணர்கின்றேன்.

வாழ்க அவர் பணி.

**ஆர். என். லோகேந்திரலிங்கம், பிரதம ஆசிரியர்- உதயன் - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
Mahajana College, Tellippalai
Old Students Association - United Kingdom
பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம்
Proud to be a Mahajanan

# எம்மவர் ராம்!

மகாஜன மாதாவின் மடியில் வளர்ந்த எம்மவர் ராம் அறுபது அகவை நிறைவை அடைவது மகிழ்ச்சியளிக்கிறது. தாயகத்திலும் புலம்பெயர் நாட்டிலும் அடையாளம் காணப்பட்ட சைவத்தொண்டன், சமூக சேவையாளர் ராம், மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் நான்கு ஆண்டுகள் தலைமைப்பதவியை அலங்கரித்தவர். ஆரம்ப காலம்தொட்டு செயற்குழுவில் பதவி வகித்தவர்.

தனது பள்ளிபருவத்தின் பெரும் பகுதியை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியோடு கழித்தவர் இவர். பல்துறையிலும் முன்னனி மாணவராக திகழ்ந்தவர். பள்ளிக்கு அருகில் அமைந்த பன்னாலை இவர் கிராமம். தான் பிறந்த கிராமத்தோடு மாறாத பாசமுடையவர்.

மகாஜனா மாதாவுக்கு பெருமை சேர்க்கும் பெருமகனார் தன் அறுபது அகவை நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில் அவரை பெருமைப்படுத்தும் சமூகத்துடன் எமது சங்கமும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி பெறுகிறது.

**இ சம்பந்தன்**
**செயலாளர்**
**மகாஜனாக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

*The secretary, MAHAJANA OSA-UK, 34 Donington Avenue, ILFORD, Essex, IG6 1DP.*
*Phone: 020 8518 6786*

***வெல்லுக மகாஜன மாதா!***
*www.mahajana.co.uk*
*info@mahajana.co.uk*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



HARI AUM

"Vaadyavisharath, Kalavithlhakar, Kalajothy, Kriyarathna"

**BRAHMASRI A. N. SOMASKANDA SARMA** (M.Phil.)

Hindu Priest Vethagama Sabah, London.

Lecturer Mirdangam & International Music Examiner

# ஆசிச்செய்தி

## மணிவிழாக்காணும் சைவத்திருத் தொண்டர் தம்பதிகள் இனிதே வாழ்க

உலகெலாம் நாதவிந்து கலாரூபமாக பரந்தருள் புரிகின்ற அருவ, உருவ, அருவுருவரூபமான சிவபெருமான் மக்களுக்கு பல வடிவம் தாங்கி நல் வழித்தத்துவங்களை அருளி வருகின்றார். பாரத நாட்டில் காசி, சேது, ராமேஸ்வரம் என்பன போன்று இலங்கையில் கீரிமலை நகுலேஸ்வரம் சிறப்புப் பெற்ற தீர்த்த விசேஷமான தேவஸ்தானமாகும். நகுலேஸ்வர சூழலில் பிறந்தவர்களே மணிவிழாத் தம்பதிகளாகிய ஸ்ரீ. ஸ்ரீமதி இராமநாதன் தம்பதிகள். இப் பெரியார்களின் மணி விழாவாகிய ஷஷ்டியப்த பூர்த்தி விழாவாகவும் அறுபதாம் கல்யாணவைபவமாகவும் நிகழ்த்துவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆசி கூறி வாழ்த்துகின்றோம். இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவகையினருக்கும் துணையானவன் என்பது குறள் முதுவாக்கியம். இவ்வாக்கின்படி வாழ்பவர்களான ராமநாதன் தம்பதிகள் தாங்கள் சிறப்பாக வாழ்வதுடன் மற்றையோரும் சிறப்பாக வாழ்வதற்கு காரணமானவர்கள். அவரை இலண்டன் சைவ முன்னேற்ச்சங்கத்தின் சேவையால் உணரலாம். மேலும் சங்கத்தின் வெள்ளி விழா வைபவத்தை சிறப்பாக நிறைவேற்றியவர்கள். சங்கத்தின் செயற்பாடு கலை, கலாசாரசேவைகளை சிறப்பாக செய்து வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

ஸ்ரீ, ஸ்ரீமதி இராமநாதன் தம்பதிகள் அவர்கள் சந்ததி புதல்வர்கள், வழித்தோன்றல் உடன் சேர அறுபதாவது வயது பூர்த்தி மங்கள வைபவம் சிறப்பாக நிழகழவும், தொடர்ந்து சதாபிஷேகம் போன்ற வைபவங்களும் நிறைவேறவும், தம்பதிகள் பல ஆண்டு காலம் சிறப்பாக தீர்க்காயுஸ்மான்களாக அமையவும் எமது குல தெய்வம் ராமநாதேஸ்வரப் பெருமான் மாவை ஸ்கந்தப் பெருமான் திருவருள் துணையுடன் ஆசிகள் தெரிவிக்கின்றோம்.

ஸர்வமயகாநிபவந்து

**அ.நா.சோமாஸ்கந்தசர்மா ஸத்யோஜாதசிவாசாரியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs. A.Balasubramaniyam
136 3/1 Sangamitha
mawatha
Kotahena
Colombo 13

# உங்கள் ஆசிவேண்டி,

எம்மினிய தந்தை விட்டுச்சென்ற அளப்பெரும் சொந்தம் உங்கள் உறவு அந்த நாட்களை என்றுமே நினைத்தவுடன் நினைவுக்கு வருகின்ற நிஜமான நினைவுகள்

ஆண்டுகள் தோறும் இலங்கைக்கு வருகின்ற போது ஆயிரம் வாசல்கள் திறந்திருக்க எம்குடில் கதவுகளை தட்டியதை, வீட்டிற்குள்ளும் மழை பெய்கின்ற மாளிகை, நடுநிசியில் எம் அறை வெள்ளத்தை சத்தமில்லாமல் ஒத்தி எடுத்ததை, தனக்கென என்றுமே வாழ்ந்திராத தந்தையை, தாயை இலண்டன் அழைத்து கௌரவித்து, மகிழ்வித்து மகிழ்ந்ததை, இராஜ கோபுர பணி காலத்தில் , தன் பணி துறந்த தந்தைக்கு இல்லறம் நல்லறமாக்க அறம் புரிந்ததை, தந்தையின் இறுதி அத்தியாய பக்க காலத்தில் பக்கத்தில் அனைவருக்கும் ஆறுதலாக இருந்தை, எவ்வளவு உயர்ந்த போதும் தன் நன்பனை, குடும்பத்தை நினைத்து இருப்பதை

நினைவுகள் தொடர்கிறது..... என்ன தவம் செய்தோமோ மாமா, மாமி
நீங்கள் எங்களுடன் இணைந்துவிட்ட ஒப்பற்ற உறவுகள்

நீங்கள் உயர்ந்தவர்கள், உயரத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும்
உங்களை அண்ணாந்து பார்ப்பதைப் போல உங்கள் வாழ்க்கை நெறியினை உயரப்பார்க்கிறோம்

ஆண்டுகள் தோறும் எங்கள் வீட்டு நிகழ்வுகளை எங்களுக்கே நினைவுபடுத்துகின்ற உங்களின் வாழ்த்து மடல்கள் பல்லாண்டுகள் பறந்துவர வேண்டும்.

நீங்கள்,
பல்லாண்டு இப்பரணியில் நல்வாழ்வு வாழவேண்டும்
பலபேருக்கு நல்வாழ்வு தரவேண்டும்
பலமுறை எம்மை ஆசியுடன் வாழ்த்த வேண்டும்

என எம்மூதாதயரின் ஆசீவேண்டி

அன்புடன்
**மணியண்ணர் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLOMBO HINDU COLLEGE
## RATMALANA.

## முதல்வர் ஆசிச் செய்தி

*வையத்துள்ள வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*

என்னும் வள்ளுவரின் தமிழ் மறைக்கிணங்க உயர்திரு இரத்தினம் இராமநாதன் அவர்கள் உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்ந்து வரும் உயர்வுடையோன் என்றால் அது மிகையாகாது. உயர்திரு இரத்தனம் இராமநாதன் அவர்கள் அறுபது வருடங்களைப் பூர்த்திசெய்து மணிவிழாக் காணும் இந்நாளில் அவரது சீரிய பணிகளை சிந்தை நோக்கி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்

இந்து மதத்தின் மீது கொண்ட ஆழ்ந்த பற்றின் காரணமாக வாழ்க்கையின் பெரும்பகுதியை அதற்காகவே அர்ப்பணித்தவர். உயர்திரு. சிவநந்தி அடிகளாருடன் இருந்து உலக சைவப் பேரவையின் வளர்ச்சிக்காக உதவியது மட்டுமன்றி பல நாடுகளில் நடத்த காரணகர்த்தாவாகவும் விளங்கினார்.

சைவ முன்னேற்ச் சங்கத்தின் வளர்ச்சிப் படிநிலைகளில் அவரது பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். இலங்கையில் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதியினருள் பெருக வேண்டும் என்ற எண்ணத்துடன் இலண்டன் மநாகரில் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கிளையைத் தோற்றுவிக்க முன்னின்று உழைத்தவர்.

மக்கள் பணியே மகேசன் பணி எனக் கொண்டு சமயப் பணி மட்டுமன்றி சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். அகில இலங்கை இந்து மாமன்ற செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவர்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்ற கொள்கையுடன் அதனை முன்னெடுத்துச் சென்ற சைவப் பெரியார்கள் வரிசையில் இவரது பணியும் சிறப்பிடத்தில் வைத்து நோக்கப்படும் என்றால் அது மிகைகாது. மணிவிழாக் காணும் உயர்திரு. இரத்தினம் இராமநாதன் அவர்களின் பணி காலத்தால் அழியாதது என்றென்றும் எல்லோர் உள்ளத்திலும் நிறைந்திருக்கும். இவரது சீரிய பணி என்றென்றும் தொடர பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றேன்.

ந. மன்மதராஜா (கல்வி நிர்வாகசேவை)
**அதிபர்-முழுத்தீவுக்குமான சமாதான நீதவான்**
கொழும்பு இந்துக்கல்லூரி. இரத்மலானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி.செ.குகநாதன், பி.காம்**
இயக்குநர், கதைவசனகர்த்தா தயாரிப்பாளர்

ஏ.வி.எம். சித்ரமாலா கம்பைன்ஸ்
விக்டரி மூவிஸ், 9 லேடி மாதவ சாலை
மகாலிங்கபுரம், சென்னை-600 034
Tel: 8274 333

# மணிவிழா வாழ்த்து

ஈழத்தமிழர்கள் சைவமும் தமிழும் தமது இரு கண்கள் எனப் போற்றி வளர்த்தவர்கள். விபுலானந்த அடிகளார், ஆறுமுக நாவலர் போன்றவர்கள் ஈழத்தில் மட்டுமல்லாது பிற தேசங்களுக்கும் சென்று சைவ சமயமும் தமிழ் மொழியும் வளர தொண்டாற்றியுள்ளனர். இந்த வரிசையிலே தோன்றிய ஆர்வலர்கள் பலர். பிற்காலத்தில் சமயத்துக்கும் மொழிக்கும் சங்கங்கள் நிறுவி அரும்பணி ஆற்றியுள்ளனர். இந்த வரிசையில் வந்தவர்தான் திருமிகு.வி.இரத்தினம் இராமநாதன் அவர்கள். நானும் இவரும் தமிழால் இணைந்தவர்கள். என் சகோதரர் வாமனின் நெருங்கிய பாசத்துக்கும் மரியாதைக்கும் உரியவர் இவர். எமது குடும்பத்தோடு மிகவும் நட்புணர்வோடு பழகி வரும் இவர் தமிழகம் வரும்போதெல்லாம் என்னைச் சந்திக்க தவறியதேயில்லை. குடும்ப நண்பர் என்பதனால் மட்டும் நமது உறவு நிலைக்கவில்லை. தமிழுக்காகவும் சைவ சமயத்துக்காவும் அவர் செய்யும் நற்பணிகளே என்னை அவர்பால் ஈர்க்கவைத்தது. எதையும் சொல்வது சுலபம் செய்வது கடினம். மரியாதைக்குரிய இரத்தினம் இராமநாதன் அவர்கள் செயலாளரான கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தில் இணைந்து அதன் பொருளாளராக பொறுப்பேற்று அதன் வளர்ச்சில் பெரும் பங்காற்றினார். ஈழத்தில் அவர் ஆற்றிய சேவைகள் மறக்க முடியாதவை. நாடுகள் கடந்த போதும் இவரின் சமயப்பற்றும், மொழிப்பற்றும் தேய்மானம் அடையவில்லை. அவர் புலம் பெயர்ந்து இங்கிலாந்து வந்த போதும் அவருடன் கூடவே பிறந்த சைவத் தமிழ் உணர்வின் உந்துதலால் 1977 ஆம் ஆண்டு சைவ முன்னேற்றச் சங்கத்தை இங்கிலாந்தில் நிறுவினார். இச்சங்கத்தின் மூலம் ஆற்றிவரும் சமயப்பணிகளும் மொழிவளர்ச்சி செயல்களும் தமிழர்களால் பெரிதும் பாராட்டப்படுபவை. அத்தகைய உணர்வாளரின் மணிவிழா என அறிந்து அளவிலா ஆனந்தம் அடைந்தேன். மணிவிழா சிறக்கட்டும். வளம்பல பெருகட்டும் ஆண்டுகள் பல அவர்வாழட்டும். ஈழம்மலரட்டும். இவர் பணி மீண்டும அங்கு தொடரட்டும். இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் என்ற அவ்வையின் வாக்குப்படி இவர் வாழ்க்கை அமையட்டும். சமயகுரவர்கள் இவரை வாழ்த்தட்டும். மொழி ஆர்வலர்கள் இவர் பகழ் பாடட்டும். நானும் எமது குடும்பத்தினரும் வாழ்த்துகிறோம். அவரையும் அவர் குடும்பத்தையும். தமிழ் போல் தழைக்க சைவசமயம் போல் நலம்பல செய்திட!

அன்புடன்

**வி.சி..குகநாதன்**
**திரைப்பட இயக்குனர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MANITHA NEYAM TRUST

Love for Humanity

A Trust for Educational Social and other Charitable Services

**24 Deal Place "A", Kollupitiya CO 00300, Sri Lanka**

***E-mail: hometrust@manithaneyam.org - Web site: www.manithaneyam.org***


அறுபது ஆண்டு ஒரு மனிதரின் வாழ்வில் முக்கியமான மைல்கல்லாகும். 2006-08-31 ஆம் நாள் திரு. வ. இ. இராமநாதன் அவர்களுக்கு 60 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது என்றால் அதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சைவத்திற்கும் தமிழிற்கும் இப்பெரியார் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினைத் தாபித்த இப்பெருந்தகை, இந்த அமைப்பின் தலைமைப் பதவியையும் ஏற்று பல நிகழ்ச்சிகளை நடத்திவந்துள்ளார். அவருடைய பணிகள் உலகளாவிய ரீதியில் மிகவும் பிரபல்யம் அடைந்து போற்றப் படுகின்றன. அவருடைய ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு படிகளாக உள்ளன என்றால் மிகையாகாது.

திரு. இராமநாதன் அவர்கள் இப்பணிகளைத் தொடர அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அருளும்படி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வி. கயிலாசபிள்ளை

தலைவர்

10.08.2006


***Chairman:*** V. Kailasapillai
***Telephone:*** 94 (11) 257 5566 - *Fax:* 94 (11) 257 5472
***E-mail:*** chairman@manithaneyam.org, hariomak@eureka.lk

***Secretary:*** Kandiah Neelakandan
***Telephone:*** 94 (11) 237 1100, 94 (11) 258 0807,
***Fax:*** 94 (11) 237 1111, 94 (11) 237 1122
***E-mail:*** neela@sri.lanka.net




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
திருச்சிற்றம்பலம்


# K.K.SUBRAMANIYAM

Paropakara Mani (Kanchi)
Sivathiru Thondar (Thiruvavaduthuai)
Kala Rsiga Mani, Arul Neri Thondar
Siva Tharma Surapi, Sivanesa Selvar, Siva Neri Kavalar. Sri Kanaga Jothi
Asst.Dirctor of Customs(Rtd) Consultant,
Justic of the Peace
28 Ratnakara Place, Dehiwala,Srilanka
Tel/Fax: 2714757


Date: 02-09-2006

அகில இலங்கை இந்துமாமன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை துணைச்செயலாளர் வாழத்து சைவம் தமிழுக்கு செய்து வரும் தொண்டினால் உலகசைவ மக்களைக் கவர்ந்தவர் மணிவிழா நாயகன்.
புகழினுக்குரிய சைவக் குடியில் பிறந்து நல்வாழ்வுவாழும் திரு. திருமதி இராமநாதனை இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பிலும், மேலாக இலங்கையின் பிரமாண்டமான சிவன் ஆலயம் ஈழத்துச்சிதம்பரம் ஆடல்வல்லான் தேவஸ்தானம் சார்பிலும் வாழத்துவதில் பெருமை அடைகின்றோம். புலம் பெயர்ந்த எம் மக்கள் பல திருக்கோயில்கள், சங்கங்கள், சபைகள் அமைத்து பலவாற்றாலும் தொண்டுகள் செய்து சிறப்புற்று வரும் சீராளர் மணிவிழா நாயகனும் நாயகியும் அயல் நாடுகளுக்கும் நேகக்கரம் நீட்டி சமய சமூகப்பணிகள் செய்து வரும் அன்பனார். இவரின் குடும்பத்தை பல்லாண்டுகளாக நன்றாக அறிந்தவன் நான். நல்ல குடும்பம் சிறந்த பல்கலைக்கழகம் இக்கூற்றுக்கு ஏற்ப அவரின் பெற்றோர்கள், இல்லத்தரசி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் இவர்களைப் புண்ணிய பூமியாகிய புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் பார்த்துப் பரவசம் அடைவோம். பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் இவரின் தலைமையில் வெள்ளிவிழாக் கொண்டாடி நால்வர் நெறி என்ற வெள்ளி விழா சிறப்பு மலரும் 31-08-2002 வெளியிட்டனர். சிறந்த மலர். வருங்கால சந்ததிக்கு திரு இராமநாதன் செய்து வரும் தொண்டால் என்றும் எம் மக்கள் சிறந்த சைவர்களாக வாழ்வார்கள். தமிழ் சைவம், கலை, பண்பாடு, கலாசாரம் எனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த மகான். வாழ்க இராமநாதன் தம்பதிகள் வாழ்க வாழ்க!

**கே.கே.சுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LONDON SATH SANGAM**

*Registered Charity 1070737*

அன்புடையீர்,

உயர் திரு. இராமநாதன் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெறுவதை அறிந்து பெருமகிழ்ச்சி. சைவ சமய விழாக்களிலும், மகாநாடுகளிலும், கோவில் உற்சவங்களிலும் அவர் காட்டும் ஆர்வமும், ஈடுபாடும், உற்சாகமும், பக்தியும் மற்றவர்கள் எல்லோருக்கும் முன்னுதாரணமாக அமைகின்றன. இது உண்மை. வெறும் புகழ்ச்சி அல்ல. அவர் நீடூழி வாழ்ந்து சைவ சமயத்துக்கும் மக்களுக்கும் தொடர்ந்து சேவை செய்ய இறைவனை வேண்டுகின்றோம்.

**ச.சுவாமிநாதன்**
**செயலாளர்**

---

132 Dale Avenue, Edgware, Middlesex, UK HA8 6AF
Phone: +44 20 8931 9546

## தீபங்களின் தீபமே! வாழ்க பல்லாண்டு!

இராமா என்றால் தீமை விலகும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே உண்டு. இராமா, இராமா என்று பஜனை செய்வது, தியானம் செய்து தம்மை தீமைகளிலிருந்து விலக்கி வைத்திருப்பர் இந்துக்கள்.

நம் எல்லோருக்கும் தெரிந்த இராம் அண்ணா கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவிக்கரம் நீட்டும் கிருஷ்ண பரமாத்மா.

தெய்வ முகத்துடன் இவர் ஆற்றும் பணிகளுக்கு பட்டியல் கிடையாது. எங்கும், எப்போதும் எல்லோருக்கும் எளியவராய்க் காணப்படும் இராமண்ணா சைவத் தமிழ் உலகின் கலங்கரை விளக்கம். ஐயா என்று நான் அவரை அழைத்தபோது இந்தச் சிறியேனுக்கு தம்பி என்ற உறவு தந்தவர். அண்ணா என்று அழைக்குமாறு அன்புக் கட்டளை இட்டவர்.

லண்டனுக்கு வந்த வருகிறவர்களுக்கு முகவரியாக இருப்பவர். எண்ணிறந்த தமிழர்களுக்கு ஏணியாய் இருக்கும் ஒப்பற்ற தொண்டர், தொண்டர்களின் திலகம். இருட்டை அகற்றும் ஒளி. தீபங்களின் தீபம். "My doors are always open. You can knock my door any time" என்கின்ற எங்களின் மேய்ப்பர். பதினான்கு வயதில் பணிசெய்யத் தொடங்கி மணிவிழாக் காணும் மனிதர்களில் தெய்வம். எங்களின் இதயங்கள் உங்களை வாழ்த்துகின்றன. நிறைந்த ஆரோக்கியத்துடன் வாழ்கவென பிரார்த்திக்கின்றன. எங்கள் சூரியனே உங்கள் பணி தொடரட்டும்.

அன்போடு
**நி.சி. ஜோர்ஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THAMILAR SENTHAMARAI PUBLICATION LTD**
3517 Kennedy Road Suite: 02 , Box: 234 Scarborough Ont, MIV4Y3
TEL: 905- 477- 0076CELL: 416- 707- 6262/46-839-0904
FAX: 905- 470-7486 Eamil: www. thamilars @ aol.com

29-10-2006

## திரு. இ. இராமநாதன்
## சைவ முன்னேற்றச் சங்க ஸ்தாபகர் இலண்டன்

தமிழ் ஈழத்தில் சிறுபிராயத்தில் உங்களிடம் ஏற்பட்ட சமயப் பற்றும் தமிழ் உணர்வும் இலங்கை தலைநகரில் கோயில் கொண்டிருக்கும் கொம்பனித்தெரு திருமுருகன் ஆலயத்தில் சைவத் தமிழ் பணியை இளம் பிராயத்தில் தொடரவைத்தது.

எனக்கும் இன்னும் பல சிறார்களுக்கு அன்றைய காலகட்டத்தில் சைவத்தையும் தமிழையும் போதித்த ஆசிரியர் ஒருவர் மணிவிழா காணும் நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தியொன்று வழங்கும் பாக்கியத்தை எம் முருகப்பெருமான் அருள் பாலித்திருப்பதாகவே என் உள்ளம் எண்ணுகின்றது.

கொழும்பு சைவ முன்னேற்றச்சங்கத்தின் மூலம் நீங்கள் ஆற்றிய சைவத் தமிழ்ப் பணியால் எண்ணற்ற சிறார்கள் இளம் பிராயத்தினர் ஒழுக்க சீலர்களாக வாழ வழி வகுத்ததையும் ஞாபகப்படுத்துவது மணிவிழா வேளையில் என் கடன்.
லண்டனுக்கு புலம் பெயர்ந்து அச் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கிளையொன்றை ஆரம்பித்து அங்கும் சைவத் தமிழ்ப் பணியாற்றி வருவது போற்றுதற்குரியது. இன்று (31-08-06) 60 வயது மலரும் மணிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதோடு, இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து உலகெங்கும் சைவமும் தமிழும் சிறந்தோங்க நீங்கள் தங்களால் ஆன சேவையாற்ற திருமுருகப்பெருமான் அருள்பாலிக்க வேண்டிக் கொள்கின்றேன்.

**அன்புடன்**
**கனக. அரசரத்தினம்.**
**தமிழர் செந்தாமரை - ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள்

விஞ்ஞான சமூக இலக்கிய ஆன்மிக இதழ்

ஆசிரியர் : மு. நற்குணதயாளன்

வானத்திலே ஒரு சூரியன் உதித்த காட்சியைக் கண்டேனே- அந்த
வானத்திலே ஒரு நட்சத்திரம் நன்கு துள்ளிக் குதித்ததுவே
மோனத்திலே யொரு வானத்துத்தேவதை ஆடிடக் கண்டேனே-அந்த
கானத்திலே மெல்ல ராமநாமம் ஓங்கி ஒலித்ததுவே

தசரதன் பெற்ற ராமனிவரோ என்று மலைத்தேனே -அட
தேசம் புகழ்ந்திடும் ராமநாதன் ஒன்றே யென்றறிந்தேன்
கானம் இசைத்திடும் பறவைகள்கூட ராமா என்றனவே-அட
ஞானம் நிறைந்தஇவ் ராமனைப்பார்த்து அசந்துவிட்டேன்

சைவமும் தமிழும் ஒன்றேயான ராமனைக் கண்டேனே-அட
பாவலர்பாடிடும் பாக்களும் இவரும் ஒன்றேயென் றறிந்தேன்
கோவலனுக்காய் கோனை யழித்த கண்ணகி கண்டேனே - அந்தக்கண்ணகியே
இவர் வாழ்க்கைத் துணையாய்க் கண்டு மலைத்தேனே

அறுபதிலும் இவர் ஆடியசைந்திடும் தெம்பினைக் கண்டேனே-இவர்
நூறுக்கு மேலும் இப்படியே இருந்திடக் கனவுகள் கண்டேனே.
வாழிய ராமா வாழியவே நீர் ஆயிரம் காலம் வாழியவே - எங்கள்
முருகன் கூடவருவான் தெம்புடனே நீர் வாழ்ந்திடவேண்டும்

மு. நற்குணதயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினம் இராமநாதன் மணிவிழா வாழ்த்து

உள்ளத்தே கருணையெனும் வெள்ளம் ஊறும்
உடல்பொலியும் தொண்டுபுரி லூகை யாலே
தெள்ளத்தெ ளிந்ததமிழ் நடையும் நன்கு
தேர்ந்தமைந்த ஆங்கிலமும் தெரியலாகும்
கள்ளொத்த இனிமைமிகும் பேச்சில் எல்லாம்
காண்பதிவை உம்வடிவில் ராமநாதா
உள்ளத்தால் உயர்ந்தவரார் உம்மைப் போலே
உமதுமணி விழாஇன்று காணு கின்றோம்

திருவருளே துணையாகச் சைவ வாழ்வை
திரமுடனே எந்தநாளும் தேக்கி வாழ்வீர்
குருவருளும் நிறைசெல்வம் யாவும் பெற்று
குணக்குன்றாம் மனைவியொடும் சேய்களோடும்
அருவுருவன் அருள்கொண்டு உமது நூறாம்
ஆண்டுவிழா கொண்டாட விழையும் மாந்தர்
எருதுடைய சிவனருளை வேண்டி நின்றார்
என்னுடைய ஆசையும்மற் றஃதே ஆகும்

**மு. சிவராசா (கணக்காளர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைத் தொண்டாக்கி வாழ்ந்த பெருமகனார்!

உயர்ந்தோர் உவக்க உலகெலாம் வாழ்த்த
அயராது உழைத்து அரும்பணி செய்து
தயங்காதென்றும் சைவம் தழைத்திட
நயந்தவர் தமக்கு நன்மணி விழாவாம்

ஊரெலாம் சைவ உண்மைகள் விதைக்க
வீறுடன் உழைத்த விறல்மிகு தொண்டன்
நீறுடை நெற்றியும் நிறைவுடை நெஞ்சுமாய்
மாறிலா அன்பதை மழையெனப் பொழிந்தவன்

**வேறு**

வேதநெறியதுவும் மிகுசைவத்துறையதுவும்
ஓதப் பயன்செய்யும் ஓங்குதிரு முறையதுவும்
தீதகல உலகெங்கும் திகழ்ந்திடவே செய்தமகன்
நாதன் அருளாலே நல்லமணி விழாக் கண்டான்

ஈழமது முன்னேற இருந்துபல தொண்டியற்றி
காலமது துரத்திடவே கடல்கடந்து சென்ற மகன்
நீள இடம் பெயர்ந்தும் நெஞ்சமதில் சைவத்தை
ஆழப் புதைத்ததினால் அங்கும் பணி செய்தான்

புலம்பெயர்ந்த மக்களெலாம் புன்மை நெறிபற்றி
நலந் தொலைத்து நன்நெறியை நாளும் மறக்கையிலே
குலஞ் செழிக்கச் சைவத்தைக் கூறியவர் கைபிடித்து
பலஞ்சேர்த்த வல்லாளன் பார்போற்றும் பெருந்தொண்டன்

முதியோர்க்கு அரவணைப்பு முற்றாத பாலர்தமை
நிதியாகச் சைவத்தை நினைப்பிக்கும் முழுமுனைப்பு
கதியிலா ஏழைகட்குக் கல்விதரும் பெருஞ் சிறப்பு
அதிராத பெருந்தொண்டால் அனைவரையும் ஈர்த்தமகன்

சைவ அபிவிருத்திச் சங்கத்தை உலகளவாய்
பொய்யிலா நெஞ்சத்தால் பொலிந்திடவே உயர்த்தியவன்
வையம் முழுவதையும் வாஞ்சையுடன் நேசிக்கும்
தெய்வ இயல்புடையோன் திகழும் நற்தொண்டுடையோன்

வாழ்வைத் தொண்டாக்கி வாழ்ந்த பெருமகனார்
நாள்தோறும் சைவத்தை நயந்த பெருமகனார்
ஊழிபல கடந்தென்றும் உவக்கும் மனத்தோடு
நீளப்புகழ் கொண்டு நெடிதுயர்ந்து வாழ்ந்திடுக

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஞ்சை நிறை நெஞ்சம்

-மாலி-

மனவெளியில் ஒரு பெரு விசாலப்பரப்பை நிறுத்தியது அன்று காலையில் அந்த நூல் விமர்சனத்தில் கேட்ட சில வாசகங்கள்.

ராஸி விற்ராச்சியின் பிரசித்தி பெற்ற அவசரகால நிலை-58 நூலை திரு. மு. நித்தியானந்தன் தீபம் தொலைக்காட்சியில் அவரின் வெள்ளி விமர்சனத்தில் விமர்சனம் செய்துகொண்டிருந்தார். இலங்கையில், ஏரிக்கரை நிறுவனத்தின் ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த கீர்த்திமிக்க பத்திரிகையாளர் திரு. ராஸி விற்ராச்சி நாளாந்தம் சம்பவங்களைப் பதிவு செய்ய வேண்டிய கடமை பத்திரிகை ஆசிரியர்களுக்கு இருந்த அதே வேளை அத்தகைய சம்பவங்களில் சில, இனக்கலவரத்தை மேலும் தூண்டி, நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் என்று கருதிய வேளைகளில் அவற்றை அதி முக்கியப்படுத்தாமலோ, அல்லது முற்றாக தவிர்த்தோ , இலங்கையில் பத்திரிகை ஆசிரியர்கள் 1958 இனக்கலவரத்தின் போது தமது சொந்த தணிக்கை முறை ஒன்றைப் பேணிவந்ததை தன்னுடைய நூலிலே ராஸி விற்ராச்சி குறிப்பிடுவதைக் குறிப்பிட்ட திரு நித்தியானந்தன் பத்திரிகை ஆசிரியர்கள் அப்டியெல்லாம் அப்போது செயல்பட்டிருக்கறார்கள், அத்தகைய ஒரு தார்மிகப் பண்பை இப்போதெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாது என்று தன்னுடைய குறிப்பையும் கூறினார்.

அந்த இனக்கலவரம் ஆரம்பித்ததிலிருந்து தேசிய பத்திரிகைகள் நாடு முழுவதும் இடம்பெற்ற சம்பவங்களை மிகுந்த கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் பிரசுரித்து வந்தபோது அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதும், முதல் முதலில் அச்சட்டத்திற்குப் பலியாக நேர்ந்தவை பத்திரிகைகளே என்று ராஸி விற்ராச்சி கொதிப்படைகிறார். அது காலவரை தம் கண்முன்னே நிகழும் கலவரங்களே அவற்றுக்கொரு முடிவைக் காணட்டும் என்று அரசியல்வாதிகள் கைகட்டிக்கொண்டிருந்தவேளை பத்திரிகைகள் நாட்டின் நலன்கருதிய பாரிய பணியில் மிகுந்த பொறுப்புடன் செயல்பட்டதை அந்த நூலில் ராஸி விற்ராச்சி குறிப்பிடுகின்றார்.

உண்மைகள் புனிதமானவை ஆனால் கருத்துக்கள் சுதந்திரமானவை என்ற என் மனதில் பதிந்த பழமைவாய்ந்த பத்திரிகா தர்மக் கோட்பாட்டுடனேயே நான் இந்த நூலை எழுதுகின்றேன் என்றும் ராஸி விற்ராச்சி அந்த நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்த இனக்கலவரங்களிலும், தீர்வு காணப்படாது அங்கு தொடரும் இனப்பிரச்னையிலும் தொலைந்து போய்விட்ட அக்கோட்பாடும், அதன் செழுமையும் அப்போது அந்த மனவெளியில் ஏகாந்தமாய்த் தெரிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியொரு செழுமையுடன் 90 களின் ஆரம்பத்தில் இங்கிலாந்திலிருந்தும் ஒரு தமிழ்ப் பத்திரிகையை வெளிக்கொணர ஆவல் கொண்ட வேளை அதில் மனதார மனம்கொண்டவர்கள் ஒரு சிலர். அந்த ஒரு சிலரில் ஒருவர் திரு.வ.இ.இராமநாதன்.

ஈழத்தமிழர்களின் புலம் பெயர்வழ்வு இரண்டு தசாப்தங்களை எட்டியுள்ள போது இக்காலப்பகுதி கண்ட மாற்றங்கள் அநந்தம். எனினும் அன்று அந்த பத்திரிகை முயற்சியில் திரு. இராமநாதன் அவர்களது வாஞ்சை நிறைந்த விசுவாச சிந்தையின் சாட்சியம் நான்.

ஒரு சாதரண மனிதனை விஞ்சிய சிறப்பான குணவியல்புடன் தான் அவர் முதலிலேயே அறிமுகமாகி இருந்தார்.

தொடங்கிய தமிழன் பத்திரியை தொலைந்துபோன பத்திரிகா தர்மத்தில் தொலைந்தே போயிற்று. கால மாற்றத்திலும், காணும் மாற்றங்களிலும், திரு. இராமநாதன் என்னில் அவராகவே தெரிகிறார். அவரோடு சேரவே தெரிபவர் அவரின் அன்புக்குரிய மனைவி.

**அன்புடன்**

**சு. மாகாலிங்கசிவம்**
**(மாலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகர் திரு இராமநாதன் இளமை என்றும் வாழியவே!

அன்பறிவு ஆற்றல்மிகும்
அழகர்திரு இராமநாதன்
என்பினையும் மனமுவந்தே
ஈந்திடர்கள் தீரத்துநிதம்
மன்பதைக்குச் சேவைசெய்ய
வந்தமாசில் மக்கள்நாதன்
இனபகவை அறுபதுவோ
இளமையென்றும் வாழியவே

முன்னாளிற் கொழும்புசைவ
முன்னேற்றச் சங்கத்திலே
பொன்னான பணிபுரிந்து
புகழ்பெற்ற இளைஞரிவர்
பின்னாளில் லண்டனிலே
பெருமுயற்சி எடுத்ததனை
முன்னாக நின்றமைத்த
தன்னேரில் முதல்வரென்றே!

நட்டமரம் சீர்த்ததுவாம்
நறுமலர்கள் பூத்ததுவாம்
மட்டிற்சுவைக் கனிகனியாய்
மக்களுக்கு வழங்கியதாம்
பட்டரிய பாடுகளைப்
பாங்குடனே அதைவளர்த்த
திட்டமகன் இராமநாதன்
சிறந்தென்றும் வாழியவே!

இமையாது தூங்காதே
இங்கிலாந்திற் கூட்டாக
தமிழ்மொழியைச் சைவத்தை
தழைத்தோங்கச் செய்கின்றார்
சமுதாயத் தேவையையும்
சால்புடனே வழங்குகின்றார்
எமதன்பர் இராமநாதன்
இவருக்கிங் கிணையாரே!

இங்கிலாந்தில் மட்டுமன்றி
ஐரோப்பா கனடாவென்று
எங்குமுள்ள தமிழர்களின்
இன்பணிகட் குதவிடுவார்
தங்ககுண மனைவியுடன்
தகைசான்ற புதல்வருடன்
திங்கள்சடை சூடியவர்
திருவருளால் வாழியவே

தாயகத்தார் சுனாமியினால்
தவித்தநிலை தாங்காதே
ஆயசைவ முன்னேற்ற
அமைப்பதனால் உதவிபல
வாயுமே வியக்கின்ற
வேகத்தில் வழங்கிநின்ற
தூயவரே வரலாற்றில்
துலங்கிடுவீர் தொண்டாலே!

காலமெலாம் ஒளிவீசும்
கதிர்போல வாழியவே
ஞாலமெலாம் நலஞ்செய்யும்
நதிபோல வாழியவே
கோலமனை மக்களுடன்
குறைவில்லாப் பெருவாழ்வு
சாலவெய்திச் சிவனருளால்
சந்ததமும் வாழியவே!

வி கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நலன்புரிச் சங்கம் (ஐ.இ)

# Tamil Welfare Association of Newham

602 Romford Road Manorpark London E12 5AF
Tel: 020 8478 057

## மகிழ்வுரை

அன்புடையீர்,

மணிவிழாக் காணும் திரு. வ.இ.இராநாதன் அவர்களுக்கும் ஐக்கிய இராச்சியத்தில் நியூஹாம் பகுதியில் சேவையாற்றிவரும் தமிழர் நலன்புரிச் சங்கத்தினருக்கும், எனக்கும் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக அவரின் சமய சமூகத் தொண்டினூடாக அறியப்படுவர் என்பது பலரும் அறிந்த மகிழ்ச்சிக்குரிய விடயம்.

அந்த தர்மசீலர் இன்று அறுபதாவது வயதை எட்டியுள்ளார் என்றால் அவரது குறைந்த பட்ட நாற்பது ஆண்டு கால சமய சமூக தொண்டிற்கு நமது தமிழ் சமூகம் சார்பில் எமது ஸ்தாபனத்தினூடாக நன்றி கூறுவது சாலச் சிறந்ததாகும்.

பலர் கூடி இழுக்க உகந்தது தேர். அது போல் கூடி வாழ்த்த உகந்தது இம் மணிவிழா காரணம் ஒர மனிதன் தனது அறுபதாவது ஆண்டில் பிரவேசிக்கும் போது ஜனன காலம் போன்று கோள்கள் ஒன்று கூடும்.

இத் தருணத்தில் அடுத்த இருபது ஆண்டுளுக்காவத அவரின சமய சமூகத் தொண்டின் வழி நடத்தலை தடம் பற்றி அவரின் அனுபவங்களை நாம் கற்று உணரமுன் வரவேண்டிய நேரம் இது என்பதையே இம் மணிவிழா எமக்கு நினைவூட்டுகின்றது. திரு. இரத்தினம் இராமநாதனின் சஷ்டி அப்த பூர்த்தி வைபவமும் சான்றோரின் ஆசியும் கூடி திட சிந்தையும் தீர்க்க ஆயுளும்பெற்று அவர் சேவை தொடர்ந்து சதாபிஷேகம் காண இறையருள் கூடி சிரஞ்சீவியாக வாழ நம் மகிழ்வுரை.

தீர்க்காயுஷ்மான்பவ தீர்க்கசுமங்கலீபவ
சுபமங்களம்

**ஜனார்த்தன சர்மா**

தமிழர் நலன்புரிச் சங்கம் (நியூஹாம்) ஐ.இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணியான பணிகள் செய்யும் மணியான மகன்!

திரு இ. இராமநாதன் அவர்களது மணிவிழாவை நண்பர்கள் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் பல விழாக்கள் நடத்தியவர். பலபேருக்கு விழாக்கள் எடுத்தவர். அதனால் அவரது விழாவில் பலரும் இணைந்து கொண்டு அதனை வெகு சிறப்பாக நடத்தவேண்டுமென்று அணி சேர்ந்திருபதில் வியப்பேதுமில்லை.

திரு இராமநாதன் அவர்கள் தனிப்பட்ட முறையிலும் பல சமய சமூக அமைப்புகள் மூலமும் செய்துவரும் உதவிகளும் தொண்டுகளும் அளப்பரியன. அவற்றால் இங்கிலாந்து வாழ் மக்களன்றித் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதுமே பயன்பெற்று வருகின்றன.

அவற்றுள்ளும் அவரது சைவ முன்னேற்றச் சங்கப் பணிகள் எவ்வளவுக்கு இன்றியமையாதன என்பதை ஆழிப்பேரலை அழிவின்போது தாயகத்து மக்களுக்கு உதவும் வகையில் சங்கம் மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

இத்தகைய அணியான பணிகள் செய்யும் மணியான மகன் எல்லா நலன்களும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து மேலும் பணி செய்ய எல்லாம் வல்ல சிவபெருமானை இறைஞ்சி விழா இனிதே நடைபெற எமது குடும்பத்தின் சார்பிலும் கனடா இளங்கலைஞர் மன்றத்தின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்

**பொன் சுந்தரலிங்கம்**
தலைவர்
கனடா இளங்கலைஞர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறாண்டுகள் வாழ்க

சைவத்திருவாளர் திரு இரத்தினம் இராமநாதன் அவர்களின் அறுபதாவது பிறந்தநாள் வருவதும் அதனை ஏதீடாகக்கொண்டு மணிவிழா மலர் ஒன்றை அவரிடம் அன்பு கொண்ட நண்பர்கள் வெளியிட இருப்பதும் அறிந்து அளவிலா மகிழ்ச்சி கொண்டேன். மனிதரில் தனக்கென மட்டும் வாழாது-தனது தாய்மொழிக்கும் தாய்ச் சமயத்திற்கும் மனித குலத்திற்கும் தொண்டு செய்து வாழ்ந்து புகழீட்டுவது சிலருக்கே வாய்க்கும். அந்தச் சிலருள் ஒருவர் என் இனிய நண்பர் திரு இரத்தினம் இராமநாதன் அவர்கள்.இலங்கையைத் தலைமை இடமாகக்கொண்டு செயற்பட்டுவரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கிளை ஒன்றை லண்டனில் நிறுவிப் பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து அதன் வெள்ளிவிழாவையும் மிகச் சிறப்பாக நடத்திக்காட்டிய தீரர் இவர்.

அந்த விழாவில் பங்கேற்கும்பேறு எனக்கும் வாய்த்தது. லண்டன் மாநகர வீதிகளில் நாயன்மார்களைத் தோளில் சுமந்து ஊர்வலமாக எடுத்துச் சென்ற காட்சி என் மனத்திரையில் நிழலாடுகின்றது.

திரு இராமநாதன் அவர்கள் சிவபக்தர் மட்டுமல்லர். சிறந்த தனிமனிதப் பண்பாளர். லண்டனில் முரண்பட்ட பண்புடையார்களுக்கு இடையே நட்புப்பாலம் அமைத்த தனி நாகரிகம் கொண்டவர்.

தமிழர்கள் எடுக்கும் எந்த ஒரு விழாவிலும் அவர்பங்கு நிச்சயம் இருந்தே தீரும். பண்பு பாராட்டும் தூய நெஞ்சும் வழங்கி மகிழும் ஈர அன்பும் அவர் பண்புகளுக்கு அணி செய்வன.

புலம் பெயர்ந்து லண்டனில் குடி புகுந்த தமிழ் மக்களின் துயர் துடைத்து வாழ்வு தருவதில் அவர் ஒரு மனித நேய மாண்பினராகவே திகழ்ந்தார்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பதற்கேற்ற மனையறத்தின் வேராக விளங்குபவர் அவர்தம் அன்புத் துணைவியார்.

தந்தை என்நோற்றான் என்று உலகம் வியக்க வாழும் அன்புப் பிள்ளைகள்.

அவர் ஆசாரியர்களிடத்தில் காட்டும் பணிவையும் நேயத்தையும் சிவஸ்ரீ இரா நாகநாதசிவம் குருக்கள் அவர்களுடனான நட்பால் நான் கண்டு மகிழ்ந்தவன்.

இத்தகையோர் நூறாண்டுகாலம் வாழவேண்டும் என்று பிரார்த்திப்பது நமது கடமை. சிவனருள் அன்னாரை நீண்ட ஆயுளுடனும் நிறைந்த செல்வத்துடனும் வாழ்விக்கும் என்பது உறுதி.

பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை
மண்ணில் நல்லவண்ம் வாழ்க

**முனைவர் இரா செல்வக்கணபதி, சென்னை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் இங்கிதமான மாணவன்

என்னால் நம்பமுடியவில்லை. எனது மாணவன் இராமநாதனுக்கு அகவை அறுபதா? சிந்தனை பின்நோக்கித் தள்ளப் படுகிறது.என் கண்முன்னே தோன்றும் அந்தத் தோற்றம். சிவந்த மேனி. சற்று நீள்வட்டமான தலையில் குறுகலாக வெட்டப்பட்ட தலைமயிர், நீறு பூத்த நெற்றி, குட்டைக் கால்சட்டை சேட் அணிந்த சற்று மெலிந்த தோகக் கட்டு,பயந்த சுபாவத்துடன் தானும் தன்கருமமும் என்றில்லாமல் பல துறைகளிலும் பாடசாலை முத்திரை பதித்து பாடசாலை வாழ்க்கையை ஓட்டிய அந்த எளிமையான மாணவன் இன்று சாதனை நாயகனாய் யாபேராலும் போற்றும் வண்ணம் சைவத்துக்கும், தமிழுக்கும், சமூகத்துக்கும் தொண்டாற்றி அளப்பரிய புகழுடன் ஓங்கி நிற்பதை என்னால் நம்பமுடியவில்லைத் தான் ஆனால் நம்பித்தானே ஆகவேண்டும்ஏனெனில் அது அப்பழுக்கற்ற நிசம்.

அண்ணன் பத்மநாதனுடன் கொழும்பிலே பெற்றோர் கண்காணிப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்த இராமநாதன் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் விளைவாக பெற்றோரை விட்டுப் பிரிந்து சொந்த ஊரான பன்னாலைக்கு இடம் பெயர்ந்து 1958ல் வந்து தந்தையார் கல்வி கற்ற மகாஜனாவில் சேர்ந்து கற்றக வேண்டி வந்தது.

கொழும்பிலே நகரத்துப் பாடசாலையில் கற்ற இராமநாதனுக்கு மகாஜனாவின் எட்டாம் வகுப்பு தகரக் கொட்டில்,திறந்த வகுப்பறை என வித்தியாசமான சூழல்தான்.ஆனால் இராமநாதன் மிக சுலபமாக பாடசாலையிலும் பன்னாலைக் கிராமத்திலும் ஒன்றி விட்டதுடன் மிக விரேவிலேயே எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் ஒரு விசேட நபராகிவிட்டார்.

பாடசாலையில் மாணவர் சாரணர் இயக்கம், சைவ சமய மன்றம் ஆகியவற்றின் இன்றியமையாத முக்கியஸ்தர் ஆகியதுடன் பல நல்ல காரியங்களில் முன்னின்று உழைத்தமையால் அதிபர் ஆசிரியரின் பாராட்டுதல்களையும் பெற்று பலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.ஏனைய மாணவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையம் தன்னலம் கருதாமல் உதவுவது இராமநாதனின் தனித்துவம் என்றால் அத மிகையான கூற்று அல்ல. எத்தனை பாரிய உதவியாக இருந்தாலும், அது எத்தனை நேரம் எடுத்தாலும் கொஞ்சம் கூடச் சலிப்பக் காட்டாமல் அதனை முடித்துக் கொடுத்து உதவவது இராமநானின் குணாதிசயம்.பாடப் படிப்பிலும் சோடை போகாமல் பார்த்துக் கொண்டார்.

ஊரிலேயும் சமய சமூக விவகாரங்களில் பெரும் ஈடுபாடு காட்டிய இராமநாதன் மிக்க இளம் வயதிலேயே மிகப் பாரிய பொறுப்புக்பகளை ஏற்றுத் திறம்பட நிர்வகித்தமையால் ஊரே அவர் புகழ் பாடிற்று. 14 வயதிலேயே பன்னாலை ஞானவயரவர் ஆலயத்தின் கூட்டுப் பிரார்த்தனைக் குழுவினுக்கு செயலாளராகி கூட்டுப் பிரார்த்தனைகள், சமய சொற்பொழிவுகள் என பல நற்செயல்களின் காரணராக விளங்கியமையால் 1964 ஆம் ஆண்டிலே அவர் மீண்டும் கொழும்பு செல்கையில் ஊரே வருந்தியது.அவரிடத்தில் இன்னொருத்தரை வைப்பதற்கு அரும்பாடபடவேண்டியதாயிற்று.

கொழும்பு சென்ற இராமநாதன் அங்கும் சும்மா இருந்தாரில்லை. தனது வாழ்வின் குறிக்கோளான சமயப் பணி , சமூகப்பணி , தமிழப்பணி என மும்முனைகளிலும் தனது முத்திரையைப் பதித்தார். பின்னர் மேற்படிப்பிறகாக இங்கிலாந்து சென்றதும் அதே பணி தொடர்ந்தது. இன்று வரை தொய்வில்லாமல் செல்கிறது.

இராமநாதனின் ஏற்றம் பெற்ற வாழ்வினுக்கு உறுதுணையாய் நிற்கும் அவரது இல்லத்தரசி திருமதி விஜயலட்சுமியும் எமது பாடசாலையின் பழைய மாணவி என்பதில் நாம் பெரிதும் மனமகிழ்கிறோம். அவரது முழுமையான பங்காற்றல் இல்லாமல் இராமநாதனால் இத்தனை சிறப்பாகத் தான் ஏற்ற அத்தனை பணிகளையும் செய்வது சாத்தியம் இல்லை.

அவர்கள் இருவரும் சுகதேகிகளாக மேலும் பல்லாண்டு வாழ்ந்து இதே பணிகளைத் தொடரவேண்டும் என வாழ்த்துகிறோம்.

**பொ. கனகசபாபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்
## இலண்டன்

நன்மையே தொடர்வார்க் கென்றும்
நன்றல விழைவ தில்லைத்
திண்மையைத் தீண்டா தென்றும்
தூயனாய் ஆண்டாய் வாழ்வை
அன்பெனும் தோணி பற்றி
அமர்ந்தறம் புரியும் ராமா!
பன்னிரைந் தகவை கண்டாய்
பாடினோம் பல்லாண்டுற்கே!

பத்தறாண் டடைந்தாய் என்று
பகர்ந்தனர் கேட்டு நாமும்
சித்தத்துள் சிலிர்த்தோம் சீர்த்த
சிவனடி நினைந்தோம் நிற்காய்
பத்தியை வளர்த்து மாந்தர்
பண்பினை மிளிர்க்க வேண்டிச்
சித்ததன் அந்தம் செப்பும்
சைவத்தைப் பரப்பும் நோக்கில்
வைத்தனை இந்த நாட்டில்
சைவமுன்னேற்றச் சங்கம்
பத்தனே உன்றன் தொண்டைப்
பறைகிறோம் பரப்புகின்றோம்.

பணியணி சிவனார் மார்க்கம்
பரப்லே பணியாய்ப் போற்றி
அணிதிகழ் தமிழி னூடே
அப்பணி தலை மேற் கொண்டாய்
மணிவிழாக் காணல்கேட்டு
மகிழ்வொடு பெருமை சேரத்
துணிவுறு வேலன் வட்டத்
துறுப்பினர் நாமெல் லோமும்
பிணியற நெடுநாள் வாழ் கென்
றுளம் குழைந்துரைத்தோம் வாழ்த்து
மனையவள் விசியோ டென்றும்
மனையறம் சிறக்க வாழி!

உயிரென உன்னோ டொன்றி
நிழலெனத் தொடர்ந்து நோற்றுச்
செயமுனக் கெட்டும் வண்ணம்
சேர்ந்துகை கொடுத்து வாழும்
விசயலட் சுமியாள் நல்லாள்
வாய்த்தனள் இல்லாள் ஆகத்
துயரறத் தூயராகப்
பயந்தனை இருவர் மைந்தர்
நயமுறப் பெற்றய் எல்லாம்
நல்லை நீ வாழி வாழி!

**செ. சிறீக்கந்தராசா**
வித்துவான் வேலன் வட்டத்தின் சார்பில்
66 உவெஸ்றோ காடின்ஸ், இல்போட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் - வவுனியா

ஓம் சாயிராம்

# ஆசிச்செய்தி

வெற்றியாளர்களும், சேவையாளர்களும் மண்ணின் மகத்துவமானவர்கள். அவர்கள் வாழ்தலில் தான் இம் மண்ணில் பல மலர்வுகள் ஏற்படுகின்றன. அந்த வகையில் வெற்றியாளராகவும், சேவையாளராகவும் இருக்கின்ற திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்து வாழ்வித்து இன்று மணிவிழாக்காண்பது மனதுக்கு மகிழ்வைத் தருகின்றது. இக் காலத்தில் இப்படியான மனித நேயமுள்ள மனிதர்கள் மனமுவந்து சேவையாற்றுவது போற்றக்கூடிய தொன்றாகும்.

எங்கும் அன்பு எதிலும் சேவை என்பதும் மந்திரம் சொல்லும் வாய்களை விட சேவைகள் செய்யும் கரங்களே சிறந்தன என்பதும் இவருடைய வாழ்க்கை முறையாக அமைவதுடன் பகவானின் உண்மையான பக்தர் என்பதையும் எடுத்தியம்புகின்றது. அவர் வவுனியாவிற்கு வருகை தந்த போது எமது சாயி சாந்தத்தின் பணிகளைக் கேள்விப்பட்டு தமிழருவி. த. சிவகுமார் அவர்களுடன் எமது சேவா நிலையத்திற்கு வருகை தந்தார். எமது சேவைப் பணிகளைப் பற்றி அறிந்து கொண்டார். அன்றைய தினமே சிறு தொகையை அன்பளிப்பாக வழங்கினார். அதுவே இதுவரை எமக்கு நாம் செய்து வருகின்ற பெரிய சேவைப் பணிகளுக்கு அச்சாரமாக அமைந்தது. எம்மால் கூமாங்குளத்திலே சிறுவர் இல்லம் ஒன்று மிகச் சிறப்பான முறையிலே பகவான் அருளால் நடாத்தப்பட்டு வருகின்றது. மனிதர்களையே தன் தூதுவராக அனுப்புகின்றார் என நாம் நம்புகின்றோம். இம் மணிவிழாநாயகன், அன்றைய எமது தலைவர் திரு. எஸ். ரகுநாதபிள்ளையுடன் கலந்து பேசி பதினைந்து ஆதரவற்ற சிறார்களுக்கு தாம் அனுசரணை அளிப்பதாகக் கூறினார்.

இச் சேவை எமக்கு பெரும் ஆதரவாக அமைந்தது. அது மட்டுமல்லாது சிறுவர் இல்லத்திற்கு பல தடவைகள் நேரடியாக தமது குடும்பத்துடன் வருகை தந்து சிறார்களுடன் கலந்து மகிழ்ந்தார். தேவை அறிந்து செய்கின்ற சேவைகள் தெய்விகமான சேவைகள். அந்த தெய்விகமான சேவையையே திரு. இராமநாதன் அவர்களும் செய்தார்கள் என்றால் மிகையல்ல.

இப்படிப்பட்ட சேவையாளருக்கு மணிவழா எடுப்பது பொருத்தமானதே. தன் தாய் நாட்டின் உறவுகளின் உள்ளங்களை உணர்ந்து தம்மால் இயன்ற உதவிகளை ஆற்றிவருவதற்கு தனியான தயாள குணம் வேண்டும். ஆனாலும் பகவான் பாதங்களை நாடுபவர்கள் இப்படியான தயாள குணத்துடன் இருப்பது ஆச்சரியமானதொன்றல்ல.

திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் மணிவிழா மட்டுமல்ல நூற்றாண்டு விழாக் கண்டு இப்புவியில் இவ்வாறே சிறப்புற வாழ்ந்து சேவையில் திருப்தி கண்டு வாழவேண்டும். அவர் தம் பாரியார் மற்றும் பிள்ளைகள் அனைவருடனும் இன்புற்று வாழ எல்லாம் வல்ல சாயி நாதனை நாம் பிரார்த்திக்கின்றோம். அந்த பதினைந்து ஆதரவற்ற சிறார்களின் ஆத்ம சந்தோசமே உங்களை வாழ்விக்கும்.

**அன்புடனே வாழ்வைத் தொடங்கி**
**அன்புடனே வாழ்வைக் கழித்து**
**அன்புடனே வாழ்வை நிரப்பி**
**அன்புடனே வாழ்வை முடிக்க வேண்டும்**

என்கின்ற புட்டபர்த்தி நாதனின் அருள் வாக்கிற்கு அமைய நீங்களும் வாழ்ந்து மற்றவர்களை இன்னும் வாழ்விக்க வேண்டும். அதற்கு அனைத்துச் செல்வங்களையும் பகவான் அளிப்பார். அதற்காக நாம் எமது நிலையத்தின் சார்பில் பகவானிடம் ஆசியைக் கோரி நிற்கின்றோம். **ஜெய் சாய்ராம்**

என்றும் சாயிசேவையிலுள்ள - **நி. பரமேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SELVAM PRINTERS

33 STATION ROAD
LONDON E12 5BP
TEL: +44(0)181 478 0207
FAX: +44(0)181 478 0207

செல்வம்
அச்சகம்

அன்பும், பண்பும், பக்தியும், பிறர்நலம் தன்னதலமாக
எண்ணும் குணமும், கொண்ட
திருவாளர் வ.இ.இராமநாதன், அகவை அறுபதில்
ஆற்றிய தொண்டுகள் பல்லாயிரம்.
அவை எண்ணிலடங்காதவை.
திருவாளார் வ.இ.இராமநாதன் சைவமும் தமிழும்
தன் இரு கண்கள் என வாழும் இயல்பினர்.
சைவ முன்னேற்றச் சங்கம் இதற்குச் சான்று.

**"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும்பெய்யும் மழை"**

என்னும் நால்வாக்குக்கு இலக்கணமான திருவாளர்
வ.இ.இராமநாதன் நீடூழி வாழ்ந்து மேன்மேலும்
நற்றொண்டுகள் பல ஆற்றி சீரும் சிறப்பும், நற்சுகமும்
பெற்று பல்லாண்டு வாழ்க வளமுடன் என்று
நல்வாழ்த்துக் கூறி மனமார வாழ்த்துகின்றோம்.

நன்றியுள்ள
செல்வம் அச்சகத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 Deblyn Drive.
Toronto, Ontario
M1S 1J4, Canada

Aum Namasivaya

August 3rd, 2006

***It gives me great pleasure to be associated with the 60th birthday celebration of Mr. V. R. Ramanathan.***

***I met Mr. Ramanathan for the first time when he came to Toronto to attend the 9th World Saiva Conference in July 1999. Since then I have been meeting him at all our conferences and few other functions in Canada and U.K.***

***The World Saiva Council has its head quarters in London, UK with branches in several countries including U.K. Mr. Ramanathan has been a very active executive member of the parent body and the U.K branch. He is one of the founder members who were the principle inspiration behind the dynamics of the WSC. He stood firm with Thavath Thiru Sivanandi Adikalaar in spearheading meaningful reforms in Tamil Saivism.***

***May Lord Siva continue to shower his blessing on
Mr. and Mrs. Ramanathan to continue their services.***

Sincerely,

Dr. Shan A. Shanmugavadivel
President, WSC, Canada Branch
Secretary General, WSC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

கனகசபாபதி நாகேஸ்வரன் எம்.ஏ

**சப்ரஹமுவ பல்கலைக்கழகம்**

தபால் பெட்டி இலக்கம்: 02 பெலிஹுல்ஓய இலங்கை

தொலைபேசி: 0094 452280017 0094 112909890 0094 7753 40255

## ப.்.றுளி ஆற்றின் பெருமணல் போல வாழிய நீடு

மணி விழா நாயகர் இராமநாதன் ஐயா திருமதி விஜயலட்சுமி இராமநாதன் அம்மா குடும்பத்துடன் ப.்.றுளி ஆற்றின் பெருமணல் போல வாழிய நீடு என்று உளமார வாழ்த்துகின்றோம்.

இவ் வாழத்துச் சான்றோன் இராமநாதன் அவருக்குப் பெருத்தமானதாகும். திரு. இராமநாதன் அவர்கள் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்துடன் மட்டுமன்றி இலங்கை கொழும்புகொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி கல்முனை நால்வர் கோட்டம் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஆகிய நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புடையவர். உலக சைவ மாநாடுகள், என்பவற்றில் பங்கேற்றுக் கொள்வதுடன் இனியெதிர் காலத்திலே நமது சைவ சமயமும் சைவப் பண்பாடும் செழித்து நிமிர்ந்து வளர்வதற்கு வேண்டிய உதவிகளையும் உறுதுணைகளையும் பற்றிச் சிந்திதுச் செயற்படுவர், உதவுபவர்.

பல வழிகளிலும் கொழும்பில் ஸ்ரீ சிவ சுப்பிரமணியசுவாமி கோவிலின் பணிகளிலே பெருந்தொண்டுகளாற்றியவர். இராமநாதன் அவர்கள். சைவ முன்னேற்றச் சங்கம் எனும் அமைப்பின் பெயர் எங்கெல்லாம் சொல்லப்படுகின்றதோ அங்கெல்லாம் தொண்டன் இராமநாதன் அவர்களின் பெயர் உச்சரிக்கப்படும். திரு. இராமநாதன் சைவம் வாழ வேண்டும், பக்தி, பண்பாடு, ஆலயவழிபாடு, நமது மகத்துவக் கொள்கைகள் அனைத்தும் வாழ வேண்டும் என்பதற்காக வாழ்ந்து வருபவர். பல பெரியார்களைப் பாராட்டிய வாழ்த்திய பெரியார். பல விழாக்களையும் மாநாடுகளையும் கருத்தரங்குகளையும், நடத்தியவர். சிறந்த நிர்வாக ஆற்றல் கொண்டவர், செயல்வீரர். பரோபகாரி. தமது வீட்டையே ஆலயமாகக் கொண்டு வாழ்பவர். ஸ்ரீமதி விஜயலட்சுமி அவர்கள் மகாலெட்சுமி போன்ற குணநலம் கொண்டவர். பெரும்பாலும் தம்பதியராகவே இலண்டனிலுள்ள சைவாலங்களுக் கெல்லாம் சென்று சமயப்பணிகள் புரிவார்கள். கொம்பனித்தெரு முருகப்பெருமான். முருகப்பெருமானின் புகழை அகில உலகும் அறியும் வண்ணம் ஒலிபரப்பியவர். அதற்கு உறுதுணை புரிந்தவர். ஸ்ரீ இராமநாதன் ஐயா அவர்கள். அப்போது அடியேன் நேர்முக வர்ணனை செய்தேன் மழை பெய்த வண்ணம் தங்க ரதம் திருவீதி வலம் வந்தபொழுது எனது வர்ணனையை செவிமடுத்த வண்ணம் எனதருகிலேயே நடந்து வந்த வண்ணம் வானொலி நேர்முகவர்ணனையை அழகுறச் செய்வதற்கு பக்கத்தில் இருந்து பேருதவி புரிந்த பெரியவர். அவரது அன்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பும், ஆழமான பக்தியும், உயரிய நோக்கும், சேவையுணர்ச்சியும் கண்டு கொண்டநான் அவரிடம் மிகவுயரிய மனிதாபிமானம், தெய்வாபிமானம் சமயாபிமானம் குடியிருந்ததை உணர்ந்து கொண்டேன். கடந்த 2005 ஆம் ஆண்டு அடியேனையும் இலண்டனுக்கு அழைத்துச் சமயப் பேருரைகளையாற்றுவதற்கு உதவி செய்த பெரியார் இராமநாதனும் ஸ்ரீமதி இராமநாதன் விஜயலட்சுமி அவர்களுமே என்பது இன்று உலகப்பிரசித்தம். என் மீது அன்பு, மதிப்பு கொண்டவர் திரு. இராமநாதன் அவர்கள் எப்பொழுதும் தமது பிறந்த மண்ணான பன்னாலையையும், படித்த கல்லூரியான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியையும் மறவாதவர். கொழும்பு கொம்பனித்தெரு முருகப்பெருமானைப் பற்றியே எப்பொழுதும் நினைபவர். இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திலே எத்தனையோ மகான்களை ஞானிகளை, பாடகர்களை, அநுபூதிச் செல்வர்களை பிரமாண உத்தமர்களை, சிவாசாரியார்களை யெல்லாம் வரவழைத்து உபசரித்துப் பாராட்டும் செய்து வாழ்பவர்.

சைவ முன்னேற்றச் சங்கம் என்றால் அங்கே சைவ நாயன்மார்களது திருவுருவச் சிலைகளும் நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமானது திருவுருவமும். முதியவர்கள் பலர் ஒன்று கூடும் நடைமுறை, ஆன்மிக ஆனந்தம் பெறும் நிலைமை இன்றும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திலுண்டு. இவற்றை முறைப்படுத்தி அமுல் படுத்துவதற்கான செயலாண்மையைக் கொண்டவர் பெரியார் இராமநாதன் தம்பதியர். இவர்கள் எனக்குச் செய்த பரோபகாரம் என்றும் மறத்தற்கரியது. சைவ முன்னேற்றச் சங்கம் இலண்டன் அலுவலகம் ஓயாது இயங்கிக்கொண்டிருப்பதால் உலகத் தமிழர் இன்னல்கள் துயர்துடைக்கும் முயற்சிகள் அதற்கு நிகழும் குறிப்பாக இலங்கையில் நிகழும் அழிவுகள் குறித்த செய்திகள் நிலைப்பாடுகள் பற்றி சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு அதிகம் ஆர்வமும் அக்கறையும் உண்டு. அவதியுறும் மக்கள் துயர் துடைப்பதிலும் அது முன்னின்று உழைத்து வருவதற்கு பெரியார் இராமநாதன் அவர்களது துடிப்புமிக்க திட்டங்களும் ஆலோசனைகளும் என்றென்றும் உதவுகின்றன. எத்தகு இடர்வரினும் தாம் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் சிறப்புறும் வண்ணம் செயலாற்றுந் திறன் கொண்டவர் மணிவிழா நாயகன் இராமநாதன் ஐயா அவர்கள் மணிவிழா நாயகர் இராமநாதன் அவர்கள் தன்னளவிலே ஒரு நிறுவனம். பண்பாட்டுக்கூட்டம் அனைவரையும் அணைத்து நடப்பதிலே தன்னிகரற்றன குணாம்சம் படைத்தவர். அவர்கள் மேலும்பல்வேறு சாதனைகள் புரிந்து தமிழினத்தை மகிழ்விக்கவும், சைவ உலகின் தனிப்புகழைத் தரணியிலே வாழ்விக்கவும் அனைத்து வளங்களும் பெற்றுப் ப∴றுளியாற்றின் பெருமணல் போல பன்னூறாண்டு காலம் வாழ வேண்டி என் குலதெய்வம் நயினை நாகபூஷணி அம்மனின் திருவடிகளைத் தொழுது சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

**சுபம்**

அன்பன்

**வாகீசகலாநிதி. கனகசாபதி.நாகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கி ஒலிக்கும் இராம நாதம்

ச. சிறீரங்கன்
(அறங்காவலர், இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயம்)

அறுபதாவது அகவையில் அடியெடுத்து வைத்துள்ளார், அண்ணர் இராமநாதன் அவர்கள்.

அன்பால், பண்பால், நல்வாழ்வால், சீரியசெயல்களால், தொண்டால் உயர்ந்துள்ள இவர், தன் உடற்கட்டமைப்பிலும் உயர்ந்து நிற்கின்றார். தன்னை முன்னிலைப்படுத்தாது, தனது தொண்டுகளை முன்வைத்து வாழும் இந்த அன்புள்ளம், இன்று இமாலயத்தின் உச்சியை எட்டிப்பிடித்துள்ளது. எண்ணம், செயல், வாழ்க்கைமுறை ஆகிய இம் மூன்றும் கள்ளங்கபடமின்றி இவரிடம் பின்னிப்பிணைந்திருக்கின்றன. இராமலிங்க வள்ளலார் சுவாமிகளின் வார்த்தைப்படி, இவர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத உத்தமர். மாணிக்கவாசகர் கூற்றுப்படி உன்னடியார் தாள்பணிவோம் என்று செயற்படுவதால், அடியார்க்கடியாராய் விளங்குகின்றார். வள்ளுவர் வாக்குப்படி உள்ளத்தால் பொய்யா தொழுகி உலகத்தால் உள்ளத்தில் எல்லாம் இராமண்ணர் நீக்கமற நிறைந்துள்ளார்.

கீதா உபதேசத்தின் படி பார்க்கையில் இவர் பலனை எதிர்பாராது, கடமையைச் செய்யும் உத்தம புருஷராகவே காட்சிதருகின்றார். மகாகவி பாரதியின் புரட்சிக்கவிதைப்படி ஆடுதல், பாடுதல், கவி ஆகிய கலைகளை நேசிக்கும் இவர், பிறர் ஈன நிலைகண்டு மனவெழுச்சிப்படும் ஏழைபங்காளனாக துல்லியமாகவே தெரிகின்றார். நண்பர்களிடமும், அன்பர்களிடமும் அன்பைப் பாய்ச்சும் இவர், கூடவே அன்புடன் கூடிய கண்டிப்பையும் வெளிப்படையாகக் காட்டத் தயங்குவதே இல்லை.

குணம்நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளளல் என்ற வள்ளுவத்தை, இப் பொன்மனச் செம்மலிடம் கண்டு இன்புறுகின்றோம். இதனாலேதான் பகைவர்கள் என்பது இவரது அகராதியில் இல்லை.
உலகத்தைத் திருத்துவதற்கு நூறு இளைஞர்களைத் தனக்குத் தருமாறு சுவாமி விவேகானந்தர் கேட்டார். அதே போல் சைவத்தையும், தமிழையும் பரப்ப இவர் பல சிறார்களை மட்டுமன்றி, இளைஞர், முதியோர், மகளிர் அனைவரையும் நாடிச்சென்று சைவ முன்னேற்றச் சங்கத்தில் பிணைத்தார். அன்பென்ற அத்திவாரத்தில், புரிந்துணர்வு என்ற கலவை பூசி, ஆழப்பதிக்கப்பட்ட அச்சங்கம் இன்று சைவர்கள் வாழ்வியலில் மட்டுமன்றி உலகவரலாற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப்பதிவேடாகியுள்ளது. உலகசைவப் பேரவையூடாகவும், இவரது செயற்பாடுகள் விஸ்வரூபமெடுத்ததால், உலக நாடுகளில் உள்ள ஆலயங்களும், பொதுமன்றங்களும் இவருக்கு அபரிமிதமான பட்டங்களை அளித்தும், ஆசீர்வதித்தும் உள்ளன.

எத்தனையோ விருதுகள் பெற்ற இப்பெருமகன் அறப்பணி, திருப்பணி, பொதுப்பணி ஆகிய மும்மணிகளை அணிந்திருக்கின்றார். இதனால் ஓசை, ஒலியாகியுள்ள இறைவனின் அடியார்கள் என்றும் இவரை இராம் இராம் என்றழைத்து, நாதம் எழுப்புகின்றனர். இவ்வோசை அகவை அறுபதையும் கடந்து, நூறையும் தாண்டி ஒலிக்கவே போகின்றது. என்றும் ஒலிக்கட்டும் இந்த இராம நாமம்!

இவருக்கு லட்சுமிகரமான மனையாள் இரண்டு செல்வப்புத்திரர்கள். இவரது ஏற்றத்துக்கு லட்சுமீகரம் வாழ்க்கைத்துணை நலமாக அமைந்திருப்பதும் முக்கிய காரணியாகின்றது.

கண்ணனைப் பாடிய பாரதி நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவ்வகையில் இராமண்ணா
பழகுவதற்கேற்ற ஓர் நண்பன்
ஆலோசனை தருவதில் மந்திரி
போதிப்பதில் நல்லாசிரியன்
பண்பிலே தெய்விகமானவர்

இவையெல்லாவற்றுக்கும மேலாக எந்த விழாக்கள், எந்தக்கொண்டாட்டங்கள் எங்கு நிகழ்ந்தாலும் ஓடியாடிப் பணியாற்றும் ஓர் சேவகன் மக்கள் தொண்டன்.

அபிராமிப் பட்டர் அபிராமியந்தாதியில் பாடியுள்ளது போல் நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும் என்று அடியேனின் குடும்ப நட்பு உறவில் இவரைப் பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள்.

**தொண்டர் தம் பெருமை சொல்லவும்பெரிதே**
**வாழ்க பல்லாண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சைவப் பேரவை
இலங்கைக் கிளை
WORLD SAIVA COUNCIL
SRI LANKA BRANCH
9, JAYA ROAD, COLOMBO 4.

தொ.இல. : 2582139, 2593997

தன் வாழ்வின் பெரும்பகுதியைச் சமயப்பணி, சமூகப்பணிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவன் தான் வாழ்வின் உண்மையான பயனை அனுபவிப்பவனாக இனம்காணமுடிகிறது. அந்த வகையில் திரு. இரத்தினம் இராமநாதன் வாழ்வின் பயனை அனுபவிப்பவராக காணமுடிகின்றது.

உலக சைவப்பேரவையினால் நடாத்தப்பட்ட ஏழு உலக சைவமகாநாடுகளில் திரு. இரத்தினம் இராமநாதன் கலந்து கொண்டதையிட்டு மிகவும் மகிழ்வுற்றேன். உலக சைவப் பேரவையில் பொறுப்பான பதவி வகித்ததுடன், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திலும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டுவருகின்றார். லண்டனில் நடைபெறும் சமய விழாக்கள் மற்றும் மகாநாடுகள் அனைத்திலும் அவரின் பங்களிப்பை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் சுனாமியால் ஈழத்தில் பாதிப்பு ஏற்பட்டபோது தன்னால் இயன்ற பல உதவிகளை செய்தது மட்டுமன்றி தன் நண்பர்களையும் இப்பணிக்கு ஊக்குவித்தார். பணிகள் செய்பவரை நிட்சயம் பாராட்ட வேண்டும் இந்தவகையில் மணிவிழாக்காணும் திரு இரத்தினம் இராமநாதன் அவர்களின் மணிவிழா மகாத்தான விழாவாக மலர வாழ்த்துகின்றோம்.

மு. கதிர்காமநாதன்
செயலாளர்
உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indian Traditional Arts
Temple Construction & Painting Works
#18 East Car Street, Thiruvanaikoil, Tiruchirappalli, Tamilnadu, INDIA.
Email: mbalarooban@sify.com Tel. +91-431-223 2007 Mobile +91-94435 78163

திரு. சதாசிவம் ஆனந்ததியாகர்,
கௌரவ பொதுச் செயலாளர்,
சைவ முன்னேற்ற சங்கம், U.K.
இலண்டன் - கி 12.

செப். 16, 2006

பேரன்புமிக்க ஆனந்த தியாகர் ஐயா அவர்களுக்கு,

பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இரத்தினம் இராமநாதன் ஐயா அவர்களுக்கு மணி விழா எடுப்பதையிட்டு பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த முப்பது ஆண்டுகளாக இலண்டன் மாநகரில் சைவத்தை நிலைநாட்டி நம் கலாச்சாரத்தையும் சமய பண்பாட்டையும் மேலோங்க செய்த வகையில் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் போற்றுதலுக்குரியவர். "சைவ சமய கருத்தினூடாக சமூக சேவை" என்கின்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் செய்து வரும் சமயப் பணிகள் ஏராளம்.

இலண்டன் மாநகரில் சைவ முன்னேற்ற சங்கம் அமைக்க பெரும்பாடுபட்ட அன்பர்களில் திரு. இராமநாதன், திரு. ஆனந்ததியாகர், திரு. பத்மநாதன், திரு. லோகநாதன் ஆகிய நான்கு பேரும் குறிப்பிடத்தக்கவர்கள் என்பதை செவி வழி அறிந்தேன். அந்த "நால்வரே" மறுபிறப்பு எடுத்து இந்நாட்டில் பணி செய்வதாகவே எண்ணுகிறேன்.

திரு. இராமநாதன் ஐயா அவர்களின் இச்சமூகப்பணி மென்மேலும் தொடரவும், அவர்கள் எண்பதாம் ஆண்டு சதாபிஷேக விழா கொண்டாட வேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஐயா அவர்களை வாழ்த்த வயதில்லை வணங்கி மகிழ்கிறேன்.

"சைவமும் தமிழும் தழைத்தோங்குக!"

நன்றி!

அடியார்க்கு அடியேன்,

கி. மணிகண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORLD SAIVA COUNCIL, CANADA BRANCH
# உலக சைவப் பேரவை, கனடாக் கிளை

No. 3 Deblyn Drive, Toronto, Ontatio M1S 1J4

Founder:
Thavath Thiru Siva
Nandhi Adikalaar

Patron:
Sivath Thiru
Yogananda Adikal

President:
Dr. Shan A.
Shanmugavadivel
416 266 5161 (office)
416 293 0966 (home)

Vice Presidents:
N. Sivalingam
A.K. Manickam
Dr. P.Balasundaram
T. Visuvalingam

Secretary:
T. Sivayogapathy
416 335 5458

Asst. Secretary:
K. Jegatheeswaran

Treasurer:
P. Vallipuranathan
416 292 3263

Asst. Treasurer:
M.S. Perinbanayagam

Committee Members:
N.S. Arumugam
Mrs. P.Thirugnam
S. Praisoody
S.M. Sivanesan
Dr.V. Shanmugam
K. Thambirajah
Dr.R. Lambotharan
Mrs. Meera Rasiah
T. Uthayaharan

Auditor:
Vijey Senathirajah

Aum Namasivaya

August 3, 2006

Vanakkam

Its gives me a great pleasure to be associated with the 60th birthday celebration of Mr. V.R. Ramanathan

I met Mr. Ramanathan for the first time, when he came to Toronto to attend the 9th World Saiva Conference in July 1999. Since then I have been meeting him at all our conferences and few other functions in Canada and U.K.

The World Saiva Council has its head quarters in London, UK with branches in several countries including UK. Mr. Ramanathan has been a very active executive member of the parent body and the U.K. branch. He is one of the founding members who were the principle inspiration behind the dynamics of the WSC. He stood firm with Thavath Thiru Sivanandi Adikalar in spearheading meaningful reforms in Tamil Saivism.

May Lord Siva continue to shower his blessings on Mr. & Mrs. Ramanathan to continue their services.

Sincerely,

Dr. Shan A. Shanmugavadivel
President, WSC, Canada Branch
Secretary General, WSC.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடரொளி

-CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

| கௌரவ ஆசிரியர்: | ஆசிரியர்கள்: | ஆசிரியர் குழு ஆலோசகர்கள்: |
|---|---|---|
| திரு. சி.சரவணபவன் (சிற்பி) | திரு. பொன். பாலசுந்தரம்<br>திரு. ஐ.தி. சம்பந்தன் | திரு. ம. மனோகரன்<br>திருமதி. மாதவி சிவலீலன் |

## மணிவிழா காணும் சமய, சமூகத் தொண்டன் திரு.இராமநாதன் வாழ்வு மலர சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் வாழ்த்துக்கள்

1969ல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமக நாவலர் சபை நடத்திய நாவலர் தேசிய விழா, நாவலர் சிலை தேசிய பவனி ஆகிய நிகழ்வுகளில் கொம்பனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கப் பிரதிநதியாக திரு. இராமநாதன் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தா. அன்று ஒரு இளைஞனாக் அவரைக் கண்டேன். இன்று மணிவிழா காணும் நாயகனாக் காண்கின்றோம் .நான் அவரைச் சந்தித்த முப்பத்தைந்து ஆண.டு காலமாக ஆற்றிவரும் பணிகளால் சமய சமூகத் தொண்டனாக மக்களால் பாராட்டப்படுகின்றார். மக்கள்கொடுக்கும் அங்கிகாரத்திற்கு அவர் ஆற்றிவரும் பிவரும் பணிகளே ஆதாரம்.

பீரிதானிய நாட்டில் மூன்று சகாப்தமாக வாழந்துவரும் திரு. இராமநாதன் அவர்கள் வேற்றுநாடடு கலாச்சாரத்தில் மூழ்கிவிடாது, எமது சமய, கலாச்சார தமிழ்ப் பண்பாடுகளைப்பேணி வாழ்ந்து வருவதோடு. எமது சமூகம் சமய நெறி தவறாது வாழ பிரித்தானியாவில் சைவமுன்னேற்றச்சங்கத்தை நிறுவி கடந்த 28 ஆண்டுகளாக வளர்த்துவரும பெருமைக்குரியவர்.
பீரித்தானிய நாட்டில் உலக சமாதான மன்றத்தை உருவாக்க உதவியவர்.ஈழத்திமிழர்களின் மனிதவளத்தை திரட்டி உலத்தமிழர் யார்? எவர்? என்ற மனித வளக் களஞ்சியத்தை வெளிக்கொணர எடுத்த முயச்சிக்கு முன்னின்று உதவியவர்.
பிரித்தானிய நாட்டில் நாவலர் பெருமானுக்கு சிலை நாட்ட ஆர்வத்துடன் உழைத்துவருபர் அவரது மணிவழா காலத்தில் நாவலர் சிலை நாட்டுவிழா நடைபெறவிருப்ப துநற்செய்தியாகும். உலகரிதியாக நடைபெறும் சைவமாநாடுகளில் பங்குகொண்டு இலங்கைத்மிழர்களுக்கு பெருமை சேர்ப்பவர்..
மற்றும் பல பணிகளில் ஈடுபட்டுவருபவர்.
31-08-2006 அன்று அகவை அறுபதை எய்தும் திரு. இராமநாதன் அவர்கள் நல்லாரோக்கியத்துடன் பல்லாண்டுகள் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் நற்பணியாற்ற சுடரொளிவெளியீட்டுக்கழகம் வாழ்த்துகிறது.

அன்புடன்

ஐ.தி.சம்பந்தன்
செயலாளர்
ஆசிரியர் சுடரொளி

Chuderoli Publication Society, 15, Ruthland Road, London E7 8PQ United Kingdom
(Tel: 0044 208 552 6992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் குருமணி
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்

உ
சிவமயம்



Muthamil Kurumani
**Sivasri N. Sarvesvarakurukkal**
Sri Kathiramalai Sivan Thevasthanam
Chunnakam



## பணிசெய்யும் பண்புடையர் அறுபதானாலும் இளைமையுறுவர்



இலங்கையில் சைவத்தமிழ்க் கலாச்சாரத்தின் சிறந்த குடும்பத்தில் தோன்றி மரபுத்தொடர்பால் ஈழத்தின் பல பாகங்களிலும் சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி என பலதரபடபட்ட புனித சேவையில் தம்மை ஆட்படுத்தி வருபவர் பெருமதிப்புடைய திருவாளர் இரத்தினம் இராமநாதன் அவர்கள், இவரது சேவை கீரிமலைசிசவன் கோவில், மாவிட்டபுரம் கந்த சுவாமிகோவில், பன்னாலைவரத்தலம் வினாயகர் கோவில், கொழும்பு கொம்பனித்தெரு முருகன் கோவில் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி பல முன்னேற்றங்களை செயற்படுத்திய பெருமைக்குரியவர். அவரது பிரித்தனிய வாழ்விலும் சைவமுன்னேற்ற சங்கத்தை ஸ்தாபனம் செய்து சைவத்திற்கும். தமிழ் உணர்விற்கும் புலம் பெயர்ந்த மக்களுக்கும் நற்தொடர்புகளை ஏற்படுத்திய தீர்க்கதரிசனமான சிந்தனையாளர். எளிமையும் அனைவரையும் பெருமைப்படுத்தும் அன்புள்ளமும், கனிவுப்புன்முறுவலும் மூலதனமாக உள்ள இவர், அனைவரது மதிப்புக்குரியவராவர். இவரது அறுபதாவது வயது பூர்த்தி மணிவிழா அவர் பணிகளுக்கும் தூய சிந்தனைகளுக்கும் அதனாற்பயனுறும் அனைவருக்கும் மகிழ்ச்சியும், பெருமையும் தருவதாகும். திருவாளர் இராமநாதன் அவர்களும் சார்ந்த குடும்பத்தினரும் மென்மேலும் சேவையாற்றும் நீண்ட வாழ்வும், அபிஜித் நட்சதிரம் போல் பிரகாசிக்கும் புகழ்ச்சிறப்பு பெறவும் கதிரமலை நாதர் ஸ்ரீ சொர்னாம்பிகா தேவி சமேத பொன்னம்பலவான சுவாமி திருவருளுடன் ஈழம் வாழ் மக்கள் அனைவரது சார்பிலும் மனங்குளிர வாழ்த்தி விழாக் குழுவினரின் நன்றியுணர்வையும் போற்றி அனைவரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

சுபம்

முத்தமிழ் குருமணி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

**துன்னையூர் சாரதாபீடம் ஜோதிட நிலையம்**
**THUNNIUOOR SARATHAPEEDAM HOROSCOPE CENTER**
No. 24, 5/4, Mathngawatte Lane, Colombo - 06. T. P. 2554328

சொல் விற்பனமும் அவதானமும் – கவிசொல்லவல்ல
நல் வித்தையும் தந்து அருள்புரிவாய்



" செஞ்சொற் கவிதா சிரோமணி "
"ஜோதிட பூஷணம்"
**சிவஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்**
(இந்துமதகுரு, ஜோதிடர், கவிஞர்)

"Sensot Kavitha Siromani"
Jothida Pooshanam"
**Sivasri**
***Ram. Thevalogeswara Kurukkal***
*(Hindu Priest, Astrologer, Kavignar)*

## * அகவை அறுபதில் அன்பர் ராமநாதன் *

சைவசமய வளர்ச்சியில் முழுமையான பங்கு, செந்தமிழ் மொழியின் செழுமைக்கு பங்கு, அல்லல்படும் ஈழமக்களின் துயரினில் பங்கு, ஆன்றோர்களை செம்மையாய் கௌரவிப்பதில் பங்கு. இன்முகத்தோடு அனைவரையும் இணைப்பதில் பங்கு, இப்படி இனிமையான நல்ல நிகழ்வுகள் எங்கு நடந்தாலும். அங்கு பிரகாசித்துக் கொண்டு இருப்பவர். எங்கள் அன்பர் வ. இ. இராமநாதன் அவர்கள். வாழ்க்கை என்பது இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்ட "அமிர்த பொக்கிஷம்" அதை பூரணத்துவமாக பயன் படுத்த வேண்டுமாயின். தனியே. நம் வீடு. நம் குடும்பம், என்று மட்டும் இருந்து விடக் கூடாது. சமூக அக்கறையும் இருக்க வேண்டும். இவையெல்லாம் அதற்கும். பூர்வ புண்ணிய பலன் வேண்டும். சிறப்பாக அமைந்துவிட்ட திருமிகு ராமநாதன் அவர்கட்கு கொடுப்பனவுகள் எல்லாம். ஈழத்திலும், தலைநகர் கொழும்பிலும். சீமைப்பதி இங்கிலாந்திலும். செய்த, செய்கின்ற, பணிகள். சமயமும், தமிழும், வாழும்வரை நிலைத்து நிற்கும்.

1992 ம் ஆண்டு. தலைநகர் கொழும்பு கொம்பனித் தெரு. ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய புனருத்தாரண பணிகளில் பங்கு பெற அங்கு வருகை தந்த வேளையில். கொழும்பு சைவ முன்னேற்ற சங்க அறங்காவலர் அமரர். க. பாலசுப்பிரமணியம். அவர்கள். எனக்கும் ராமநாதன் அவர்கட்கும். அன்பு உறவை ஏற்படுத்தி வைத்தார். 1993 ம் ஆண்டு இவருடன் சைவ முன்னேற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
**துன்னையூர் சாரதாபீடம் ஜோதிட நிலையம்**
**THUNNIUOOR SARATHAPEEDAM HOROSCOPE CENTER**
No. 24, 5/4, Mathngawatte Lane, Colombo - 06. T. P. 2554328



சொல் விற்பனமும் அவதானமும் – கவிசொல்லவல்ல
நல் வித்தையும் தந்து அருள்புரிவாய்

" செஞ்சொற் கவிதா சிரோமணி "
"ஜோதிட பூஷணம்"
**சிவஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்**
(இந்துமதகுரு, ஜோதிடர், கவிஞர்)



"Sensot Kavitha Siromani"
Jothida Pooshanam"
**Sivasri**
***Ram. Thevalogeswara Kurukkal***
*(Hindu Priest, Astrologer, Kavignar)*

சங்கத்தின். "கலசம்" இதழ் எங்கள் உறவை இன்றும் மிக
நெருக்கமாக்கியது. அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 14 ஆண்டுகள்.
அவரின் இயல்புகளை நன்கு அறிவேன். சுருக்கமாக சொல்லின்
"பொதுநலத்தில் சுயநலம் பாராத புண்ணிய சீலர்" அவருடைய
இந்த வாழ்க்கைக்கு கிடைத்த வெகுமதி அவரின் திருமதி விஜயலட்சுமி
என்றால் மிகையாகாது. வாழ்வியல் என்கின்ற நீரோட்டத்திலே
எத்தனையோ, சுகம், சோகம், தடை, எதிரி, நண்பன், என ஐவகை
நிலைகளை நேர் கொண்டு நிமிர்ந்து நின்று இன்று அகவை அறுபதில்
ஆளுமை கொள்கின்றார் என்கின்ற செய்தி எமக்கு அக மகிழ்வை
தருகின்றது. 31. 08. 1946. ல் அன்று "சித்திரை" நட்சத்திரத்திலே.
நேர்மையும் நீதியான நிலையும் கொண்ட "துலாம்" ராசியிலே பிறந்தார்.
"துலாம் ராசி கொண்டோர் உலா வருவர் உலகை" என்கின்ற
ஜோதிட மொழிக்கு ஏற்ப உலகெல்லாம் சென்று எமது சமயம்,
மொழி, கலை தொண்டாற்றி வருகின்றார். இவரின் தொண்டும்,
ஆயுளும், நீடித்து நிலைபெற்று நெடிது வாழ வேண்டுமென
"மார்கண்டேயருக்கு என்றும் பதினாறு" என வரமளித்த திருக்கடவூர்.
பதிமேவும் திங்கள் வதன அபிராமி அம்பிகை உடன் உறை அமிர்த
கடேஸ்வர பெருமானை பிரார்த்தித்து. திருமிகு வ. இ. இராமநாதன். திருமதி
விஜயலட்சுமி. இருவரும். சதாபிஷேகம், கனகாபிஷேகம், எல்லாம் பெற்று.
நிறைவான வாழ்வும். தொண்டும், நெடு சீராக பெறவேண்டி. அனுதினமும்.
நான் பூஜிக்கும். கருமாரி அம்மனை பிரார்த்தித்து நல் ஆசி வழங்குகின்றோம்.

வாழ்க வளமுடன்.

ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்
15/08/06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**சமய இலக்கியக் கலாநிதி, தருமபுரம் ஆதீனப் புலவர்,**
**செஞ்சொற்கொண்டல், நாயன்மார் சீர் பரவுவார்,**
**பேராசிரியர், மு.சிவச்சந்திரன் எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி,**
**தமிழ்த்துறைத்தலைவர், தருமபுரம் ஆதீனக்கலைக்கல்லூரி,**
**மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

இறைவன் அருளால் பூத்தது இந்த உலகம். இந்த உலகில் வாழும் உயிர்களில் உயர்திணை என்று மதிக்கப் பெறுவது மனித குலம். ஏன் எனில், இந்த இனத்திற்குத்தான் "மனம்" என்ற ஒரு கருவி இருக்கின்றது என்று இலக்கண நூல் கூறுகிறது. விதி விலக்காகச் சில விலங்கினங்களும் இந்த மனம் என்ற ஒன்றைப் பெற்றுள்ளது என்றும் அது இயம்புகிறது. இந்த மனத்தின் வழி அன்பையும் அருளையும் கொண்டு மனித நேயம், உயிர் இரக்கம் அமைய வாழுதல் வேண்டும். இதற்கு அடிப்படை இறை பக்தி! இறை பக்தி இருந்தால் அன்பும் கருணையும் கொடையும் தாமே அமையும். இங்ஙனம் வாழ்பவர்களைத் தலையாய மனிதர் என்கின்றார் அப்பரடிகள்.

*"அனுசயப்பட்டு அதுஇது என்னாதே*
*கனிமனத்தொடு கண்களும் நீர்மல்கிப்*
*புனிதனைப் பூவனூரானைப் போற்றுவார்*
*மனிதரில் தலையான மனிதரே" – என்பது அவர் அருளியது.*

இவ்வண்ணம் உயிரிரக்கம் கொண்டு அதன் வழிக் கண்ணீர் மல்கிப் பணி செய்து வாழ்பவர் தலையாய மனிதர் என்கின்றார் அப்பர் பெருமான். இன்றும் சிலர் இவ்வண்ணம் வாழ்கின்றார்கள். இவர்கள் சைவ சமயத்திற்குத் தொண்டாற்றியும் வருகின்றார்கள். அவர்களுள் ஒருவராக விளங்குபவர் நம் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய பெருந்தகையாளர் திரு.வ.இ.இராமநாதன் அவர்கள் ஆவார். இவர்கள் ஈழத்திலும் பிரித்தானியாவிலும் சமயத் தொண்டும் மொழித்தொண்டும் ஆற்றி வருபவர். வாழ்வாங்கு வாழவும் அவ்வண்ணம் வாழ நெறிப்படுத்தவும் எண்ணி அவற்றுக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். இவர்களின் மணிவிழா நிகழ இருப்பது மகிழ்ச்சிக்குரியது அதனை ஒட்டி மலர் ஒன்று வெளிவர இருப்பது சிறப்பிற்குரியது.

மணிவிழா நாயகர் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும் இப்புண்ணியப்பணியில் தொண்டாற்றும் அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் நலம்பல பெற்று உயரவும் எல்லாம் அருள்மிகு அம்மையப்பரின் திருவடிகளை வணங்குகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**மு. சிவச்சந்திரன்.**

26-7-2006.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் (பரிபாலனசபை அளவெட்டி)

திரு. க.சின்னத்தம்பி -தலைவர்,-காரியதரிசி - திரு. மா. கதிரமலைப்பிள்ளை, தனாதிகாரி- வி.மு.சந்திரிகா
செயல்குழு செயலாளர் திரு. சி. செந்தில்நாதன்

**ALAVEDDY NORTH THAVALAKIRI MUTHUMARI AMMAN TEMPLE (LONDON)**
**76 GRAND DRIVE, LONDON S.W.20 9DY**
**Chairman - Dr.T.Rasamuthiah, Secretary - Mr.P.Kaneswaran, Treasurer - Mr.A.Vairavamoorthy**

**Bank- Halifax : Account:ALAVEDDY THAVALAKIRI MUTHUMARIAMAN TEMPLE TRUST**
**ACCOUNT NUMBER;-00557837 , SORT CODE;-11 – 08 – 52**

**PATRONS**
Dr.S.Balachandran
Dr.K.Appulingam
Mr.K.Natkunam

**CHAIRMAN**
Dr.T.Rasamuthiah

**VICE CHIRMAN**
Mr.V.Vairamuttu

**SECRETARY**
P.Kaneswaran

**TREASURER**
Mr.A.Vairavamoothy

**CHAIRMAN ACTION COMMITTEE**
Mr.V.Vairamuttu

**PROJECT CO-ORDINATOR**
MR.A.Pathmanathan

**COMMITTEE**
Mr.P.Kumarason
Mr.K.Natkunam
Mr.M.Sathiyamoorthy
Mr.Ratnam Ravi
Mr.K.Paraparan
Mr.S.Srisskanthan
Mrs.Ravindran
Mrs.N.Kaneswaran
Mrs.G.Vairamoorthy
Mr.K.Vignarajah

**FRANCE CO-ORDINATOR**
Mr.V.Chandrasekarar

ஓம்
சிவமயம்
பிள்ளையார் துணை

சைவமும் தமிழும் உலகெங்கும் செழித்து வாழ தன் முழு நேரத்தையும் செலவழித்து அல்லும் பகலும் அருந்தொண்டு ஆற்றிவரும் தவசெல்வர், அண்ணல் இரத்தினம் இராமநாதன் அவர்கள் தனது 60வது அகவையில் 31-08-07 காலடி எடுத்து வைக்கிறார் என்பதை எண்ணி நாம் பெருமையடைகிறோம். பன்னாலையை பிறப்பிடமாக கொண்டவர். சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஒரு ஆண்டுதான் கற்றாலும், அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இன்றும் அரும்பணிபுரிந்து வருகிறார். அரசியல் குழப்பங்களால், தரம் குன்றிய கிராமப் பாடசாலைகள் பழைய நிலைக்கு திரும்ப, தன்னால் இயன்ற நன்கொடைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருவதை நாம் எல்லோரும் அறிந்ததே. அத்தோடு பன்னாலையும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஆலயங்களில் ஆறு கால பூசை தடையில்லாமல் நடக்க ஆண்டுதோறும் நன்கொடைகள் வழங்கியும் வருகிறார். பழகுவதற்கு எளியவர், எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவரைப்பற்றி நாள் முழுதும் கூறிக்கொண்டேயிருக்கலாம்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு" என்ற வள்ளுவரின் வாக்கு இணங்க வாழ்பவர் நண்பன் அண்ணல் இராமநாதன் அவர்கள்.

ஆம் அவர்,

" உள்ளத்தினால் உயர்ந்த வள்ளல்
உரிமையோடு விருந்து காக்கும்
பண்பினால் வளர்ந்த செம்மல்
பழகிய நண்பர்க்கெல்லாம்
இனத்தினான் போலத் தோன்றும்
இன்முக இராமநாதன் தன்னை
அனு தினமும் வளர வைப்பாள்
அன்னை அம்பிகை.

வரலாற்றில் உயர்ந்து நின்று
வாய்மைபோல் நிலைத்து வாழ்ந்து
சீலத்தால், சிவநெறியால், தெய்வ தொண்டால்
சீரிய பண்பால் வாழ்க்கைச் செய்யாமையால் சிறந்து
நம்பிக்கைக்கும், நட்பிக்கும் ஒருவன் என்று
நற்பெயர் மிகுந்து நலம் பல பெற்று
வரலாற்றில் வாழ வாழ்த்துகின்றேன் - உன்னை
வாழ்விப்பாள் அன்னையவள்.

அயல் கிராமத்தில் வாழ்ந்து. நீ கற்ற கல்லூரியில் சில மாதங்கள் பயின்ற போதும், தலைநகராம் கொழும்பில் எட்டு வருடங்கள் வாழ்ந்தபோதும் உன்னை நான் அறியவில்லை. ஆம் நான் கடல் கடந்து வந்து உலகம் கண்டேன். ஆனால் சேவை மனப்பான்மை கொண்ட அண்ணல் இராமநாதன் அவர்களோ,

" திரைகடல் கடந் உலகம் கண்டான்
திசையெல்லாம் கணக்கிலா நண்பர் சேர்ந்தான்
அடக்கத்தில் அன்பன் இராமநாதன்
அன்பால் அகத்தை வளர்த்து
உழைப்பால் உயர்ந்து, செயலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கெல்லாம் உயர்ச்சியை தந்து நிற்கும் - நண்பன்
வாழிய பன்னூ றாண்டு என
வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்."

திரு.இராமநாதன் அவர்களின் முயற்சிகளுக்கும், சமூகப் பணிகளுக்கும் முழு ஆக்கமும் ஊக்கமும் தருபவர் அவரின் வாழ்க்கைத் துணைவியார். மலர்ந்த முகத்துடனும், கனிவான சொல்லுடனும் இராமநாதனின் அன்பர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கொடுப்பதோடு, அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை நல்கி வருபவர். இதை வள்ளுவரும், " தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்றார். அண்ணல் இராமநாதனின் புகழ் அத்தனையும் அவரைச் சாருமன்றோ. அவர்க்கும் எம் கனிவான வாழ்துக்களும் வணக்கமும்.

அண்ணல் இராமநாதன் அவர்கள் இன்று

"அறுபது ஆண்டுகளை
அருச் சேவையில் கழித்தாலும் - இன்று
வருடம் இருபது உடைய
வாலிபனாய் பணிபுரியும்
தோற்றத்தாய்! தூய உள்ளத்தாய்
தொலைந்து எமக்கு கலங்கரை விளக்கே!
பல பத்து ஆண்டு இன்னும்
பண்புடன் வாழியவே."

என்று வாழ்துகிறேன். மேலும் எல்லாம் வல்ல தவளக்கிரி முத்துமாரி அம்பாள் துணைபுரிய

**"அளவெட்டி வடக்கி லிந்தத் தவளகிரிப் பதியமர்ந்த**
**உளநிறை எங்கள் தாயே உத்தமி முத்துமாரி**
**அளவிலா அறிவு தர்மம் அளப்பிலா வளமுந் தந்து**
**குழவிகள் எம்மைக் காக்கும் கோதிலா வழுதே வாழி."**

அன்னையை பிராத்திக்கின்றோம்.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே."**

நன்றி
வணக்கம்

பொ.கணேஸ்வரன்
கௌரவ பொதுச் செயலாளர்
அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் அறக்கட்டளை இலண்டன்.
பழைய மாணவர் சங்கம் அளவெட்டி வடக்கு சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை, சதானந்த வித்தியாசாலை, அ.வ.அ.மி.தமிழ் கலவன் படசாலை கணேசபுரம், தொடர்பாளர் அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாசாலை, அருணோதயக் கல்லூரி.

**கௌரவ செயலாளர்,**
**அளவெட்டி வடக்கு முத்துமாரி அம்மன்**
**இலண்டன் நிருவாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம் Anbe sivam

# இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்

LONDON MEIKANDAAR AADHEENAM - U.K. REGD CHARITY TRUST

# உலக சைவப் பேரவை

# WORLD SAIVA COUNCIL



Swami Siva Nandhi Adikalaa
Founder
London Meikandaar Aadheenam
& World Saiva Council

President & Chief Executive: Sivath Thiru Yogananda Adikal

**INTERNATIONAL HEADQUARTERS**
C/o. London Meikandar Adheenam, 72, King Edward Road, London E17 6HZ, U.K.
Tel: 020 - 8531 - 6435 Fax : 1268 - 561805, E-mail-sivayanama@AOL.com Web Site : www.saivismonline.org

திருச்சிற்றம்பலம். 06.08.2006.

சைவ அன்பர் சிவத்திரு V.R. இராமநாதன் அவர்களின் 60 ஆது அகவையின் நிறைவைக் கொண்டாடும் வகையில், விழா ஏற்பாடு செய்துள்ள செய்தி கிடைக்கப் பெற்றோம்.

மக்களாகப் பிறந்தவர்கள் இறைவனை வழிபடுவது தமது தலையாய கடமை என்பதையும், பிற உயிர்கட்கு தொண்டு செய்வதும் தம் கடமை என்பதையும் உணர வேண்டும். அதனை உணரத் தொடங்கினால் தன்னலம் தானே கழன்றுவிடும் [?]. இத்தகைய பெரியோர்களைத் தொண்டர்கள் ... பெரியோர்களைத் தொண்டர்கள் என பெரிய புராணமாகிய திருத்தொண்டர் புராணம் அழைத்தது.

இத்தகைய சிந்தனைகளின் வழி தொண்டு செய்வதில் மென்மேலும் உழைத்த சைவத் தொண்டர் சிவத்திரு V.R. இராமநாதன் அவர்கள் நிறைவு காணும் மணிவிழா சீரும், சிறப்பும் பெற்றுத் திகழ்ந்திட எல்லாம் வல்ல தில்லை நடராசப் பெருமான் திருவடிகளை வணங்கி, வாழ்த்தி அமைகிறோம்.

இவ்வண்ணம்,

இறைபணியில்,

பணிவன்புடன்,
யோகானந்த அடிகள்.
(பி. எஸ். [illegible])

WORLD SAIVA COUNCIL H.Q. (LOND) ANBE SIVAM MEIKANDAAR AADHEENAM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்!"

'கலைமாமணி'

கவிவேந்தர் **கா. வேழவேந்தன்,** பி.ஏ., பி.எல்.,

(முன்னாள் அமைச்சர்)

தலைவர் : *முத்தமிழ் முற்றம்*

உரிமை :- வேந்தர் பதிப்பகம், சென்னை - 4.
வேந்தர் பிலிம்ஸ், சென்னை - 2.

இல்லம் : ☎ 28475976

செல் : 9444450167

78/103, டாக்டர் இராதாகிருட்டினன் சாலை,
மயிலாப்பூர், சென்னை-600 004.

அலுவலகம் : ☎ 28415755

3, பிளாக்கர்ஸ் சாலை,
அண்ணா சாலை, சென்னை-600 002.

நாள் 19. 8. 06.

பெருந்தகையீர்,

வணக்கம். நலம் நாடுக.

ஈழ நாட்டில் இனியவரான [illegible] உயர் [illegible] இராமநாதன் அவர்களின் [illegible] மணிவிழா 31.8.2006 அன்று பெரும் சிறப்போடு [illegible] கொண்டாடுவதற்கு பெரும் மகிழ்வுடன் வாழ்த்திப் போற்றுகின்றேன்.

இதழ்களில் [illegible] தொண்டாற்றில் சிறப்பான அடையாளம், நாட்டு மண்ணை நேசித்தும், பெருந்தமிழ் [illegible] வளர்த்தும், தாய்த் தமிழைத் தனிப்பெரும் [illegible] ஆற்றலால் அரும் பல பணிகள் என்றென்றும் சிறப்புடையச் செய்கின்றன.

செம்மையான உழைப்பால், மேன்மையுறு [illegible] உடைய அவர் வாழ்வு, இன்னும் இன்னும் பல்லாண்டு சிறப்போடு வாழ்க, தொண்டு பலவற்றையும் ஆற்றலோடு [illegible] உறவுகளும் சிறப்புடன் வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

வாழிய மணிவிழா நாயகரின் தொண்டுள்ளம்.
நீடுக அவர்தம் புகழ்மாட்சி.

அன்புடன்,
[signature]
(கா. வேழவேந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

அன்பே சிவம்

# கனடா இந்து மாமன்றம்

## CANADA HINDU MAAMANTRAM

(Not for profit Organization)
(இலாபநோக்கற்ற அறநெறி அம்பலம்)

President: Thampiah Siripathy (Barrister & Solicitor) Phone: 416-759-4500 | Secretary: Nantheeswarar P.Eng. Phone: 416-496-9595 | Treasurer: S. Gowripalan Phone: 416-492-9634

Date:
திகதி: 31-08 2006

## தொண்டின் திருவுருவமான பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க நிறுவனர் வ. இ. இராமநாதன்

மக்கள் இம்மண்ணில் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதே சைவ சமயம் ஆகும். அதற்கு புதுமெருகூட்டி மக்களை நல்வாழ்வு வாழ வைப்பதற்காக இறைவன் திருவருளால் ஏழாம் நூற்றாண்டில் நமது சமய குரவர்கள் தோன்றினர். அவர்கள் அன்று புறச்சமய இருளை நீக்கி நமக்கு நல்வழிகாட்டி மானுடப் பிறவியின் மாண்பினை அறிவுறித்தினர்.

பன்னாலை சைவப் பெரியோர் இரத்தினம் செல்வநாயகி தம்பதிகளுக்கு மகனாக 1946ஆம் ஆண்டு அண்ணன் இராமநாதன் பிறந்தார். அண்ணன் தொடக்கக் கல்வியை கொழும்பிலும் உயர்கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் பயின்றார். பன்னாலையில் இருந்த பொழுது தாயாரின் குல தெய்வமான மயியப்பை வைரவப் பொருமான் கோவிலில் நாள்தோறும் தொண்டு புரிந்து வந்தார். சேக்கிழார் விழாவை பன்னாலை மயியப்பை வைரவப் பெருமான் கோவிலில் அறுபத்து நான்கு நாட்கள் நடத்த சைவப்பெரியார்களோடு சேர்ந்து அண்ணன் அரும் பணிபுரிந்தார்.

பின் கொழும்பில் இருந்த வேளையில் தந்தையாரோடு சேர்ந்து கொழும்பில் சைவ முன்னேற்றச் சங்கத்தை நிறுவி திறம்பட நடத்தி வந்தார். மேற்படிப்புக்காக பிரித்தானியா வந்து அங்கும் பல பணிகளை செய்ய தொடங்கினர். காலச் சூழலாலும், பிறந்த மண்ணில் ஏற்பட்ட இருள் சூழ்ந்த நிலையாலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து பிரித்தானியாவுக்கு வந்தனர். அம்மக்களின் நல்வாழ்வுக்காக 1997 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் அவரும் அவரது உடன்பிறப்புகளும் சைவப் பெரியார்களோடு ஒன்று சேர்ந்து கொழும்பில் நிறுவிய சைவ முன்னேற்றச் சங்கத்தை பிரித்தானியாவிலும் நிறுவினர். சைவம் வளர்ந்தால் தமிழ் வளரும், தமிழ் வளர்ந்தால் சைவம் வளரும் என்பதற்கிணங்க இச்சங்கமூடாகப் பல பணிகளை இளம் தலைமுறையினருக்கு செய்து வருகிறார்.

அண்ணன் இராமநாதன் தான் கல்வி பயின்ற பாடசாலையான மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினராகவும் செயற்குழு உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து பல்வேறு சமூகப் பணிகளை செய்து வருகிறார்.

சைவப் பெரியார் சிவ நந்தி அடிகளார் நிறுவிய மெய்கண்ட ஆதீனம், உலகச் சைவப் பேரவை ஆகியவற்றின் செயலாளராக இருந்து சைவம் உலகமெல்லாம் வளர சைவப் பணி புரிந்து உலகின் பல நாடுகளிலும் சைவ மாநாட்டை நடத்தி எம்மக்கள் உய்ய வழிகாட்ட உதவுவது நாம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

அன்பே சிவம்

# கனடா இந்து மாமன்றம்

# CANADA HINDU MAAMANTRAM

(Not for profit Organization)
(இலாபநோக்கற்ற அறநெறி அம்பலம்)

CANADA HINDU MAAMANTRAM

President: Thampiah Siripathy (Barrister & Solicitor) Phone: 416-759-4500
Secretary: Nantheeswarar P.Eng. Phone: 416-496-9595
Treasurer: S. Gowripalan Phone: 416-492-9634

Date:
திகதி:...........................200....

பேறேயாகும். 1999ஆம் ஆண்டு கனடாவில் ஏழாவது உலக சைவ மாநாட்டை கனடா இந்து மாமன்றத்திரோடு இணைந்து உலகச் சைவப் பேரவை மூன்று நாட்கள் மிகவும் சிறப்பாக நடத்தியது. இம்மாநாட்டினால் கனடா வாழ் இளம் தலைமுறையயினருக்கு பல பயன் பெறக் கூடிய கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் இடம் பெற்றன. உலகின் பல நாடுகளிலும் இருந்து பல நூற்றுக் கணக்கான சைவப் பெரியார்கள். அறிஞர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தது இறைவன் அருளேயாகும்.

அன்பு நெறியில் நின்று சைவ பணி, செந்தமிழ் பணி, சமூகப் பணிகளை ஆற்றி வரும் அண்ணன் இராமநாதன் அவர்கள் அறுபது அகவை நிறைவை முன்னிட்டு, தொண்டின் திருவுருவமான இராமநாதன் அவர்களுக்கு பிரித்தானியா வாழ்மக்கள் மணிவிழாக் கொண்டாடுவதையிட்டு கனடா வாழ்மக்களும், கனடா இந்து மாமன்றத்தினரும் பெருமகிழ்வு அடைகிறோம்.

இவர் செய்யும் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அனைத்துச் செல்வங்களையும், நீண்ட வாழ்நாளையும் கொடுக்க வேண்டுமென்று பிராத்திப்பதோடு திருஞான சம்பந்தப் பெருமான் வாக்கால் வாழ்த்தி அமைகின்றேன்.

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிகுயாது மோர் குறைவில்லை**
**கண்ணில் நல்ல ஃதொறும் கழுமலவளநகர்**
**பெண்ணில் நல்லானொடும் பெருந்தகை இருந்தே'**

வே. நந்தீஸ்வரர்

வே. நந்தீஸ்வரர்
செயலாளர்
கனடா இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION CANADA**

**தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா**

(A Registered Non Profit Organization)

*(Affiliated to City of Toronto)*


Patron
***Dr.Shun K Sunder***
661 942 1036

President
***N.Jeganathan***
905 821 7336

Vice President
***A. Jogaratnam***
416 499 0731

Secretary
***T.Iswarah Kumar***
905 235 2322

Addl.Secretary
***P. Balasingam***
416 916 5262

Asst. Secretary
***R. Raveendran***
416 490 6477

Treasurer
***S.Skantharajah***
416 604 2522

Asst. Treasurer
***Sriranjani Vijendra***
416 429 9784

Committee Members
***Ariyamalar seevaratnam***
416 287 0141

***Balaramani Srigunapalan***
416 289 3255

***V. Ranjan***
905 812 5354

***P. Sukunendran***
905 821 4158

***A. Pathmanathan***
416 438 8059

***K.Pushparajah***
416 444 7142

***T.P.Sivananthamoorthy***
416 289 8821

***K. Jeyandran***
416 472 4200


யூலை 18, 2006.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் அடிகள் வாக்குக்கு ஏற்பச் சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த பணி ஆற்றி வருபவர் திரு. வ.இ. இராமநாதன் அவர்கள்.

அவர், அகவை அறுபதை நிறைவு செய்யும் நன்நாளில், அவரது சேவையைப் பாராட்டி, மணிவிழா எடுத்துச் சிறப்பு மலர் வெளியீடு செய்வதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படுகின்றோம். அவரின் மணிவிழாச் சிறப்புமலருக்கு எமது நல்லாசிகளையும் வாழ்த்துரையையும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்ற பாரதியின் குறிக்கோளுடன், திரு இராமநாதன் என்ற 'மகாஜனன்' இலண்டன் மகாஜனாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் முன்னைய தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து நற்தொண்டாற்றி வருகின்றார்.

திரு இராமநாதன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி, அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும், கல்லூரிக்கும் ஆற்றும் பணிகளும் தொண்டும் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

ந ஜெகநாதன்
தலைவர்

*Mailing Address: Mahajana College OSA - Canada, P.O.Box # 75101, 20 Bloor St. East, Toronto, Ontario, Canada. M4W 3T3 Phone: (416) 840-5264*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

London Borough of
Newham

Town Hall
London Borough of Newham
Barking Road, Eastham,
London E6 2RP. UK.
Tel: 0208 5521860
Mobile: 07944 312 806
Email: paul.sathianesan@hotmail.gov.uk

Mani vizla of Shri. Ratnam Ramanathan

Dear Ram Anna

On behalf of the Newham council and European Tamils, I bring greetings to you and your family on this special day in your life. Also I take this opportunity to thank you personally for the kindness and love that you have shown to me and to the community in London.

60 years in this world is a real blessing from GOD, Compared to the life in Sri Lanka at present. You started your life with GOD and served in our mother land, then when you came to the UK. You brought that sprit and love with you. You are not only an inspiration to your brothers and family but also to the Tamil and Hindu community in Europe.
You became a role model and true leader. The quality, style, commitment, dedication, honesty and genuine approach in every thing, above all you're deep feelings and the real passion made you as a Hero with in our community not only in London but also within Europe. Your humbleness and leadership style earned a lot of respect.

I remember the 25th anniversary of the Saiva Munetra Sangam and its growth every year meeting the needs of the community in many ways, the immediate and urgent services, the wider contribution locally and in back home, your initiatives and personal contributions to make sure things were delivered on time. The role what you play with in the Hindu Temples in UK, bridge building and bringing peace among them is much appreciated and needed for the sustainable future.

The awards what you have received from around the world as a Tamil Hindu community leader for your services is well received. You become a real asset to the Tamil community and the wider community in UK for your professionalism, dedicated tireless service with genuine heart. Today the good LORD has blessed you to celebrate your 60th B day not only with your family but with your friends and the large Tamil community in London. Newham is always your second home and it will be for ever.

I am very proud to be part of this celebration and to have known you as a big brother and friend for the past 21 years. I have seen and enjoyed personally, your real affection, trust, respect and Love. This is the day the Lord has made for you. So be happy, enjoy and cherish on the blessings of GOD. A big thanks you for every thing what you did for our community.

May the good LORD protect, lead, guide and bless you in every thing what ever you wish or dream for ever. And you do every thing in the name of the LORD.

With love

Cllr. D. Paul Sathianesan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
**Saiva Sidhdhantha Manram, Canada**
தோற்றம்(Established): 1-12-1995
1008-50 Elm Drive East, Mississauga, ON, Canada. L5A 3X2
Email: saivamanram@gmail.com Fax/Tel: (905) 566-4822

## சைவத்திரு வ. இ. இராமநாதன் அவர்களுக்கு மணி விழா வாழ்த்து

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

சைவத்தமிழ்ப் பணிகளும், சமூகப் பணிகளும் மற்றும் பல பொது நலப் பணிகளும் ஆற்றிவரும் சைவத்திரு வ. இ. இராமநாதன் அவர்கள் 30–08–2006 இல் அறுபது அகவை நிறைவு பெற்று, மணிவிழா கொண்டாடுகிறார் என்பது அறிந்து, மகிழ்ச்சி அடைகிறோம். அவரும் அவர்தம் துணைவியாரும் பிள்ளைகளும் உடல் நலத்துடன் பல்லாண்டு நீடு வாழ அருள்மிகு சிவகாமியம்மை உடனுறை தில்லை நடராசப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டி வணங்கி உளமார வாழ்த்துகிறோம்.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகரும், அச்சங்கம் தோன்றிய இருபத்தொன்பது ஆண்டுகள் அங்கத்துவ சேவையில், அதன் செயலாளர், தலைவர், பொருளாளர், நிர்வாகசபை உறுப்பினர் என்ற பதவிகளில் இருந்து தொண்டாற்றி வருபவர் சைவத்திரு வ. இ. இராமநாதன் அவர்கள். இலண்டன் சைவமுன்னேற்ற சங்கத்தால் நடத்தப் பெற்று வரும் பணிகள் பலவும் போற்றப்பட வேண்டியவை. இவை எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாய் இருப்பவர் திரு. வ. இ. இராமநாதன் அவர்கள் என்றால் மிகையாகாது. இதன் தாய் நிறுவனமாக கொழும்பில் இயங்கிவரும் சைவமுன்னேற்றச் சங்கத்திலும் பொருளாளராக இருந்து அளப்பரிய சைவப் பணிகள் செய்துள்ள பெருமையும் இவருக்கு உண்டு.

திரு இராமநாதன் அவர்கள் உலக சைவப் பேரவை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், லண்டன் ரூட்டிங் முத்துமாரியம்மன் ஆலயம் போன்ற நிறுவனங்களுடனும் முற்றும் தன்னை இணைத்து தொண்டாற்றி வரும் சிறந்த சமய சமூகசேவையாளர் ஆவார்.

இவரின் ஆன்மீகப் பணிகளையும், பொதுநல, சமூகப் பணிகளையும் பாராட்டி நடைபெறும் மணிவிழா சிறப்பாக நடந்தேறவும், மணிவிழா மலர் செம்மை நலம் பயக்கவும், சைவத்திரு இராமநாதன் அவர்களும், அவர்தம் குடும்பத்தவரும் மண்ணில் நல்ல வண்ணம், எல்லா நலங்களுடன் நீடு வாழவும், இவர்கள் ஆற்றிவரும் பணிகளும் தொண்டுகளும் மேன்மேலும் வளர்ந்து சிறந்து விளங்கவும், மீண்டும் சிவகாமி உடனுறை நடராசப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்து வணங்கி சைவசித்தாந்த மன்றத்தின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் உளம் கனிந்த நல் வாழ்த்துக்களை கூறி அமைகிறேன்.

அன்பே சிவம்

தி. விசுவலிங்கம்

தி. விசுவலிங்கம்
தலைவர், கனடா சைவசித்தாந்த மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Royal Borough of Kingston upon Thames**

## A MESSAGE FROM THE PAST IMMEDAIATE MAYOR 2005/06
## Cllr. Yogan Yoganathan



As one of Ram's friend for the last 20 years, I am well aware of his great enthusiasm, hard work and dedication to provide services to our Tamil community.
He has been and still one of the founder and trustee of the Saiva Munetta Sangam (UK) in excess of twenty years.
I am delighted and it gives me a great pleasure in providing a message on his 60th special birthday celebration and also his achievements in serving our Tamils
of all ages.

I very much admire the hard work, dedication and commitment of Ram's services over the last twenty years, in providing and organising the various events for young boys, girls, children and elders.

It is excellent opportunity to raise awareness to our community, especially encourage all of our younger and second generation because they are our future and also we need the continuity of our aims and goal to keep our culture alive.
Most of all our youngsters can gain confidence that they can also achieve the same.
All of us must get to work together and promote successful development of
Our youngsters.
I am delighted that your organisation continues to grow from strength to strength, providing cultural and recreational activities for young people.
My appreciation goes to participating committee members, families, parents and youngsters, who have worked hard to develop, sustain and enhance our culture and also to help our community integrate locally.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையீர்,

<u>மணிவிழா வாழ்த்துச் செய்தி</u>

அருள்மிகு ஆன்மீகத் தொண்டிலும், அன்புமிகு சமுதாயத் தொண்டிலும், காருண்யம் மிக்க கல்வித் தொண்டிலும் தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டு அரிய சேவை செய்து வரும் அருளாளர் ரத்னம் ராமநாதன் அவர்களுடைய மணிவிழா மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அயல் மண்ணிலும் தமிழர்களைத் தலைநிமிரச் செய்கிறது.

இரத்தினம் ராமநாதன் அவர்கள் தலையைக் கிரீடங்களால் அலங்கரித்துக் கொள்ளவில்லை. புகழால் அலங்கரித்துக் கொண்டவர்.

அவர் நெற்றியைத் திலகத்தால் அலங்கரித்துக் கொள்ளவில்லை; நல்ல சிந்தனைகளால் அலங்கரித்துக் கொண்டவர்.

அவர் தோள்களை மாலைகளால் அழகுபடுத்திக் கொள்ளவில்லை; உழைப்பால் அழகுபடுத்திக் கொண்டவர்.

அவர்தன் கைகளைக் கடகங்களால் சிறப்பித்துக் கொள்ளவில்லை; ஈகையால் சிறப்பித்துக் கொண்டவர்.

அவர்தன் கண்களை மையால் அழகுபடுத்திக் கொள்ளவில்லை; கருணைமிகு பார்வையால் அழகுபடுத்திக் கொண்டவர்.

அவர்தன் உதடுகளைச் சாயத்தால் அலங்கரித்துக் கொள்ளவில்லை; ஈரம் மிக்க சொற்களால் அலங்கரித்துக் கொண்டவர்.

எண்ணமெல்லாம் அன்புமயம்! உள்ளமெல்லாம் சிவமயம்! சொல் எல்லாம் இனிமை மயம்! என்பதுதான் அவருடைய வாழ்வு.

இன்னுமொரு நூற்றாண்டு இன்றென வாழ இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்.

பேராசிரியர் சத்தியசீலன்,
நாவுக்கரசர்,
திருச்சி
தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை 60 நிறைவின்
சிறப்புக் கவிதை
*31082006*

# வாழி... வாழி... பல்லாண்டு...!

சீர் நின்றுலவும் யாழ் நிலத்தில்
  சிறப்பு மிகு சைவத் திருவூ ரில்,
பேர் நின்றுலவும் பெருங்குடியில்.
  பிறந்து வளர்ந்த பெருந்தகையே,
சேர் இராம். இராமநாதன் ஐயா,
  சேவைத் துறையில் நினது புகழ்,
தார் நின்றுலவும் தூயதிருத்,
  தமிழ் போலென்றும் வாழியவே!

நீங்கள் சைவக் கருத்துணர்வில்,
  நின்று புரிந்த சேவைகளை,
நாங்கள் நினைவுகூருங்கால்,
  நயனம் நீரால் நனைகிறதே!
ஓங்கும் உங்கள்உயர் தொண்டில்
  உறவாய், நிழலாய் இணைந்தோரின்
பாங்கு நினைந்து அவர்களையும்,
  பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

உற்றார், பெற்றோர், உறவினரவே...
  உளதித் திரிவர் பலபேர்கள்,
கற்றோரென்ற மமதையிலே –தலை
  கனத்து நடப்பர் சிலபேர்கள்.
மற்றோர்க்கில்லா, மழலையுள்ளம் –உம்
  மகத்துவ சேவைக்கு மணிமகுடம்,
வற்றா ஊற்றாய், வள்ளல் குணங்கள்
  சொத்தாய், பெற்றாய் வாழியவே!

வளரும் சிறுவர் நற்பணிக்கு...
  மழையாய், கதிராய், நிலவாகி,
உளமின்புறவே எங்களையும்
  உன்னத சேவையில் இணையத்
தளமாய் அமைந்த கல்முனையில்,
  நால்வர் கோட்டம், நிலம் நின்று...!
உள்ளம் குளிர வாழ்த்துகிறோம்.
  வாழிய வாழிய... பல்லாண்டு.

-பரதன் கந்தசாமி-
(நால்வர் கோட்டம்)
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Athavan Publications Inc.

201 - 792 Kennedy Road, Scarborough. ON. Canada. M1K 2C8
Tel: 416.615.4646 • Fax: 416.615.2414
E-Mail: tamilsguide@rogers.com

## சிவநெறி காவலர் திரு. இரத்தினம் இராமநாதன்
## வாழ்க! வளர்க!

அகவை அறுபதினை காணும் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்களுடைய சேவையை இந்த உலகம் நன்கறியும். பிறந்த நாட்டில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த மண்ணிலும் அவருடைய சேவை தொடர்கிறது.

இவர் எண்ணிலடங்காத பணிகளை செய்தும், செய்து கொண்டுமிருக்கும் போலித்தனமில்லாத மனிதநேயமுள்ள பெருந்தகை மட்டுமல்ல நல்ல நண்பரும் கூட.

ஆரவாரமில்லாமல் அள்ளி கொடுப்பதும் ஓடி ஓடி ஆன்மீகப் பணிகளும், சங்கப்பணிகளும், பொது நோக்கத்துக்காக உழைப்பதும், நெஞ்சமெல்லாம் தாயகத்தை நிறைத்து வைத்திருப்பதும், நண்பர் இராமநாதனின் தனித்துவங்கள் இவரது சேவைகளைப் பாராட்டி கனடாவில் 2003ம் ஆண்டு தமிழர் தகவல் சிறப்பு விருதை வழங்கி கௌரவித்தது. தகுதியானவருக்கு விருது வழங்கி கனடிய தமிழர் பெருமை பெற்றனர்.

சிவநெறி காவலர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழிற்கும், சைவத்திற்கும் பெருமை சேர்க்க கனடாவில் இருந்து தமிழன் வழிகாட்டி சார்பில் வாழ்த்துகிறோம்.

அன்புடன்
தமிழன் வழகாட்டி செந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடுத்த காரியம் யாவினும் வெற்றி"
IBC
INTERNATIONAL BROADCASTING CORPORATION-TAMIL

3 College Fields, Prince George's Road, Collierswood
London SW19 2PT, United Kingdom
Telephone: +44 (0) 20 8100 0015
Advertisement: +44 (0) 20 8100 0012
Facsimile: +44 (0) 20 8100 0013, (0) 20 8100 0003
Web: www.ibctamil.co.uk Email: radio@ibctamil.co.uk

# மணிவிழா வாழ்த்து

***"மணிவிழா மகுடம் காணும்
இராமநாதன் பணியினால்"***

பொதுப் பணியினால் பலரையும்
அணியெனச் சேர்த்த செம்மல்
துணிவையே துணையாய்க் கொண்டோன்
மணிவிழாக் கண்டான் இன்று
மகிழ்ந்துமே வாழ்த்துகின்றோம்.

ஐபிசி ஊடகம் உருவாக
உள மகிழ்வுடனே மூலதனம்
உவந்தளித்தான் அன்று
உயரட்டும் தமிழ் என்று.

ஆன்மீக விடுதலை
அனைவரும் பெறவென
தலைவராய் தானிருந்து
ஆன்மீக நிகழ்ச்சிகளை
தக்கபடி ஒருங்கிணைத்தான்
பக்கபலமாய்த் தானும் நின்றான்.

ஐபிசி பணியாளர் ஓய்வின்றிப்
பணியாற்றும் வேளைகளில்
உணவுடனே உற்சாகமும் ஊட்டி
உயர்வு பெற முனைந்து நின்றோன்.

ஆண்டுதோறும் ஐபிசி நடத்தும்
மேடை நிகழ்ச்சிகட்கு
தானே வந்திருந்து
தக்கதனைத்தும் செய்வோன்

ஐபிசி ஆரம்பித்த வேளையிலே
அனைவர்க்கும் அறிமுகப் படுத்தி நின்றோன்
ஐபிசி இன் அகவை பத்து ஆகும் போதும்
இன்றுவரை இணைந்து உள்ளான்
என்றும் உள்ளம் கள்ளமில்லான்
இராமநாதன் என்னும் நல்லான்.

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக சிறிகெங்காதரன்

'அறிவகம்'
13 Arcus Road
Bromley
Kent BR1 4NN

## ஒரு மகாஜனனின் மணிவிழா

### *திரு வ இ இராமநாதன்*

திரு வைரமுத்து இரத்தினம் இராமநாதன் அவர்கள் எனது ஊரவர். எமது கல்லூரியின் பழைய மாணவர். எனது ஒன்றுவிட்ட தமையனாரின் நெருங்கிய நண்பர். மிக நீண்ட காலம் அவரோடு பழகுகின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நட்புக்காக நல்லதைச் செய்கின்ற உள்ளம் இவருடையது. நேரம் காலம் பார்க்காது உதவிக்காக ஓடிச்செல்வார். இவர் செல்லுகின்ற இடங்களிலெல்லாம் இவருடைய மனையாளைக் காணலாம். எமக்குக் கிடைத்த அபூர்வமான தம்பதிகள் இவர்கள்

தெல்லிப்பழை – மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் திரு வ இ இராமநாதன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். தந்தையாரின் தொழில் காரணமாக கொழும்பில் நீண்டகாலம் வசித்து வந்த திரு இராமநாதன் எமது மண்ணில் இடம்பெற்ற இனக் கலவரத்தினால தனது சொந்த ஊருக்குத் திரும்பினார். மாகாஜனக் கல்லூரியின் மாணவரான இவர் சமய நம்பிக்கை மிகுந்தவராகவும் சமூகசேவைகளில் நாட்டம் மிக்கவராகவும் விளங்கினார். அதிபரினதும் ஆசிரியர்களினதும் நம்பிக்கைக்குப் பாத்திரரான இவர் எல்லோருக்கும் இனியவர்.

நாங்கள் இருவரும் வாழ்வும் சமூகமும் சம்பந்தமான பல விடயங்களில் நேர்எதிரானவர்கள். அரசியல், சமயம், இலக்கியம் என பலவற்றில் நாம் மிக முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் ஆனாலும் இந்த முரண்பாடுகள் எதுவும் எமது நட்பையோ அல்லது சமூகம் சார்ந்த கடமைகளில் சேர்ந்து வேலை செய்வதையோ என்றும் தடுத்ததில்லை.

1987இல் நான் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை இங்கு உருவாக்க முயன்ற வேளையில் முழுமையாக ஒத்துழைத்தவர் திரு இராமநாதனாவர். அன்று தொடங்கி கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நிர்வாகசபையில் செயற்பட்டு வருகின்றார். நான்கு ஆண்டுகள் பொருளாளராகவும் நான்கு ஆண்டுகள் தலைவராகவும் கடமையாற்றி கல்லூரிக்கும் சங்கத்திற்கும் சிறந்த சேவையாற்றினார் இவர் தலைவராக இருந்த வேளையில் செயலாளரான எனக்கு மிகுந்த ஆதரவாகச் செயற்பட்டவர். இவர் சங்கத்தைத் தலைமைதாங்கிய காலத்தில் மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஒரு சர்வதேச மகாநாட்டினை கொழும்பில் நடாத்த காரணமானார். 2010இல் இடம்பெற உள்ள மகாஜனாவின் நுர்ற்றாண்டு விழாவை முன்னிட்டு இங்கு அமைந்துள்ள நூற்றாண்டு நிதியத்தின் உறுப்பினராகவும் அதனது தற்போதய பொருளாளராகவும் கடமையாற்றுகின்றார்

தனது சமயப் பணிகளிற்காக இங்கும் வெளிநாடுகளிலும் பல கௌரவங்களைப்பெற்ற சைவத்தொண்டன் திரு இராமநாதனின் மனையாள் விஜயலக்சுமி அவர்களும் மகாஜனாவின் பழைய மாணவர். எமது பெருமைக்குரிய மகாஜனாவின் தம்பதிகளை அவர்களின் மணிவிழாவின் போது வாழ்த்துவதில் நானும் மகாஜன சமூகத்துடன் சேர்ந்து பெருமைப்படுகிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

Publisher : N. SIVANANTHAJOTHY

மாதாந்திர செய்தித் சஞ்சிகை ❖ A MONTHLY INFORMATION DIGEST ❖


## மணிவிழாக் காணும் மக்கள் சேவையாளன்

### *சைவத் தொண்டன்*
### *திரு வ இ இராமநாதன்*

தெல்லிப்பழை – பன்னாலையைச் சேர்ந்த திரு வ இ இராமநாதன் அவர்களின் மணிவிழா மிகமிகப் பொருத்தமான ஒருவருக்கு எடுக்கப்படுகின்ற விழா என்றால் அது மிகையல்ல தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இருபத்தேழு ஆண்டுகளின் முன்பாக சைவமுன்னேற்றச் சங்கத்தை இந்த மண்ணில் உருவாக்கி எம்மவர்க்கு சைவ சமயத்தில் நம்பிக்கை உருவாகக் காரணமானார். இந்தச் சங்கத்தில் பல்வேறு பொறுப்புக்களை வகித்த இவர் சங்கம் வெள்ளி விழாவினைக் கொண்டாடிய வேளையில் அதன் தலைவராகக் கௌரவிக்கப் பட்டார்.

தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினை இந்த மண்ணில் உருவாக்கிவர்களில் ஒருவரான திரு இராமநாதன் அதன் தலைவராகவும் நான்கு ஆண்டுகள் கடமையாற்றினார். இந்த மண்ணில் இடம்பெறுகின்ற நல்லவைகள் அனைத்திற்கும் வித்தியாசங்களைப் பொருட்படுத்தாமல் ஆதரவளிக்கின்ற நல்ல உள்ளம் இவருடையது. மரணச்சடங்கின்போது சமயக் கிரியைகளை ஆற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஊடாகத் தொடக்கி வைத்ததில் இவருடைய பங்கு கணிசமானது. இன்றும் தெரிந்தவர்கள் இல்லங்களில் இடம்பெறும் மரணச்சடங்குகளில் இவர் முன்னின்று நடாத்துவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இரண்டு ஆண்பிள்ளைகளின் தந்தையான இவரின் துணைவியார் திருமதி விஜயலக்சுமி அவர்கள் தனது கணவரின் பணிகள் அனைத்திறகும் மகிழ்ச்சியுடன் தோழ்கொடுக்கும் ஒருவராவார்.

தனது சமயப் பணிகளிற்காக இங்கும் வெளிநாடுகளிலும் பல கௌரவங்களைப்பெற்ற சைவத்தொண்டன் திரு இராமநாதன் - விஜயலக்சுமி தம்பதிகளை அவர்களின் மணிவிழாவின் போது வாழ்த்துவதில் தமிழர் தகவல் பெருமையடைகின்றது.

நா சிவானந்தஜோதி
பதிப்பாசிரியர்

31-08-2006


41. Haddington Road, Bromley
Kent BRI 5RG, U.K.
✆ 020 8480 3320


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவத் தமிழால் வாழ்த்துகின்றோம்.

அன்புக்கும் மதிப்பக்கும் உரிய சிவநெறிச்செம்மல் இராமநாதன் அவர்களது மணிவிழாச் செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்சிகொண்டேன். வாழும்போதே பிறர் வாழ, வழிசொல்லும், வழிவிடும் சைவத்திற்கும் தமிழுக்கும், அளப்பரிய தொண்டுகள் செய்யும் திரு.இராமநாதன் அவர்களை கதிர்.துரைசிங்கம் அவர்கள் மூலம் அறிமுகம் பெற்றேன். அதனைத் தொடர்ந்து அவரது சேவைகள் கண்டு உளம்பூரித்தேன்.

கடந்த 2005 ஆம் ஆண்டு தை 06 சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பக்குட்டி அவர்களது முத்துவிழாவினை சிவத்தமிழும் வெற்றிமணியும் இணைந்து சிவத்தமிழ் விழாவாக எடுத்தவேளை லண்டன் மாநகரில் ஈலிங்கன் கனகதுர்க்கா ஆலயத்தில் மேற்படி விழா நடந்தபோது அவ்விழாவில் கலந்துகொண்டு விழாவிற்கு பெருமை சோத்தார். தானக வந்து பணிவுடன் பணி செய்யும் பெருமனம் கொண்டவர். சும்மா ஒரு போது இராதவர் இந்த இந்து இராமநாதன். இவர் இருக்கும் இடம் சிறக்கவும் இவர்தம் தொண்டு பெருகவும் உடல் உள நலம் என்றும் ஓங்கவும் சிவத் தமிழால் வாழ்த்துகின்றோம்.

அன்புடன்<br>
மு.க.சு.சிவகுமாரன்<br>
ஆசிரியர்: வெற்றிமணி,<br>
சிவத்தமிழ்<br>
யேர்மனி<br>
04.010.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழருவி த. சிவகுமாரன் B.A(Hons)
தமிழ் அகம்
23 கரப்பன் காடு, வவுனியா இலங்கை. தொ. இலக்கம்: 0094 24 21032

# சிலர்களில் ஒருவர்

இராமநாதன் ஐயா நினைத்தாலே இனிக்கும் நெஞ்சம். நேசத்தால் உயர்ந்த உள்ளம். மலருக்கும் வாசம் தரும் வண்மை. புயலுக்கும் சக்தி தீர்க்கும் பொறுமை. ஆம் இவைகள் தான் என் நெஞ்சம் நிறைந்த இராமநாதன் அவர்களுடைய பரந்த ஆளுமையின் சில துளிகள்.. நான் என்று இராமநாதன் அவர்களைக் கண்டேனோ அன்றிலிருந்து இன்றுவரை, இனி என்றும அவரது பண்பு, நலன்களுக்கு என்னை பறிகொடுத்துவிட்டேன். என் வாழ்க்கையில் நான் மிகவும் மதிக்கும் பெரியார்களில் முன்வரிசையில் இருப்பவர் இராமநாதன் அவர்கள். உயர்ந்ததோற்றம், அதன்கேற்ற கம்பீரம், சோராது துவளாது காரியமாற்றும் பாங்கு அனைவரையும் அவர்பால் கட்டிப்போட்டுவிடும். நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையில் மானப்பெரிது என்ற வள்ளுவத்துக்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு இவர்தான். இதற்குக் காரணம் அவரது தூய உள்ளம். எல்லாரையும் நேசிக்கும் பூப்போன்ற மனம். வயது முதிர்ந்த குடுகுடு கிழவன், கிழனி முதல் சின்னஞ்சிறிய பிஞ்சுக்குழந்தைகள் வரை இவருக்கு இனிய நண்பர்கள். அவர்கள் அனைவராலும் நேசிக்கப்படும் அற்புதமாக மனிதர் இதற்கு அவரது உளத்தூய்மை, எல்லோரும் நல்லாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்ற நினைப்பு இவைகள்தான். காரணம். நான் இவரைப் பார்த்து வியப்பதுண்டு. எப்படி எல்லோரையும் நேசித்து, எல்லோராலும் நேசிக்கப்பட்ட இந்த ஒருவருக்கு மட்டும் முடிகின்றதென்று இராமநாதன் அவர்கள் எல்லோரையும் புரிந்துகொண்டு அவர்களது பலம், பலவீனங்களோடு அவர்களை ஏற்றுக்கொண்டு அன்பாகப் பழகத்தெரிந்த ஒருஅற்புதமான மனிதர் இவருக்குத் தாங்கள் நண்பர்கள் என்று செல்லிக்கொள்வதாலேயே பெருமைப்படத்தக்க ஓர் உயர்ந்த உள்ளம் கொண்டவர். என் நெஞ்சில் பல வார்த்தைகள் அவரைப்பற்றிச் சொல்ல முட்டி மோதுகின்றன. திரும்பின பக்கமெல்லாம் இனிக்கும் மனிதர்களைப் பார்ப்பது மிக கடினம். தொட்ட இடமெல்லாம் இனிக்கும் தேனைப் போன்றவர் இராமநாதன் 1998 இல் நான் அவரை முதன்முதலில் லண்டன் ஹீத்துரு விமான நிலையத்திற் சந்தித்தேன். அனைவருக்கும் உதவும் இந்த தயாளன் இந்தியாவிலிருந்து வந்த பாலாஜி என்ற ஒரு இளைஞனுக்கு இவர் செய்த உதவிகளும் அவர் காலமானபின் அவரது தாய் தன் மகனாகய் நினைக்கும் அளவிற்கு ஓர் உரிமை பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளத்தக்க ஓர் நேசத்தால் நிறைந்த நெஞ்சத்தைக் கொண்டவர். நல்ல சால்பு நிறைந்த பெற்றோர்கள். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை. இராமநாதன் ஐயாவின் மணிவிழா சிறக்கவும் அவர் வளமுடன் வாழவும் வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச செய்தியாளர் ஒன்றியம்

**President:**
**Anandhi Suriyaprakasam**
Tel: 004520854 37226

**Secretary:**
**Kugathasan Thambipillai**
Tel: 004597250917

Website: HYPERLINK "http://www.iataj.org" www.iataj.org Mail to HYPERLINK "mailto:iataj@iataj.org" iataj@iataj.org

2.10.2006

## "என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்பதையே தன் வாழ்வின் நெறியாகக் கொண்டு வாழ்ந்து வரும் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் அகவை அறுபதை எய்தியிருக்கிறார். அவரின் சிறப்புக்களையும் தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர் ஆற்றும் பணிகளையும் வார்த்தைகளில் வடிப்பது கடினம். பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களுக்கு அவர் ஆற்றும் பணிகளில் மிக முக்கியமானது அவர் துவக்கி வைத்து, மிகச்சிறப்பாகச் செயற்படும் சைவமுன்னேற்றச் சங்கம் ஆற்றும் பணிகள்.

ஈழத்தமிழ் மக்களின் சைவமரபுகளைக் கட்டிக்காத்து வருகிறது சைவ முன்னேற்றச் சங்கம் என்றால் மிகையாகாது. கோவில் திருப்பணிகளிலும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவை செய்து வருகிறார் இராமநாதன் அவர்கள். நாட்டுப்பற்று, மதப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று மிக்கவர் மட்டுமல்ல மனித நேயம் மிக்கவரும் கூட. சுனாமி அனர்த்தத்தின்போது அவர் தாயகம் சென்று அனாதரவாக நின்ற எம்மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி அரும்பணியாற்றினார். இன்றும் அங்கே அவரின் பணிகள் தொடர்கின்றன.

தமிழ் இலக்கியத்திலும் அவர் மிக்க ஈடுபாடுடையவர் புலமைபெற்றவர். வித்துவான் வேலனார் இலக்கிய வட்டத்தின் கூட்டங்களில் அவர் ஆற்றும் உரைகளைக் கேட்டு நான் வியந்து போவேன். இயல் இசை நாடகங்களில் மிக்க ஆர்வம் காட்டும் இராமநாதன் அவர்கள் நம் இன்றய சமுதாயத்தினரை இந்த துறைகளில் ஊக்குவித்தும் வருகிறார். அரங்கேற்றங்களை, கலைநிகழ்ச்சிகளை, இவை எங்கே நடை பெறுகின்றனவோ அங்கே வருகை தந்து கலைஞர்களை ஊக்குவித்து வருகிறார்.

இராமநாதன் அவர்கள் வாழ்வியல் விழுமியச் சிந்தனைகள் கொண்ட ஆன்மீகவாதி. தமிழனின் பண்பாட்டு வழியிலே வாழ்ந்து வருபவர். இனிய சுபாவம் கொண்ட நல்ல மனிதர். அவரிடமிருந்து இன்சொல் அன்றி வேறொன்றும் கேட்டறியோம். அது மட்டுமல்ல அவர் இரு கைகளாலும் அள்ளிக் கொடுக்கும் வள்ளல். He is a beautiful human being.

இராமநாதன் அவர்கள் இன்னும் பல அகவைகள் கண்டு நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

**ஆனந்தி சூரியப்பிரகாசம்**
**தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளை
## Keerimalai Sivan Temple Trust (United Kingdom)
5 Windy Hill, Hutton, Brentwood, Essex, CM13 2HF, UK. Tel: 01277 223981

அறுபது அகவை காணும் அன்பு இராமநாதனுக்கு எடுக்கப்படும் பெருவிழாவை அலங்கரிக்கும இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றைச் சமா்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது உறவினரான அவருடன் இளம்பிராயந்தொட்டே நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தது என் பாக்கியமே. அவரது பெற்றோர் பன்னாலை இரத்தினம் மாமா, மாமி கொழும்பில் இருந்தபோதும் பின் இலண்டனுக்கு வந்தபின்னரும், அவர்களுடைய அன்பிற்குப் பாத்திரமாகும் பேறு எனக்கு இருந்தது.

திரு. இராமநாதனுடைய சமயப்பணி உலகறியும் பிறந்த மண்ணைப் பிரிந்து வாழ்ந்தாலும் பிரித்தானியாவில் மட்டுமல்ல பல உலகநாடுகளிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க அயராது உழைத்துவருகின்றார். அன்பர் தமக்குப் பணிசெய்ய ஆளாக்கிவிட்டாய் பராபரமே.

என்ற தாயுமானவர் வாக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு. இராமநாதன். எத்தனையோ ஆண்டுகளாக எமது மூதாதையருக்கு கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. குறிப்பாக, வருடாந்த உத்சவங்களுக்குள் பத்தாம் திருவிழாவை எமது முன்னோர்கள் கூடிநின்று நடாத்தியுள்ளனர். அதே முறையில், தொடர்ந்து வருடாவருடம் அத்திருவிழாவை

திரு. இராமநாதனுடனும், பிரித்தானியவிலும் நாம் பிறந்த மண்ணிலும் வாழும் பல உறவினர்களுடனும் சேர்ந்து நடாத்த திருவருள் கூடுகின்றது

ஈழத்துப் பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான கீரிமரை நகுலேஸ்வரம் யாழ்குடாநாட்டின் பழம்பெரும் சிவஸ்தலமாக விளங்குகின்றது. மூர்த்தியும் தலமும் தீர்த்த விசேடமும், கீர்த்தியும் மிக்க கீரிமலைச் சிவன் கோயில் பல்லாண்டுகளுக்கு முன்னர் போத்துக்கேயரால் தாக்கப்பட்டது போல மீணடும் அந்நியரின் ஆகிரமிப்பினால் பலத்த சேதமடைந்ததுள்ளது ஆலயத்தை மீளக் கட்டியெழுப்பிப் புனருத்தாரணம் செய்யவேண்டுமெனவும் அம்முயற்சியில் ஓர் அம்சமாக அசையாமணியொன்று இலண்டனிலே உருவாக வேண்டுமெனவும் எமது பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் ஐயா அவர்கள் தனது 1989ஆம் ஆண்டு இலண்டன் விஜயத்தின்போது விடுத்த வேண்டுகோளுக்கமைய ஓர் அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குக் காரணமாயிருந்தவர்களுள் திரு. இராமநாதன் முக்கியமானவர். கீரிமலைச் சிவன் கோயில் அறக்கட்டளையின் பொருளாளராகத் தொடாந்து அவர் பணியாற்றி வருகின்றார்.

கீரிமலைச் சிவன் கோயில் படிப்படியாகப் புதுப்பொலிவுடன் உருப்பெறுவதை நேரில் சென்று பார்வையிட்டும், ஐயா அவர்கள் இந்நாட்டிற்கு வரும்பொழுது அவருடன் பலவிதங்களில் ஒத்துழைத்தும் திரு. இராமநாதன் ஆற்றும் சேவை அளப்பரியது.

அவர் நீடுழி வாழ்ந்து தொண்டர் திலகமாக இன்னும் பல்லாண்டு திகழ வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அவருக்கும் அவரது குடும்பத்தினரும் எனது பணிவன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

**வைத்திய கலாநிதி**
**மனநல மருத்துவர்**
**கௌரவ செயலாளர், கீரிமலைச் சிவன் கோயில் அறக்கட்டளை (ஐ.இ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
பன்னாலை நகர் தந்த பைந்தமிழ்ச்
செல்வன் வ.இ.இராநமதன் அவர்களின் அகவை அறுபதின் போது

பன்னாலை நகர் தந்த பைந்தமிழ்ச் செல்வா!
பத்தாறு அகவைதனில் பக்குவமாய் அடிபதித்தீர்
பக்தியுடன் கூட பல்கலையும் கற்றுணர்ந்தீர்
பொன்மனச்செம்மலே ராமண்ணா நீ வாழ்க!
சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஸ்தாபகனே
சத்தியவந்தனே வாழ்வாய் நீ பல்லாண்டு

இரத்தினம் தந்த இளமுத்தே ராமண்ணா!
செல்வநாயகியின் செங்கனியே குலக்கொழுந்தே
பத்மநாதனின் பாசமிகு தம்பியே!
லோகநாதனின் உடன்பிறப்பே ராமண்ணா!
தேனாக சுவை கொடுக்கும் விஜியின் குலத்தலைவா
பவகுகனின் தந்தையே பல்லாண்டு நீ வழ்க!

தமிழையும் சமயத்தையும் நின் இரு கண்களாக்கி
தரணியெங்கும் தடம்பதிக்கும் தலைவா ராமண்ணா
தமழ் பற்று மிக்கவனே! தன்னலமற்றவனே
தமிழ் மக்கள் நலம் காக்க தனஉதவி புரிபவனே!
தனித்திலங்கு ஜோதியாய் தங்கமாய் மிளிர்பவனே!
பண்புசால் பகலவனே பல்லாண்டு நீ வாழ்க!

ஞானவைரவரின் கூட்டுப்பிரார்த்தனையில்
ஞான ஒளி பெற்ற ஞாலம் புகழ் நாயகனே!
பாலனாய் நான் இருக்க எம் குலவிளக்கிற்கு
பக்குவமாய் நீர் செய்த பலசேவை என்றென்றும்
பசுமரத்தாணியாய் என்நெஞ்சில் நிலைத்திருக்கும்
பன்னாலைப் பசும்பொன்னே பவா அண்ணா நீ வாழ்க!

உற்றாரை உறவுகளை இழந்து துடிப்பவர்க்கு
உற்றவராய் உறுதுணையாய் கைகொடுத:து நிற்பவதே
உயர்ந்த உள்ளமும் உன்னத இலட்சியமும்
உம்வகுலவழிவந்த உயர்வான குணம் தானே
உத்தமனாய் சத்தியனாய் உலகோர் உவப்ப
உளமகிழ்வுடனே வாழ்க நீ பல்லாண்டு!

ஆனந்த இல்லத்தின் அருட்சுடராய் வந்தவனே
அகவை அறுபதிலும் இருபதாய்த் தெரிபவனே
அமைப்பக்கள் ஊடாக நின்சேவை தொடரட்டும்
அவனியெங்கும் இனம் மலர நின்தடங்கள் பதியட்டும்
அண்ணா உன்பணி நாளும் வளரட்டும்
ஆயிரம் பிறைகண்டு வாழிய நீ பல்லாண்டு!

உடன்பிறவா சோதரன்
சண்முகம்-குகராஜா
பன்னாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராமநாதா! உன் சேவைக்காலம் ஓர் பொற்காலம்!!

ஆம்!

ஆண்டுகள் இரண்டில் வெள்ளிவிழாக் கோலம் காண இருக்கும்கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தில், நீ கடந்த பத்தாண்டு காலமாக ஆற்றிய அளப்பரிய பணி, சங்கத்தின் கால் நூற்றாண்டு காலத்திலோர் பொற்காலம் எனக்கூறின் அது மிகையாகாது.

உன் சேவைக் காலத்தில்தான் எமது சங்கம் நால்வருக்கு திருக்கோயில் அமைத்தும், சிலை வடித்து பிரதிஷ்டை செய்தும், சங்கப்புகழ் பரப்பும் தொண்டரணியை ஆரம்பித்தும், நால்வர் கொள்கை நெறி பரப்பி நானிலம் போற்றும் "நால்வர் நெறி" மலர் வெளியிட்டும், பௌர்ணமித் திங்களில் பிடி அரிசி சேர்த்து பிணியாளருக்கு உணவளித்தும், இல்லங்கள் தோறும் இல்லபஜனை செய்தும், தெருவெல்லாம் திருவெம்பாவை ஒலிக்கச் செய்தும், சங்கத்தின் அங்கத்தவர், ஆதரவாளர் இல்லத்தில் நடைபெறும் நன்மை, தீமைகளில் கலந்து ஆவன செய்ததுமான பணிகளைச் செய்தோம். இதுமட்டுமல்ல இத்தனைக்கும் மேலாக உன் சேவைக்காலத்தில் தான் சங்கத்துக்கென ஓர் தனிப்பணிமனை இல்லையென்ற குறை நீங்கி ஓர் புது மண்டபம் அமைக்கவும் செய்தோம், என்று எண்ணும்பொழுது உண்மையிலேயே உன் தன்னலமற்ற தியாக வாழ்வை எண்ணிப் பெருமைப்படுகின்றோம்! பூரிப்படைகின்றோம்!!

நீ பசி என்றும் பாராது, நடுநிசிவரை விழித்திருந்து உழைத்த உன் தொண்டால் உருவான சங்கக் கட்டடம் எமது உடன் பிறப்பினரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, இதுவரை காலமும் சங்கப்பணிக்கு அம் மண்டபம் பயன்படாமலிருப்பதைவிட்டு உன் உள்ளம்படும் வேதனைக் குமுறலை நாம் எம் மனக்கண்முன் காணக்கூடியதாக இருக்கிறது. இச் சோகத் துயர் உன்னைமட்டுமல்ல, மானமுள்ள சைவத் தமிழ் மக்கள் அத்தனை பேரையுமே கவலையடையச் செய்துள்ளது: கண்ணீர் வடிக்கச் செய்துள்ளது.

கல்லும், மண்ணும், சுண்ணும்பும், சீமெந்தும் மட்டுந்தான் கலந்து கட்டிய கட்டடம் என்றிருந்தால் இத்தனை தூரம் கவலைப்பட்டிருக்க மாட்டோம். ஆனால் இதற்கு மேலாக ஏழை எளிய பாட்டாளி மக்களின் அன்றாட உலைக்கு இடும் பிடி அரிசியோடு, கண்ணீரும் செந்நீரும் கலந்த உழைப்பின் ஊதியத்திலே உருவான கட்டடம் என்று எண்ணும்பொழுது தான் பெருவேதனைப்படுகிறோம்; புண்பட்ட நெஞ்சமாகின்றோம்.

கட்டிய கட்டடம் உயிரோடு இருக்க, சங்கப் பணிகளையும் பாடசாலையையும் பணங் கொடுத்து வாடகை மண்டபங்களிலே நடாத்த வேண்டியும், திருவெம்பாவைத் தினங்களிலே தெருவெல்லாம் சிவநாமம் ஒலிக்கச் செய்யும் சிறுர்கள் படுக்க இடமின்றி, வீட்டுக்கு வீடு விறுந்தை ஓரங்களிலே பனியென்றும், குளிரென்றும் பாராது படுத்துறங்கும் பரிதாபத் துயர், பாவிகளை சும்மா விடாது.

"ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" என்ற முது மொழி என்றும் வீணாகாது. கேட்பார் மதி கேட்டு தனது இனத்தின் சமயத்தின் அருமை பெருமையை மாற்றானுக்கு அடகு வைப்பவர்கள் தாங்கள் செய்த தவறுகளுக்காக ஒருநாள் வருந்தி இரத்தக் கண்ணீர் வடிக்கும் காலம் வரத்தான் செய்யும். இது வரலாறு எமக்குப் புகட்டும் பாடம்.

இத்தனைக்கும் நாம் கட்டுண்டோம், பொறுத்திருப்போம். காலங்கள் மாறும், கவலைகள் தீரும். காயும் கனியாகும். அதுவரையும் எமதருமைத் தொண்டனே! நீ கவலையின்றி கடல் கடந்த நாட்டுக்குச் சென்று வா! வென்று வா! என்றொருநாள் நீ திரும்பி வரும்பொழுது, உன் உழைப்பால் உருவான மண்டபம் எமக்காகி, அதில் உன் திருமணக் காட்சியை கண்டு களிப்போம்!!.

பிரிவால் துயரும் - உயர்வால் பெருமையும் அடையும் எமது சங்கத்தினர்; "செல்லும் நெறியெல்லாம் நால்வர் நெறியாகி
வெல்லும் வழி கொண்டு வாரீர் !!

என எல்லாம் வல்ல கொம்பனித் தெரு ஸ்ரீ சிவ சுப்பிரமணியப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து வாழ்த்தி வழியனுப்புகின்றோம்.

அலைகடல் பிரிந்தாலும் - அன்பு மறவோம்

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனம் நிறைந்த நன்றிகள்

இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய அறங்காவலர்கள் நிர்வாகிகள், சிவாசார்யர்களுக்கு

வாழ்த்துரை, பாராட்டுரை, ஆசியுரை வழங்கிய பெரியவர்கள், நண்பர்களுக்கு

விழாவிற்கு வந்து சிறப்பித்த அன்பர்களுக்கு


விழாவின் வெற்றிக்கு உதவி செய்த நண்பர்களுக்கு

வாசன் அச்சகத்தினருக்கு

மேலும் மறைமுகமாகவும், நேரிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் தந்த அன்பர்களுக்கு எமது நன்றிகள்.

**இப்படிக்கு**
**மணிவிழாக்குழுவினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய கும்பாபிசேகத்தன்று கலசம் 50 ஆவது இதழை நாகநாதசிவம் சிவாசாரியார் வெளியிட்டு வைக்கின்றார்



இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய கும்பாபிஷேகத்தின் போது IBC தமிழ்ஒலிபரப்பு நேர்முக வர்ணனை செய்கிறார் (2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதனின் பெற்றோர் காலஞ்சென்ற
இரத்தினம் செல்வநாயகி தம்பதிகள்



இராமநாதன் சகோதரர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை நகுலேஸ்வர ஆதீன முதல்வர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
இராமநாதன் குடும்பத்தாருடன் இல்லத்தில்



"ஆனந்த இல்லம்" பன்னாலை தெல்லிப்பளை இராமநாதனின் அன்னை இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் பிள்ளையார் பட்டி சிவசிறீ பிச்சைக் குருக்கள் ஆசீர்வாதம் வழங்குகிறார்




இலண்டன் மெய்கண்ட ஆதீன முதல்வர் சிவனடி கலந்த தவத்திரு சிவநந்தி அடிகளாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இராமநாதன் இல்லத்தில் குருஜி ஸ்ரீஹரிதாஸ் சுவாமிகள்
வருகையும் பூசையும் 1987




சுவாமி குருஜி ஹரிதாஸ் சுவாமகள் சைவ முன்னேற்றச் சங்கத்தின்
நிகழ்ச்சிக்கு வருகை தந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர் மான்புமிகு Stephen Timms MP சைவமுன்னேற்ற சங்க மண்டபத்தில் கௌரவித்தல் (2005)



அமைச்சர் மான்புமிகு Stephen Timms MP சைவமுன்னேற்ற சங்க மண்டபத்தில் உரையாற்றுகின்றார். (2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கல்முனையில் சைவ முன்னேற்றச் சங்க நால்வர் கோட்டம சிறுவர்
இல்லக்கட்டிடத்திற்கு அடிக்கல்நாட்டுகின்றார் (2005)



இலங்கை கல்முனையில் சைவ முன்னேற்றச் சங்க நால்வர் கோட்டம்
சிறுவர் இல்லஅடிக்கல்நாட்டு வைபவத்தில் திரு. பரதன் கந்தஸாமியுடன் (2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துசமய கலாசார அமைச்சர் மான்புமிகு தேவராஜ் இராமநாதனுக்கு
சைவ துரந்தரர் பட்டம் வழங்கி கௌரவித்தல் (1993)





இலங்கை இந்துசமய கலாசார அமைச்சர் மான்புமிகு தேவராஜ்
இராமநாதன் தம்பதிகளை கௌரவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சைவமுன்னேற்றச் சங்க பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவில் சிவனடி கலந்த சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் (1987)



பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரால் கௌரவிக்கப் படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளுடன்



இறைபதமெய்திய புலவர் கீரனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைபதமெய்திய ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களுடன்



யோகி ராம் சுந்தரலிங்கத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலண்டனில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு எடுக்கப்பட்ட முதல் விழாவில் உரையாற்றுகின்றார்




இலண்டனில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு எடுக்கப்பட்ட முதல் விழாவில் அமரர் திரு. சபாபதிப்பிள்ளை அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் சிவயோகம் முத்தமிழ் விழாவில் சிவநெறிச் செம்மல் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுதல்- 2000



இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் "சிவநெறிச் செம்மல்" பட்டம் வழங்கி கௌரவித்தபின் தாயாரிடம் ஆசீர்வாதம் பெறுகின்றார் (2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைக் கல்முனைப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பிரித்தானிய சைவமுன்னேற்றச்சங்கம் அனுப்பிய நிவாரணப் பொருட்களை விநியோகித்தல்




இலங்கைக் கல்முனைப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பிரித்தானிய சைவமுன்னேற்றச்சங்கம் அனுப்பிய நிவாரணப் பொருட்களை விநியோகித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரபல பாடகர் உன்னகிருஷ்ணனுடன் இராமநாதன் தம்பதிகள்



பிரபல பாடகர் பத்மஸ்ரீ யேசுதாசுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதன் தனது 21ஆவது பிறந்ததினத்தன்று
1967



கொழும்பில் வணிக முகாமைத்துவ டிப்ளோமா சான்றிமழ் பெறுதல்
1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரான்ஸில் நடைபெற்ற உலகசைவப் பேரவையின் சேக்கிழர் விழாவில் உரையாற்றுகின்றார்



அவுஸ்திரேலியா சிட்னி முருகன் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா தமிழ் வானொலி இளையபாரதியுடன்



கனடாவில் நடைபெற்ற உலகச் சைவப்பேரவையின்
ஏழாவது உலகச் சைவமாநாட்டின் போது 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுடன்




தமிழ்நாடு தஞ்சாவூரில் நடைபெற்ற உலகச் சைவப்பேரவையின் ஆறாவது உலகச் சைவமாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களுடன் 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. இராமநாதன் கல்வி கற்ற தெல்லிப்பழை மகஜானக் கல்லூரி



தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு பொ. கனகசபாபதியுடன் இராமநாதன் தம்பதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு சைவமுன்னேற்றச்சங்க மண்டப கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவின் போது




கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க வெள்ளிவிழாவின் போது உரையாற்றுகிறார்
1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவனடி கலந்த சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியாரிடமும், சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளிடம் ஆசிபெறுதல்



சுவாமி தந்திர தேவாவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனம் 26 வது குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரசாரிய சுவாமிகளுடன்




திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீன கட்டளைத் தம்பிரான் சுவாமிகள்
முனைவர் ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரானுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் வித்துவான் க. ந. வேலன் மற்றும் திருமதி. விஜயலட்சுமி வேலன் தம்பதிகளுடன்



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பூட்டன் ராஜ்குமார் பாரதி அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவ முன்னேற்றச் சங்கத்தின் 27ஆவது ஆட்சிக்குழுவின் தலைவராக நியமனம் பெற்ற திரு. து. கனகசபையிடம் தலைமைப் பதவியை கையளிக்கிறார்.



இராமநாதன் இல்லத்தில் நடைபெற்ற சைவ முன்னேற்றச் சங்க மாதாந்த பூசையின் போது முன்னாள் சங்கத் தலைவர் திரு. கு.சிதம்பரப்பிள்ளை அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய கும்பாபிஷேக மலர் பெறுதல் 2005



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நிர்வாக சபைத் தலைவர் திரு. சீ.சம்பத்குமார், கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஆகியோருடன் புதினம் சிறப்பு மலர் வெளியீட்டு வைபவத்தின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் சுவாமிநாரயணன் ஆலய முதல்வரிடம் ஆசிபெறுதல்



ஹவாய் ஆதீன முதல்வர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடா வாழ் பன்னாலை விளிசிட்டி மக்கள் நடாத்தய பராட்டு விழாவில்
கீரிமலை சிவஸ்ரீ நா. குமாரசாமிக்குருக்களால் கௌரவிக்கப்படுதல்



கனடாவில் இளங்கலைஞர் மன்றத்தின் தலைவர்
திரு.திருமதி. பொன். சுந்தரலிங்கம் தம்பதியினரால் கௌரவிக்கப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இல்போட் செல்வ விநாயகர் ஆலயத்தின் முதலாவது தேர்த்திருவிழாவின் ஈழத்தைச் சேர்ந்த தமிழருவி த. சிவகுமாரன் அவர்களுடன்




ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலய ஆவணி மாத இரதோற்சவத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமநாதனின் 51 ஆவது பிறந்த தினத்தன்று லண்டனில்
அமரர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் வாழத்திக் கௌரவிக்கின்றார். 1997



கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகா
கும்பாபிஷேக நிகழ்வில் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் இராஜதுரையுடன் 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாபிரிக்கா டேர்பன் நகரில் நடைபெற்ற ஐந்தாவது உலகச் சைவ மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களுடன். 1996




தென்னாபிரிக்கா டேர்பன் நகரில் நடந்த ஐந்தாவது உலகச் சைவ மாநாட்டில் பங்குபற்றிய பேராளர்களுடன் 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மலேசியாவில் நடைபெற்ற உலக சைவப் பேரவையின் ஒன்பதாவது மாநாட்டில் உரையாற்றுகின்றார்



தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி வருடாந்த மகாஜன நாள் 2005இல் உதைபந்தாட்ட பயிற்சியாளர் திரு புவனேந்திரா மற்றும் செயலாளர் திரு ஸ்ரீ கெங்காதரன் ஆகியோருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை கொழும்பில் நடைபெற்ற மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் சர்வதேச மாநாட்டில் உரையாற்றுகிறார். 2003



மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர்கள் திரு. கனகசபாபதி, திரு. சுந்தரலிங்கம் திரு. நாகராஜா ஆகியோருடன் சர்வதேச மாநாட்டில் 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் பாராட்டு வைபவம்
இலண்டன் சிவன் கோயில் ஆலய மண்டபத்தில்




சுவிஸில் நடைபெற்ற உலக இந்து தமிழ் கலாசார மாகாநாட்டில்
உரையாற்றுகின்றார். 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பிரார்த்தனையில் 2003




கனடா சைவசித்தாந்த மன்ற திருமுறை விழாவின் போது மன்றத் தலைவர் திரு விசுவலிங்கம் தம்பதிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வின்ஸர் மாளிகை வாசலில் இராமநாதன் தம்பதிகள் (1976)



இராமநாதன் தம்பதிகள் (2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதிர் துரைசிங்கத்தின் காதோடு காதாக புத்தக வெளியீட்டு விழாவில்



ஐ.பி.சி. தமிழின் மெல்லினிய மாலை நிகழ்வில்
பாடகர் ஹரிகரன், நடிகை குஷ்பு, ஆகியயோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவ முன்னேற்றச் சங்க வெள்ளிவிழாவின்போது
டாக்டர், திருமதி. சரஸ்வதி ராமநாதன் தமிழருவி சிவகுமாரன் ஆகியோருடன்



ஈழத்தைச் சேர்ந்த செஞ்சொற்செல்வா ஆறுதிருமுருகன்
தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவுமதி, ஆகியேருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கனடா தமிழர் தகவல் வருடாந்த நிகழ்வில் உரையாற்றுகின்றார்



சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு வருகை தந்த சைவப்புலவர் செல்லத்துரை தம்பதிகள், புதல்வர் திரு நாவரசன் அவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய கும்பாபிசேகத்தின் போது
புதினம் ஆசிரியர் திரு ராஜகோபால் அவர்களுடன்



சைவ முன்னேற்றச் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவனடி கலந்த சுவாமி சச்சிதானந்தா அவர்களுடன்



சிவனடி கலந்த சுவாமி சாந்தானந்தா அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் இந்திரகுமரின் இளவரசி டயனா வஞ்சிக்கப்பட்டாரா?
நூல் வெளியீட்டின்போது




சிவயோகம் முத்தமிழ் விழாவில் சிவநெறிச் செம்மல்
பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படல் 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரம் ஆலய தீட்சிதர் நாகாபரணபூஷண குடும்பத்தினரோடு




சங்கத்தின் வெள்ளிவிழாவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கீரிமலை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளையினரால் லண்டனில் கௌரவிக்கப்படுகின்றார்.



பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது தைப் பொங்கல் வழிபாட்டுப் பூசை திரு. சதாசிவம் ஆனந்ததியாகர் இல்லத்தில் 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா தமிழர் தகவல் நியைத்தினரால் '**தமிழர் தகவல் விருது 2003**'
வழங்கிக் கௌரவிக்கப்படுதல்



கனடா தமிழர் தகவல் அமைப்பினரால் **"தமிழர் தகவல் விருது 2003"** வழங்கி
கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலசம் சஞ்சிகை இருபத்தைந்தாவது மலர் வெளியீட்டின்போது





கலசம் 25வது மலர் வெளியீட்டு விழா வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையினர் தலைவர் திரு நமசிவாயம் அவர்கள் தலைமையில் கொழும்பில் இராமநாதன் தம்பதிகளுக்கு பாராட்டு (2004)



திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபைத் தலைவர் சிவத்திரு நமசிவாயம் அவர்கள் சங்கத்திற்கு வருகை தந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சங்க ஆண்டு விழாவில் சுவாமி தண்டபாணி ஓதுவார் கௌரவிக்கப்படுகின்றார்.




மொரீசியஸ் நாட்டில் நடைபெற்ற எட்டாவது உலகச் சைவ மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களுடன் 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ விருதுகள்

**'சைவ துரந்தரர்'** எனும் பட்டம் 12.12.1993 இலங்கையில் இந்து சமய கலாச்சார இராசாங்க அமைச்சினால் வழங்கப்பட்டது.

**'சிவநெறி காவலர்'** எனும் பட்டம் 23.09.1996ஆம் ஆண்டு உலக சைவப்பேரவையின் 5வது உலக சைவ மாநாட்டில் தென் ஆபிரிக்க டேபன் நகரில் வழங்கப்பட்டது.

**'சிவநெறி செம்மல்'** எனும் பட்டம் 01.04.2000ஆம் ஆண்டு சிவயோகம் அறக்கட்டளையினரால் வழங்கப்பட்டது.

**'தொண்டர் திலகம்'** எனும் பட்டம் 17.12.2000ஆம் ஆண்டு கொழும்பு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சேவா நம்பிக்கை நிதியத்தினரால் வழங்கப்பட்டது.

**'தமிழர் தகவல் விருது–2003'** 16.02.2003 அன்று கனடா தமிழர் தகவல் நிலையத்தினரால் வழங்கப்பட்டது.

**'சிவநெறிச் செல்வர்'** எனும் பட்டம் 11.02.2003ஆம் ஆண்டு கனடா வரசித்தி வினாயகர் ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது.

**'சமூகசீலர் எனும்'** பட்டம் 16.07.2006 அன்று பிரித்தானிய திருக்கோயில் ஒன்றியத்தின் ஒன்பதாவது சைவ மாநாட்டில் வழங்கப்பட்டது.

**'சைவ நெறிக்காவலர்'** எனும் பட்டம் 08.10.2006 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவின்போது பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vasan Printer 0208 646 2885